# உள்ளாட்சி அரசாங்கப் பிரதிநிதிகளின் குரல்




ஏற்பாடு

தமிழக ஊராட்சி அரசாங்க பெண் தலைவர்கள் கூட்டமைப்பு
தமிழ்நாடு ஊராட்சித் தலைவர்கள் கூட்டமைப்புகளின் சம்மேளனம்
தமிழ்நாடு தலித் உள்ளாட்சி மன்ற தலைவர்கள் கூட்டமைப்பு

FOCUS

# காஞ்சிபுரம் மாவட்டம் புனித தோமையார் மலை ஒன்றியம், மதுரப்பாக்கம் ஊராட்சித் தலைவர் அமுதா சந்தித்த வன்முறைகள்

தாம்பரத்தை அடுத்த மதுரப்பாக்கம் ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி. அமுதா வேல்முருகன் என்பவர் ஒரு தலித் இனத்தை சேர்ந்தவர். கடந்த 22.7.2012 அன்று நள்ளிரவில் சமூக விரோத கும்பல் ஒன்று அத்துமீறி அவரது வீடு புகுந்து அவரைக் குடும்பத்துடன் கொலை செய்ய முயற்சி நடந்துள்ளது. இதையொட்டி வெளியான பத்திரிகை செய்தி பார்த்து உண்மை அறியும் குழு ஒன்று அமைக்கப்பட்டது.

## உண்மையறியும் குழுவினர்

N. சித்ரா, ஒருங்கிணைப்பாளர், மனித உரிமை மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி அமைப்பு

P. தமிழரசி, ஒருங்கிணைப்பாளர், மனித உரிமை மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி அமைப்பு

## உண்மை அறியும் குழுவினர் சந்தித்த நபர்கள்

1. **அமுதா,** ஊராட்சி தலைவர்
2. **வேல்முருகன்,** அமுதாவின் கணவர்
3. **சுப்பிரமணி,** வேல்முருகனின் நண்பர்
4. **சாவித்திரி,** துணைத் தலைவர் மற்றும் அவரது கணவர் புருஷோத்தமன்
5. **நாகூரான்,** வார்டு உறுப்பினர், விவசாயக் கூலி
6. **பழனி,** முன்னாள் ஊராட்சித் தலைவர்
7. **லஷ்மி,** பழனியின் மனைவி
8. **தனபால்,** வார்டு உறுப்பினர்
9. கோவிலஞ்சேரி காலனி மக்கள் ஒரு சிலர்
10. மதுரப்பாக்கம் பொது மக்கள் ஒரு சிலர்

காவிலஞ்சேரி, மூலச்சேரி, மதுரப்பாக்கம் ஆகிய 3 கிராமங்களை உள்ளடக்கிய இவ்வூராட்சியில் வன்னியர், நாயுடு, கிராமினி மற்றும் பட்டியல் பழங்குடியினர் (SC) வசிக்கிறார்கள். 4000 மக்கள் தொகை கொண்ட மதுரப்பாக்கத்தில் வன்னியர் நாயுடுக்கள் அதிகளவு உள்ளதால் தாழ்த்தப்பட்ட குடும்பங்கள் 300 மட்டுமே. வாக்களிக்க தகுதி பெற்றவர்கள்.

தனபால் கிராமினி,நாகூரான், SC, அலமேலு, SC, வெங்கடேஷ், வன்னியர், வேலு, SC, மனோகரன், வன்னியர், தேவகி சீனிவாசன், வன்னியர், சுரேஷ், வன்னியர், சாவித்திரி புருஷோத்தமன், வன்னியர் (துணைத் தலைவர்)

இவ்வூராட்சியில் தண்ணீர் தொட்டிகள் 4, ஒரு நூலகம், ஒரு பால்வாடி, கை பம்பு 7, கிணறு 3, தெருவிளக்கு 21, கோவிலஞ்சேரி ஆறு, 3 குளங்கள் ஆகியவை உள்ளன. இவ்வூராட்சி பசுமையானதாகும். இவர்களின் தொழில் விவசாயம் மற்றும் சிறு தொழிற்சாலையில் வேலை செய்வது, ஆரம்பப்பள்ளி மட்டுமே இங்கு உள்ளதால் உயர்நிலை பள்ளிக்கு இவர்கள் மாம்பாக்கம்தான் செல்ல வேண்டியுள்ளது. கல்வியில் முன்னேறி வருகிற இந்த கிராமத்தில் படித்தவர்கள் 40 சதவீதம் மட்டுமே. அமுதா, இரண்டாவது முறையாக ஊராட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இவரது வயது 28. படிப்பு கூஹ, 2001ஆம் ஆண்டு ஊராட்சித் தலைவராக பழனி என்கிற வன்னியர் இருந்தார். அப்பொழுது அமுதா வார்டு உறுப்பினராக இருந்துள்ளார். 2006ம் ஆண்டு ஊராட்சி தேர்தலில் பொது – பெண் என்ற ஒதுக்கீடு முறையில் அமுதாவும் முன்னாள் ஊராட்சி தலைவரின் மனைவி லஷ்மியும் போட்டியிட்டு அவரை விட 37 ஓட்டு வித்தியாசத்தில் அமுதா வெற்றி பெற்றுள்ளார்.

இதனால் ஆதிக்க சாதியினருக்கும் முன்னாள் ஊராட்சித் தலைவர் பழனிக்கும் அமுதாவுக்கும் தகராறு ஏற்பட்டுக்கொண்டே இருந்துள்ளது. இதனால் கிராம சபைக் கூட்டத்தைக்கூட போலீஸ் பாதுகாப்புடன் நடத்த வேண்டிய சூழ்நிலை. அமுதா பல இடைஞ்சல்களையும் தாண்டி மதுரவாக்கம் ஊராட்சிக்கு பாலம் கட்டி கொடுத்தது, சுடுகாடு வழி பாலம் கட்டி கொடுத்தது, சாலை வசதி, தண்ணீர் வசதி, தெருவிளக்கு, ரேஷன் கடை, பேருந்து நிலையம், நூல் நிலையம், 500 குடிமனைப் பட்டா வாங்கி கொடுத்தது உள்ளிட்டவைகளைச் செய்து மக்கள் நலனைப் பாதுகாத்துள்ளார். இக்காலக் கட்டத்தில் 2011ல் மீண்டும் உள்ளாட்சித் தேர்தல் அறிவிக்கப்பட்டது. இதில் மீண்டும் அமுதாவே ஊராட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இதனால் ஆதிக்க சாதியினரின் கோபம் மேலும் அதிகரித்துள்ளது. ஒரு தலித் பெண் ஊராட்சித் தலைவராக இரண்டு முறை தேர்ந்தெடுக்கப்பட்டதால் பழி வாங்கும் எண்ணம் மேலோங்கிய காரணத்தால் அவரைக் கொலை செய்ய முயற்சி நடந்துள்ளது.

### அமுதா, ஊராட்சித் தலைவர்

நான் BA படித்துள்ளேன். என் கணவர் வேல்முருகன் 10வது வரை படித்துள்ளார். ஒரு மகன், வெற்றிவேல் வயது 7. ஒரு மகள், தமிழரசி வயது 11. சொந்த வீடு மட்டும் தான். கணவர் நிலத் தரகராக இருக்கிறார். அவர் ஒரு கபடி வீரர். நிறைய பரிசுகள் வாங்கியுள்ளார். முன்னாள் ஊராட்சித் தலைவர் பழனி மனைவி லஷ்மியும் நானும் மீண்டும் தேர்தலில் போட்டியிட்டோம். தேர்தல் முடிவடைந்தவுடன் ஓட்டு எண்ணிக்கை நடைபெற்றது. இதில் யார் வெற்றி பெற்றார்கள் என்று அறிவிக்கவில்லை, நான்தான் வெற்றி பெற்றேன் என்ற சலசலப்பு இருந்தது. உடனே நானும் என் கணவர் முருகவேலும், உறவினர்கள், பொதுமக்களில் சிலரும் சேர்ந்து யார் வெற்றி பெற்றார்கள் என்று அறிவியுங்கள், இல்லையென்றால் வயலுக்கு அடிக்கும் பூச்சி மருந்தை சாப்பிட்டு இங்கேயே தற்கொலை செய்து கொள்வோம் என்று சத்தம் போட்டோம். அதன் பிறகுதான் நான் வெற்றி பெற்றேன் என்று அறிவித்தார்கள். தேர்தலில் வெற்றி பெற்றதையொட்டி நான் கோவிலஞ்சேரி, மூலசேரிக்குப் பொது மக்களுக்கு நன்றி சொல்லச் சென்றிருந்தேன். என்னுடன் சில உறவினர்களும் வந்திருந்தனர். அப்பொழுது ஆதிக்க சாதி வகுப்பை சார்ந்த வார்டு உறுப்பினர் மற்றும் முன்னாள் தலைவர் பழனியோடு சில அடியாட்கள் கத்தி, கட்டையோடு அடிக்க வந்தார்கள். இதில் என்னுடைய சொந்தக்காரர்கள் பாதிக்கப்பட்டார்கள். அன்று உயிர் பிழைத்ததே அரிது.

இதற்காக காவல் நிலையத்தில் புகார் மனு கொடுப்பதற்குள் ஆதிக்க சாதியைச் சார்ந்த பழனி சென்று என்னுடைய உறவினர்கள் மீது புகார் மனு கொடுத்து விட்டார். இதனால் வேலாயுதம், முருகன், சங்கர், பால பிரகாஷ், கிருபா உள்ளிட்ட 6 நபர்கள் 15 நாட்கள் புழல் சிறையில் அடைக்கப்பட்டு வெளியில் வந்தார்கள். கிராமசபைக் கூட்டம் நடத்தினால் போலீஸ் பாதுகாப்புடன்தான் நடத்துகிறோம். நாங்கள் இந்த ஊராட்சியில் எந்த ஒரு செயல்பாடும் செய்ய முடியவில்லை. எல்லாவற்றுக்கும் தடங்கல் செய்து கொண்டே இருக்கிறார்கள். என் மேலும் என் கணவர் மீதும், சில உறவினர்கள் மீதும் ஒரு சில வார்டு உறுப்பினர்கள் மீதும் அவர்கள் 50க்கும் மேற்பட்ட பொய்ப் புகார்கள் கொடுத்துள்ளனர். இப்பொழுது எங்களைக் கொலை செய்வதற்கும் துணிந்து உள்ளதால் வெளியில் வரவும். பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்பவும் பயமாக உள்ளது. பழனி, மேடவாக்கம் ஆனந்தன், கோபால், மனோகரன் ஆகியோர் என்னையும் என் குடும்பத்தினரையும் கொலை மிரட்டல் செய்து கொண்டு இருந்தார்கள். என்மீதும் என் கணவர் மீதும் பல பொய் புகார்கள் கொடுத்து அவை அனைத்தும் பொய் என நிரூபிக்கப்பட்டுள்ள நிலையில் தொடர்ந்து எங்களைக் கொலை செய்ய மிரட்டி வந்த நிலையில் 22.7.2012 அன்று அதிகாலை சுமார் 1.30 மணியளவில் நான், என் கணவர் மற்றும் என் குழந்தைகள் எங்கள் வீட்டின் மாடியில் தூங்கிக் கொண்டிருக்கும்பொழுது சுமார் 5க்கும் மேற்பட்ட நபர்கள் கீழே வீட்டின் கதவை உடைத்து கொண்டு மேல் மாடிக்கு வந்து நாங்கள் தூங்கிக் கொண்டு இருக்கும் கதவை உடைத்து, அங்குள்ள அறைக் கதவை உடைக்க முயற்சி செய்தனர். நாங்கள் உள் பக்கம் இருந்து கதவை தாங்கிக் கொண்டிருக்கும்பொழுது, வந்த நபரில் ஒருவர் அவர்கள் உள்ளே தான் இருக்கிறார்கள் என்று கதவை உடைத்து அவர்களைக் கொல்லு என்று சொல்லிக் கொண்டே கதவை உடைத்தனர்.

நான் செல்ஃபோன் மூலம் என் கணவரின் தம்பி நாகூரானுக்கு தகவல் சொன்னேன். இதைக் கேட்டதும் இன்று உங்களை விட்டுவிட்டோம். சீக்கிரத்தில் உன்னையும் உன் குடும்பத்தினரையும் கொலை செய்யாமல் விடமாட்டோம் எனவும், உன்னை முடித்துவிட்டு சீக்கிரம் இந்தப் பதவியில் நாங்கள் உட்காருவோம் என்று சொல்லும்பொழுது ஆட்கள் வருகின்ற சத்தம் கேட்டு ஓடிவிட்டார்கள். இதை சேலையூர் காவல் நிலையத்தில் புகார் செய்துள்ளோம்.

### வேல்முருகன், அமுதாவின் கணவர்

நான் 10 வகுப்பு வரை படித்துள்ளேன். எங்களுக்கு சொந்த வீடு மட்டும் உள்ளது. இரண்டு குழந்தைகள். என் மனைவி அமுதா ஊராட்சித் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டபோது வளர்ச்சி இல்லா கிராமமாக இருந்தது. மதுரப்பாக்கம் ஊராட்சியின் அருகில் சுற்றுவட்டார கிராமம் 20 உள்ளது. மழை பெய்தால் இங்குள்ள ஏரி நிறைந்து வெளியில் செல்ல முடியாது. இதற்காக ஒரு கோடியே 37 லட்சம் ரூபாயில் ஆடுஹ நிதியிலிருந்து மாம்பாக்கம் பாலம் கட்டியுள்ளோம். கோவிலஞ்சேரியில் ரேஷன் கடை இருந்தது. மொத்தம் 600 கார்டு. அதை பிரித்து 85 கார்டு கொண்ட மதுரப்பாக்கம் ஊராட்சிக்கு ரேஷன் கடை அமைத்தோம். ஒரு அங்கன்வாடி, நூலகம், பேருந்து நிலையம், சுடுகாடு பாலம், ஆரம்பப் பள்ளிச் சுவர், 500 குடும்பங்களுக்கு மதுரப்பாக்கம் ஏரி ஓரம் குடியிருப்பு பட்டா வாங்கி கொடுத்தோம். தொகுப்பு வீடு கட்டியுள்ளோம்.

இவை அனைத்தும் கிராமசபையில் தீர்மானம் போட்டு செய்து முடித்தோம். இதற்கு எல்லாம் முன்னாள் MLA S.R. ராஜா, T.R. பாலு, ஸ்டாலின் அவர்கள் நிதியிலிருந்து உதவி வழங்கினார்கள். இவ்வளவும் 2006 தேர்தலில் செய்த பணிகள் 2011ம் ஆண்டு தேர்தலுக்குப் பிறகு எதுவும் செய்ய முடியவில்லை. இதற்குக் காரணமான முக்கிய நபர்கள் முன்னாள் ஊராட்சி தலைவர் பழனி, மேடவாக்கம் ஆனந்தன், கோபால் மனோகரன் ஆகியோர் இவர்கள் கொலை மிரட்டல் விடுத்துக் கொண்டு

இருந்தார்கள். இப்பொழுது கொலை செய்யவும் துணிந்து விட்டார்கள். 22ம் தேதி மாம்பாக்கத்தில் பள்ளியில் கபடிப் போட்டி நடந்தது. அதற்குத் தலைமை தாங்க என்னை அழைத்திருந்தார்கள். அதற்காக போட்டிக்குப் பரிசு கொடுத்துவிட்டு இரவு 12 மணிக்கு தான் வீட்டுக்கு வந்தேன். 22ஆம் தேதி இந்த நிகழ்வு நடந்தவுடன் காவல் நிலையத்திற்குச் சென்று புகார் மனு கொடுத்தேன். முதல் தகவல் அறிக்கை (FIR) போட மாட்டேன் என்று சொன்னார்கள். உடனே தி.மு.க. கட்சி வழக்கறிஞர், தா.மோ. அன்பரசன், எஸ்.ஆர். ராஜா ஆகியோர் மற்றும் பொது மக்கள் 20 பேர் காவல் நிலையத்திற்கு வெளியில் தர்ணா செய்த பிறகுதான் FIR போட்டார்கள். போலீஸ் வந்து விசாரணை செய்தது யாரையும் கைது செய்யவில்லை. பழனி, ஆனந்தன், கோபால், வெங்கடேஷ், மனோகரன், தனபால் அனைவரும் தைரியமாக இன்னல் செயல்களை செய்வதற்கு கால்நடைத் துறை அமைச்சர் சின்னப்பன் இவர்களுக்கு உதவியாக இருக்கிறார். அதனால் காவல் நிலைய அதிகாரிகள் பயப்படுகிறார்கள். இதில் எனக்கு நியாயம் கிடைக்கவில்லை என்றால் கோர்ட்டுக்கு போகலாம் என்று உள்ளேன். எங்கள் மீது VAO, BDO, பஞ்சாயத்து துணை இயக்குநர் (A.D. Panchayat), மாவட்ட ஆட்சியர், காவல்துறையினர் அனைவரிடமும் இவர்கள் ஏதாவது காரணத்திற்காக பொய்ப் புகார் கொடுத்துக் கொண்டே இருக்கிறார்கள்.

### சுப்பிரமணி, வேல் முருகனின் நண்பர்

நான் அமுதாவின் கணவர் வேல்முருகனின் நண்பர் என்பதால் இவரிடம் அடிக்கடி பேசிக்கொண்டு இருப்பேன். அதனால் என்மேல் கோபம் கொண்டு என்னுடைய வீட்டை உடைத்து என்னையும் என்னுடைய மகனையும் அடித்தனர். என் மனைவிக்கும் அடி விழுந்தது காவல்துறையில் புகார் கொடுத்துள்ளேன். சுமார் 9 நபர்கள் இருப்பார்கள். இதில் என் கை உடைந்துவிட்டது. ஒரு வன்னியர், எங்களுக்கு உதவியாக இல்லாமல் முருகவேலுக்கு உதவியாக இருக்கிறாயே என்று திட்டிக்கொண்டே அடித்தார்கள். எங்களால் தடுக்க முடியவில்லை. பொது மக்கள் சத்தம் கேட்டு வந்ததால் ஓடிவிட்டார்கள்.

### துணைத் தலைவர் சாவித்திரியின் கணவர் புருஷோத்தமன்

நான் வன்னியர் இனத்தைச் சேர்ந்தவன். என் மனைவி துணைத் தலைவராக இருக்கிறார். எங்களுக்குக் கொஞ்சம் நிலம் உள்ளது. ரியல் எஸ்டேட் வேலை பார்க்கிறேன். பழனியோட ஆட்களும் அவருடன் சில வார்டு உறுப்பினரும் சேர்ந்து கொண்டு ஏதாவது புகார் மனு கொடுப்பது கிராமசபை கூட்டம் நடத்தும்போது வீண் பிரச்சனை செய்வது, கலவரத்தை உண்டு பண்ணுவது என்பதை ஒரு தொழிலாகவே எடுத்துக்கொண்டார்கள். அமுதா முருகவேலுக்கு கொலை மிரட்டல் விடுத்துகொண்டே இருந்தார்கள். ஆனால், வீடு புகுந்து கொலை செய்யத் துணிந்துள்ளார்கள் என்பது பயமாக உள்ளது. காவல்துறையில் புகார் கொடுத்தாலும் அதற்கான முயற்சியில் மந்தமாகத்தான் போலீஸ் உள்ளது. சேலையூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளோம். இன்ஸ்பெக்டர் விஸ்வநாதன், ஜெயின் தன்ராஜ்ஹஊ அவர்களும் புகாரைப் பெற்றுக்கொண்டார்கள்.

### நாகூரன், 2வது வார்டு உறுப்பினர் எஸ்சி கூலி

இங்கு சுய உதவிக் குழு 25 இருந்தது. இப்போது 10தான் உள்ளது. ஊராட்சித் தலைவி அமுதா, சர்மா நகருக்கு 500 பட்டா வாங்கிக் கொடுத்தார்கள். அரசு எந்தத் திட்டம் அறிவித்தாலும் அதை உடனே ஊராட்சிக்கு செய்துவிடுவார்கள். 2006 ஊராட்சித் தேர்தலுக்கு பிறகு மதுரபாக்கம் ஊராட்சி பலவற்றில் மேன்மை அடைந்துள்ளது. அமுதா வேல்முருகன் கடுமையாக இயங்கியதால் எங்கள் மக்கள் வளர்ச்சி அடைந்துள்ளார்கள்.

### பழனி, முன்னாள் ஊராட்சி தலைவர்

என்னுடைய தொழில் விவசாயம். நான் 20 வயதிலிருந்தே பொது சேவைக்கு வந்தவன். வயது 48, படிப்பு 8ஆம் வகுப்பு தான். இரண்டு பெண், ஒரு ஆண் குழந்தை, சொந்த வீடு மற்றும் 15 ஏக்கர் நிலம் உள்ளது. நாங்கள் கூட்டுக் குடும்பம், நான் 2001 ஆண்டு ஊராட்சித் தேர்தலில், எத்திராஜ், கோவிந்தன், டில்லி ஆகிய மூன்று நபர்களுடன் போட்டியிட்டு 470 ஓட்டு பெற்று, 170 ஓட்டு வித்தியாசத்தில் வெற்றி பெற்றேன். அப்பொழுது அமுதா என்னிடம் வார்டு உறுப்பினராகவும் வேல் முருகன் தண்ணீர் ஆபரேட்டராகவும் இருந்தார்கள். சொந்த வீடு இல்லை. அவர் இப்பொழுது இருக்கும் வீட்டின் நிலத்தைக்கூட அவர் அண்ணனிடம் ஒன்றரை சென்ட்டும் பக்கத்தில் உள்ளவர்களிடம் ஒன்றரை சென்ட்டும் சேர்த்து நான்தான் வாங்கிக் கொடுத்தேன். இதற்காக இவர்களிடம் வேல் முருகன் சண்டை போட்டு கொண்டு இருந்தார். சமாதானம் செய்து வீடு கட்டுவதற்கும் உதவி செய்தேன். இப்படி இருந்தவருக்கு எப்படி இவ்வளவு சொத்து வந்தது ? ஊராட்சி இடத்தை பிளாட் போட்டு விற்றுவிட்டார். எனக்கு முன்பு இருந்த ஊராட்சித் தலைவர் டில்லி, மதுரபாக்கம் பஞ்சாயத்தில் தேக்குமரம் நட்டு வளர்த்து வந்தார். இப்பொழுது அனைத்து மரத்திற்கும் வயது 15 ஆகிறது. அதை வெட்டி அமுதா வீட்டு வேலைக்கு உபயோகப்படுத்திக் கொண்டார். இதை நாங்கள் கேட்க ஆரம்பித்ததும் மே மாதம் கிராமசபையில் தீர்மானம் போட்டு அந்த மரத்தை ஏலம்விட்ட மாதிரியும் ரூ.20,000க்கு ஏலம் எடுத்த மாதிரியும் கணக்கு காட்டிவிட்டார்கள்.

மதுரபாக்கம் ஆத்து ஓரம் உள்ள இடத்தை கலைஞர் நகர் என்று சொல்லி தலித் மற்றும் பழங்குடி மக்களுக்கு வீடு கட்டிக் கொடுத்த மாதிரி, பட்டா போட்டு வித்துட்டு கானத்தூர், சைதாப்பேட்டை மற்றும் மதுரபாக்கத்தில் உள்ளவர்களுக்கு இலவசமாகக் கொடுத்த மாதிரி கணக்குக் காண்பிக்கிறார். இவர் ஊராட்சி இடத்தை ஆக்கிரமித்து கலைஞர் நகர், ஸ்டாலின் நகர், T.R. பாலு நகர், S.R.ராஜா நகர் (அமுதாவின் குழந்தை பெயர்) வெற்றி வேல் நகர் எனப் பெயர் வைத்துள்ளார். இதில் தினகரன் பத்திரிகை நிருபர், காஞ்சிபுரம் ஜோன்ஸ், தினமலர் நிருபர் முனியாண்டி தம்பி புகழேந்தி, தினத்தந்தி நிருபர் இவர்களும் வேல்முருகனிடம் நிலம் வாங்கி உள்ளனர். அதனால் அவர்களும் வேல் முருகனுக்கு உதவியாக உள்ளார்கள்.

வேல் முருகன் கபடி பிளேயர் நிறைய பரிசு எல்லாம் வாங்கி உள்ளார். இவருடன் ஈஞ்சம்பாக்கம் K.D.குப்பத்தைச் சேர்ந்த ஒருவரும் சேர்ந்துதான் தேர்தல் வேலை செய்வார்கள். இவர்களுக்கு ஓட்டு போடுவதற்காக குப்பத்து ஆட்களை அனுப்பி வைப்பார். அவர்கள் சைதாப்பேட்டை கானத்தூர் பகுதியில் இருக்கிறார்கள். என்னால் அடையாளம் காட்ட முடியும். இங்குள்ள கோவிலஞ்சேரி ஆற்றில் மணல் எடுக்க டெண்டர் விடுவார்கள். அமுதாவின் கணவர் பினாமி பெயரில் ஏலம் எடுப்பார். கோவிலபாக்கம் மகாலிங்கம் என்பவர் தான் பினாமியாக இருக்கிறார். 3 அடி ஆழம்தான் சட்டப்படி மண் எடுக்கணும். ஆனால், 25 அடி ஆழம் எடுத்துள்ளார்கள். இதில் 30 லட்சத்திற்கும் மேல் வேல் முருகனுக்குக் கிடைத்துள்ளது. அமுதாவின் கணவர் பணம் சம்பாதிப்பதற்கு மனைவியின் பதவியைப் பயன்படுத்தி செயல்படுகிறார் என்பதுதான் உண்மை.

### கோவிலஞ்சேரி டில்லி

பாலாச்சி அம்மன் கோவில் நிலம், ஆக்கிரமிப்பில் இருந்தது. 3 ஏக்கர் 90 சென்ட் உள்ளது. நான் தலைவராக இருக்கும்பொழுது 90 சென்ட் நிலத்தை வேதாச்சலம் என்பவர் காய்கறி பயிர் செய்வதற்கு குத்தகைக்கு எடுத்தார். கோயிலுக்கு கொஞ்சம் வரிப் பணம் கட்டி வந்தார். இந்த நிலத்தை, வேதாச்சலம் மகன் விநாயகத்தையே எடுத்துக்க சொல்லி விலை பேசி அட்வான்ஸ் வாங்கிவிட்டார்கள். இதற்காக நான் நீதிமன்றத்தில் வழக்குப்பதிவு செய்து, அந்த இடத்தை கோவிலுக்கே வாங்கிவிட்டேன். முருகவேலுக்கு இதன் பிறகு என் மேல் அதிக கோபம். அதனாலேயே கொலைப் பழி சுமத்துகிறார்கள். இவ்வூராட்சியில் வேல்முருகனால் நிறைய பிரச்சனைகள் உண்டு. இது எல்லாவற்றிற்கும் கிராம நிர்வாக இயக்குநர் (வி.ஏ.ஓ), வட்டார வளர்ச்சி இயக்குநர் (பிடிஓ), கூடுதல் இயக்குநர் (ஊராட்சி), ஆட்சியர், காவல் நிலைய அதிகாரி, ஆணையர், முதலமைச்சர் செல் போன்றவர்களுக்கு புகார் மனு கொடுத்துள்ளேன். அதன் நகல் அனைத்தும் என்னிடம் உள்ளது. எனக்கு மூன்று குழந்தைகள் உள்ளார்கள் சுபாஷ் +1, செண்பகவள்ளி 10ம் வகுப்பு, சரண்யா 8ம் வகுப்பு. என்னுடைய வருமானத்திற்காக என் நிலத்தில் காய்கறி, கீரை பயிரிட்டுள்ளேன். 1000 ரூபாய் தினம் கிடைக்கும். நான் சொத்து சேர்க்க வேண்டிய அவசியம் இல்லை. மக்களுக்கு நல்லது நடக்கணும் என்றுதான் போராடி வருகிறேன்.

### பழனி மனைவி லஷ்மி (அமுதாவை எதிர்த்துப் போட்டியிட்டவர்)

நான் 5ம் வகுப்புவரை படித்துள்ளேன். வேல்முருகனின் ஆட்கள் இரண்டு வருடம் முன்னாடி என் கணவர் இரவு வீடு திரும்பும்பொழுது தலையில் அடித்துவிட்டு சென்றுவிட்டார்கள். கொலை செய்ய முயற்சி செய்தனர். நாங்கள் ராமசந்திரா மருத்துவமனையில் காண்பித்து தலையில் ஆபரேஷன் செய்தோம். இப்பொழுது அவர் தலையில் ஒரு பகுதியில் மண்டை ஓடே இல்லை. அவர் உயிர் பிழைத்ததே அதிசயம். எங்களுக்கு நிறைய நிலம் உள்ளது. நாங்கள் கூட்டுக் குடும்பமாக இருக்கிறோம். இவர் அடுத்தவங்க சொத்துக்கு ஆசைப்படமாட்டார். எங்களுக்குக் கல்யாணம் ஆகும்போதே அவருக்கு லேட் மேரேஜ்தான். பொதுச் சேவையில் அதிக விருப்பமும் கடவுள் பக்தியும் உள்ளவர். என் கணவர் கொலை செய்யும் அளவுக்கு மோசமான மனம் படைத்தவர் இல்லை.

### தனபால் வார்டு உறுப்பினர்:

மதுரபாக்கம் ஊராட்சியில் சுய உதவிக் குழுவுக்கு லோன் தருவதற்காக கூட்டம் ஏற்பாடு செய்திருந்தார்கள். இதில் வனக்குழுவும் சேர்ந்து இருந்தது. இந்தக் கூட்டத்திற்கு நிறைய நபர்கள் வரவில்லை என்பதால் பள்ளி மாணவர்களை அழைத்துக்கொண்டு சென்றுள்ளார்கள். இதை குழந்தைகள் வீட்டிற்கு தெரிவிக்கவில்லை. காலை 10.30 மணிக்கு அழைத்துக்கொண்டு சென்று இரவு 7.30 மணிக்குதான் வீட்டுக்கு அனுப்பி உள்ளார்கள். பெற்றோர்கள் அனைவரும் பிள்ளைகளைத் தேடிப் பள்ளி வாசலில் நின்று கொண்டு இருக்கிறார்கள்.

இதை கேள்விப்பட்டு தலைமை ஆசிரியரிடம் நான் சென்று கேட்டேன். அதற்கு மறுநாள் காலை அவர் கணவரை அழைத்துக் கொண்டு வந்து மன்னிப்பு கேட்டார். வேறு வழி இல்லாமல்தான் மாணவர்களை அங்கு அழைத்துக் கொண்டு சென்றேன் என்றார். பழனி அவர்களைப் பார்த்து, அவர் கணவர் ஊனமுற்றவர், எதுவும் பேசாதீர்கள். இனிமேல் இப்படிச் செய்யாமல் பார்த்துக் கொள்ளுங்கள் என்று சொன்னார். அதன்பிறகு ஒன்றரை மணி நேரம் சாதாரணமாகப் பேசிவிட்டு சென்றுவிட்டார்கள்.

வேல்முருகன் இங்கு நிலம் வாங்கினால் மக்களுக்கு தெரிந்துவிடும் என்பதால் செய்யாரில் 50 ஏக்கர் நிலம் வாங்கியுள்ளார். அதன் பத்திரம் எங்களுக்கு இன்னும் கிடைக்கவில்லை. மற்றபடி அவர் மேல் நாங்கள் கொடுத்த புகாருக்கு எல்லாம் ஆதாரம் வைத்துள்ளோம். எந்த இடத்திலும் நாங்கள் உண்மையைச் சொல்லுவோம். அதுமட்டும் இல்லாமல் அமுதா வேல்முருகன் கையாட்களாக சில குப்பத்து பசங்களையும் சொந்தக்காரங்களையும் வைத்துள்ளார்கள். அவர்கள் திடீர் என்று கத்தியால் கீறிக்கொள்வார்கள், அடித்துக் கொள்வார்கள். உடனே எங்கள் மேல் புகார் கொடுப்பார்கள். இது அனைத்தும் எதற்காக என்றால் திமுக ஒன்றிய செயலாளர் பதவி வாங்குவதற்காகத்தான். குடிநீர் தொழிற்சாலை ஒன்று மதுரபாக்கத்தில் செயல்பட்டு வருகிறது. அதை எடுப்பதற்கு முயற்சி செய்து கொண்டு இருக்கிறோம். இதற்கு அமுதா வேல்முருகன் அனுமதி வழங்கி உள்ளார். இந்த நிலம் கக்கன் முதலமைச்சராக இருக்கும்பொழுது தாழ்த்தப்பட்ட மக்களுக்காக கொடுத்த நிலம் முதலில் குத்தகைக்கு கொடுத்துவிட்டு இப்பொழுது அவர்களுக்கே விற்றுவிட்டார்கள். நாங்கள் எந்த ஒரு பிரச்சனை சம்மந்தமாக சேலையூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தாலும் வேல்முருகன் தம்பி காவல்துறையினராக வேறு காவல்நிலையத்தில் உள்ளார்.

இவருடைய நண்பர்கள் சேலையூர் காவல் நிலையத்தில் இருப்பதால் உடனே வேல்முருகனுக்கு தெரிந்துவிடும். அதற்குத் தகுந்த மாதிரி ஏதாவது கதையை ஜோடித்து வேறு மாதிரி புகார் மனு எங்கள் மேல் கொடுப்பார்கள். இப்படித்தான் மதுரபாக்கம் ஊராட்சி ஓடிக்கொண்டு இருக்கிறது.

கோவிலஞ்சேரி காலனி SC பகுதி பொது மக்கள் எங்களுக்கு பேசுவதற்கே பயமாக இருக்கிறது. இங்கு பழனி அதிமுக, வேல்முருகன் திமுக இதுதான் பிரச்சனை. இரண்டு நபர்களும் ஏதாவது குறை கண்டுபிடித்து அடித்துக்கொண்டே இருப்பார்கள். நாங்கள் ஏதாவது பேசினால் எங்க வீட்டுக்கே வந்து சண்டை போடுவார்கள். அதுதான் பயமாக இருக்கிறது. தயவு செய்து சென்று விடுங்கள் என்றார்கள்.

### மதுரபாக்கம் ஊராட்சி பொதுமக்கள்:

பெயர் சொல்லக்கூட பயப்படுகிற நிலைமைதான் உள்ளது. இதில் ஒருவர் சுப்பிரமணியன், வேல்முருகன் நண்பன். அவரை பழனியின் ஆட்கள் அடித்துவிட்டார் என்று காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்கள். காரணமே வேறு, சுப்பிரமணி குடியிருக்கும் வீடு அதனைச் சுற்றி உள்ள தோட்டம், சுப்பிரமணிக்கும் அவர் அண்ணனுக்கும் சொந்தம். சுப்பிரமணி அண்ணன் நிலத்துக்குப் போக வர வழி இல்லாமல் இவர் நிலத்தை விற்றுவிட்டார். இதுதான் காரணம். வித்து கொடுத்தது வேல் முருகன். அதனால் தான் வேல்முருகனுக்கு ஆதரவாகப் பேசுகிறார்.

### கண்டறிந்தவைகள்

1. ஊராட்சித் தலைவர் அமுதா தலித் மற்றும் பெண் என்பதால் இரண்டு முறை வெற்றி பெற்றதாலும் ஆதிக்க சாதியினருக்கு பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

2. மதுரபாக்கம் ஊராட்சியில் தலித் இனத்தவர் வருங்காலங்களில் தேர்ந்தெடுக்கப்பட்டாலும் சுதந்திரமாக பணிபுரிய முடியாத சூழ்நிலை இவர் உடமைக்கும் உயிருக்கும் பாதுகாப்பு வேண்டியுள்ளது.

3. ஊராட்சியில் கட்சி வேறுபாடு என்பது வேறூன்றி உள்ளதால் இதுவே மிக கலவரம் ஏற்படுவதற்கு சக்தியாக உருபெற்றுள்ளது.

4. கோவிலஞ்சேரி ஆற்று மணல் டெண்டர் விடும் பிரச்சனை, நிலம் போன்றவை அதிகமான தாக்கத்தை இவ்வூராட்சியில் பரவியுள்ளது.

5. இந்த ஊராட்சியில் வார்டு உறுப்பினர்களில் ஒரு சிலர் ஒத்துழைப்பு இல்லை. கிராம சபை கூட்டம் காவல்துறையினரின் பாதுகாப்புடன் நடத்த வேண்டிய சூழ்நிலை அமைந்துள்ளது.

### பரிந்துரைகள்

1. பொதுவாக தலித் தலைவர்கள் ஒடுக்கப்படுவதை நிறுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

2. ஊராட்சி தலைவர் கொடுத்த புகார் மனு மீது உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3. வளர்ச்சி திட்டப் பணிகள் செய்வதற்கு எந்த தடைகளும் இல்லாமல் அவர்கள் அதிகாரத்துடன் செயல்பட ஆதிக்க சாதியினர் தலையீடு இல்லாமல் சுதந்திராக செயல்பட வேண்டும்.

4. ஊராட்சி தலைவர்களிடம் கட்சி வேறுபாடு காட்டாமல் வளர்ச்சிக்கான செயல்பாட்டை உடனே வழங்க வேண்டும்.

5. மதுரபாக்கம் ஊராட்சி கிராமசபை கூட்டம் நடத்தும்போது காவல்துறையினரின் பாதுகாப்புடன் நடக்காமல் சுதந்திரத்துடன் பொது மக்கள் ஆதரவுடன் நடக்க வேண்டும்.

6. கோவிலஞ்சேரி ஆற்றில் மணல் டெண்டர் விடுப்பொழுது பினாமி இல்லாமல் நேர்மையான முறையில் நடக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

**– மனித உரிமை மேம்பாடு மற்றும் ஆராச்சி அமைப்பு**

# தமிழ்நாடு பட்ஜெட் கூட்டத்தொடர் 2013

## ஊராட்சி அரசாங்கம் குறித்த சட்டம், கொள்கை மாற்றம், நிதி நிலை அறிக்கை குறித்து தமிழக அரசு, சட்ட மன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசியல் கட்சிகளிடம் ஊராட்சித் தலைவர்கள்அளிக்கும்

## கோரிக்கை மனு

**30.3.2013, சென்னை**

அக்டோபர் 2011 தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி தலைவர்களாகிய நாங்கள் ஊராட்சி அரசாங்கம்தான் முதல் அரசாங்கம் என்று கருதுகிறோம். நாங்கள் கிராமங்களின் சுய தேவைகளை நிறைவு செய்வதற்கான வேலைகளில் குறிப்பாக விளிம்பு நிலையில் உள்ள மக்களின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்யவும், சுரண்டலுக்கு எதிராகவும் சமமற்ற மற்றும் அதிகார உறவுமுறைகள் தகர்த்தெறியவும், பொதுமக்களை பாதுகாக்கம் பணிகளிலும் ஈடுபட்டு வருகின்றோம். எங்களை மத்திய மாநில அரசுகளின் திட்டங்களை நிறைவேற்றும் நபர்களாக நடத்த வேண்டாம். தமிழக அரசு உடனடியாக எங்களுக்கு அதிகாரங்களையும் நிதியையும் பகிர்ந்தளித்து அரசின் உண்மையான பிரதிநிதிகளாக செயல்பட அனுமதிக்க வேண்டும். இதற்கு முக்கியமாக தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தில் திருத்தங்கள் கொண்டுவரவேண்டும். ஆகவே தமிழக அரசு, அரசியல் கட்சிகள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் எங்களுடைய கோரிக்கைகளை ஏற்று அதற்கேற்ப மாற்றங்களை கொண்டுவர வேண்டுகிறோம்.

### அறிமுகம்

அரசமைப்பு சாசனத்துக்கான 73, 74–வது திருத்தங்கள் மக்களுக்கு அதிகாரம் வழங்குவதிலும் அடிமட்டத்தில் ஜனநாயகத்தைக் கட்டுவதிலும் சட்டவரம்புகளுக்கு உட்பட்ட ஒரு முக்கிய அஸ்திவாரமாக அமைந்துள்ளன. இவை உண்மை நடப்புகளாக மாறவேண்டுமானால், தொடர்ச்சியான மேம்பாடு, பங்கேற்பு ஜனநாயகம் இரண்டும் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்க முடியாதவையாகும், வேறுபடுத்த முடியாதவையாகும். அடிமட்டத்தில் ஜனநாயகத்தை பலப்படுத்துவது, கூட்டாட்சி என்பதை மறுவரையறை செய்வது ஆகியவை அதிகாரங்களைப் பரவலாக்குவதாக மட்டுமல்லாமல், உழைக்கும் வர்க்கத்தையும் ஏழை மக்களின் இதர பிரிவினரையும் அணிதிரட்டி அதிகாரம் வழங்குவதாகவும் இருக்க வேண்டும்.

தமிழ்நாட்டில், 73வது சட்டத்திருத்தத்தில் உள்ள 29 அதிகாரங்களும் 74வது சட்டத்திருத்தத்தில் உள்ள 18 அதிகாரங்களும் 1994ம் ஆண்டின் தமிழக ஊராட்சிகள் சட்டத்தில் திருத்தம் செய்வதன் வாயிலாக உள்ளாட்சிகளுக்கு வழங்கப்படவில்லை. தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர், பெண்கள் ஆகியோருக்கான இட ஒதுக்கீடுகள், மாநில நிதி ஆணையம் அமைத்தல், மாநிலத் தேர்தல் ஆணையம் அமைத்தல் போன்ற கட்டாயமாக செய்தாக வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஆனால், உள்ளாட்சிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகள் அதிகாரமற்றவர்களாக, பல்வேறு திட்டங்கள் அமலாக்கப்படுவதிலும் பொதுப் பணிகளிலும் அதிகாரிகளுக்கு உதவுகிறவர்கள் என்பதாக மட்டுமே, அவ்வப்போது அரசாணைகள் மட்டும் வெளியிடுவதன் மூலம் அதிகாரப் பரவல் என்பதைச் சுருக்கியுள்ளது தமிழக அரசு. இன்று வரையில் அதிகாரங்களோ, நிதியோ, மாநில அரசுப் பணியாளர்களுக்கான ஏற்பாடுகளோ பரவலாக்கப்படவில்லை. அவை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பின் ஆய்வுக்கு உட்பட்டவையாக ஆக்கப்படவில்லை.

### தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 மற்றும் இந்திய அரசியல் சாசனச் சட்டம் ஆகியவற்றில் சட்டமாற்றம் கொண்டு வந்து கிராமசபையின் அதிகாரங்களைப் பலப்படுத்த வேண்டும்:

இந்திய அரசியல் சாசனச் சட்டத்தின் 243A பிரிவின்படி, கிராமசபையானது கிராம ஊராட்சியின் வாக்காளர் பட்டியலில் பதிவு பெற்றிருக்கும் நபர்களைக் கொண்ட அமைப்பாகும். மாநிலத்தில் சட்டமன்றத்திற்கு கொடுக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ் செயல்படுவது போல், கிராமசபையும் கிராம அளவில் அத்தகைய அதிகாரங்களைச் செயல்படுத்தலாம் (தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1974–ன் கீழ் வகுக்கப்பட்டுள்ள விதிகள்). கிராமசபையானது கிராமத்திட்டம் மற்றும் ஆண்டின் நிதித்திட்டத்தை அங்கீகரிக்கும் அமைப்பாகவும், ஊராட்சியில் ஒப்படைக்கப்பட்டுள்ள திட்டங்களை அமல்படுத்துவதைப் பரிசீலனைச் செய்யும் அமைப்பாகவும், தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, அத்யாயம்

11, கிராமசபையை வரையறை செய்வதன் மூலம், அதன் அதிகாரங்களை மாநில அரசு நீர்த்துப் போகச் செய்துள்ளது. ஊரக வளர்ச்சித்துறையின் அரசு ஆணை MS.No. **152ல், கிராம சபையின் குறைவெண் வரம்பு மற்றும் கூட்டம் நடத்தும் வழிமுறைகள் போன்ற பிற செயல்பாடுகளை வரையறுத்துள்ளது. இருப்பினும், கிராமசபை தனது அதிகாரங்களைப் பயன்படுத்தி உண்மையான வாழ்வாதாரப் பிரச்சனைகளைக் கணக்கில் கொள்ளாமல், மாவட்ட நிர்வாகத்தின் கட்டளைகளை செயல்படுத்தும் அமைப்பாகவே உள்ளன. கிராமசபை மட்டிலுமே, கிராம அளவில் உள்ள அனைத்துப் பெண்கள், தாழ்த்தப்பட்ட வகுப்பினர், பழங்குடியினர் மற்றும் ஏழை மக்கள் ஆகியோரை உள்ளடக்கிய அனைத்து கிராம மக்களும் பங்கேற்கும் மற்றும் கிராமங்களை பாதிக்கும் பிரச்சனைகள், நலத்திட்டங்கள் போன்றவற்றை விவாதிக்கும் அமைப்பாக உள்ளது. இது ஒரு நாடாளுமன்றம் போன்று செயல்பட வேண்டும்.**

கிராமசபை உறுப்பினர்கள் அதிகாரப் பரவலாக்கத்தின் முக்கியத்துவத்தை சரியாக உள்வாங்காமல் இருப்பதால்தான் அவர்களின் பங்கேற்பு மற்றும் முடிவெடுக்கும் தன்மை குறைவாக உள்ளது. எந்த ஒரு தொழிலையும், தொழிற்சாலையையும் உள்ளாட்சிப் பகுதிக்குள் துவங்கும்பொழுது கிராமப் பஞ்சாயத்துக்களின் அனுமதி பெற வேண்டும் என சட்டங்கள் கூறுகிறது. ஆனால் இவ்விதிமுறை சிறிதளவும் கூட கடைபிடிக்கப்படுவதில்லை. இதில் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் குறைகளை சொல்ல வழியில்லாமல் போராட்டங்களில் ஈடுபடவேண்டியுள்ளது. கிராமசபைகளில் சுற்றுச்சூழல் ஆளுகை, வன ஆதாரங்களின் நிர்வாகம் போன்றவை முக்கியமானவையாகும். உள்ளூர் மக்கள் மேற்கண்ட பொருட்களில் ஈடுபட்டால்தான் அவை வளம் பெறும், பாதுகாக்கப்படும். எங்கெல்லாம் உள்ளூர் மக்கள் இதைக் கையில் எடுக்கின்றார்களோ அப்பொழுது ஊராட்சி நிர்வாகம் செம்மையாக நடைபெறுகிறது. கிராமசபைகள் மக்களை ஒருங்கிணைப்பதற்கும் வளர்ச்சித் திட்டங்களை திட்டமிடுவதற்கும், அழிவு பூர்வமான திட்டங்களைத் தடுப்பதற்கும் நல்ல ஆயுதமாக பயன்படுத்தப்படலாம். அநேக ஊராட்சிகளில் கிராம சபை மற்றும் ஊராட்சி மன்றம் பெரிய வளர்ச்சித் திட்டங்களை எதிர்த்து தீர்மானங்கள் இயற்றியுள்ளன, அனுமதிச் சான்றும் மறுக்கப்பட்டுள்ளது. இது போன்ற நடவடிக்கைகள் அரசின் திட்டங்களில் மாறுதலைக் கொண்டுவந்துள்ளது. அதுமட்டுமில்லாமல் உற்பத்தியாளர்களின் கலாச்சாரத்திலே மாறுதல்கள் ஏற்பட்டுள்ளது. ஆகவே கிராம சபைகளுக்கு அதிகாரம் கொடுப்பதற்கு அரசியல் சாசன திருத்தங்கள் கொண்டுவர வேண்டும். கிராம சபைகள் அதிகாரங்கள் கொண்டதாக முடிவெடுக்கக்கூடிய அமைப்பாக, மாவட்ட ஆட்சியரின் தலையீடு இல்லாத அமைப்பாக மாற வேண்டும். கிராம சபைகள் நாடாளுமன்றம் போல செயல்பட வேண்டும்.

கிராம சபைக்கு, திட்டமிடல், நிர்வாகத் தணிக்கை மற்றும் உள்ளூர் அளவில் தேவையான நிர்வாக அதிகாரம், வாழ்வாதாரங்கள் மீதான மேலாண்மை மற்றும் கட்டுப்பாடு குறித்த கொள்கை முடிவுகளை எடுக்க அதிகாரத்தினை வழங்கி அவற்றை செயல்படுத்தும் பொறுப்பும் கிராம ஊராட்சிகளிடமே இருக்க வேண்டும். கிராம சபைக் கூடத்தின் குறைவெண்வரம்பில் 33% பெண்களை உள்ளடக்க வேண்டும்.

கிராம சபைக்கான பொருள், தேவையின் அடிப்படையில் அந்தந்த கிராம ஊராட்சியால் தான் முடிவு செய்யப்பட வேண்டும். மாவட்டத் தலைவர் அலுவலகத்திலிருந்து அனுப்பப்படும் பொருள்கள் அதனுடன் சேர்த்துக்கொள்ளப்படலாம். நிறைவேற்றப்படும் தீர்மானங்களை நடைமுறைப்படுத்தப்படுவதற்கு தேவையான ஒத்துழைப்பு / நடவடிக்கையை சம்மந்தப்பட்ட அதிகாரத்துவ அமைப்புகள்/ துறைகள் எடுக்க வேண்டும். **அத்தீர்மானம் குறித்த நடவடிக்கைக் குறிப்பை அடுத்த கிராம சபைக் கூட்டத்திற்குள் சம்மந்தப்பட்ட அதிகாரத்துவ அமைப்பு சமர்ப்பிக்க வேண்டுமாறு மாநில அரசு உத்திரவிட வேண்டும் குறிப்பாக, ஊராட்சி ஒன்றியம், மாவட்ட ஊராட்சி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை போன்றவைகளின் கீழ் மேற்கொள்ளப்படும் திட்டப்பணிகள் அனைத்திற்கும் கிராம சபைகளின் ஒப்புதலை அவசியம் பெற வேண்டும். தாய் திட்டத்தின் கீழ் ஊராட்சியில் 20 லட்சம் வரை பெற கூடிய பணிகள் அனைத்தும் கிராம சபையின் ஒப்புதலுடன் கிராம ஊராட்சியால் தான் மேற்கொள்ளப்பட வேண்டும் .**

## அரசியல் சாசன 73வது சட்டதிருத்தத்தின் படி உள்ளாட்சிகளுக்கான 29 துறைகளுக்கான அதிகாரங்கள் உடனடியாக வழங்கப்பட வேண்டும்:

மாநில அரசுகள் ஊராட்சிகளுக்கு பகிர்ந்தளிக்க வேண்டிய 29 துறைகளுக்கான அதிகாரம் மற்றும் பொறுப்புகளில் பாதிக்கு மேல் சுற்றுச்சூழல் நிர்வாகம், வாழ்வாதார மேம்பாடு மற்றும் வறுமை ஒழிப்பு சார்ந்தவையாகும். இருப்பினும் இன்றுவரை மாநில அரசுகள், அதிலும் முக்கியமாக தமிழ்நாடு அரசு, அவர்களிடமுள்ள அதிகாரங்களை ஊராட்சிகளுக்கும் பகிர்ந்தளிக்கவில்லை. மாநில அரசானது போதிய திட்டமிடும் அதிகாரத்தையும், பொறுப்பையும் அளிக்கவில்லை. உள்ளாட்சிகள் தயாரிக்கும் திட்டங்கள்

ஏற்றுக்கொள்ளப் படுவதில்லை. அதே போன்று வளர்ச்சி திட்டங்கள் மற்றும் ஒதுக்கீடு போன்றவை ஊராட்சி வழியாக நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. ஊராட்சிகளின் பங்கு சரியாக வரையறுக்கப்படவில்லை. ஊராட்சிகள் அரசின் திட்டங்களை அமல்படுத்துபவைகளாக இருக்கின்றன. மாநில அரசின் வளர்ச்சித் துறைகளுக்கு, அதற்கான அமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

பொது விநியோகத் திட்டம், கல்வி, சுகாதாரம், குடிநீர், முறைசாரா எரிசக்தி போன்றவற்றின் மேலாண்மை மற்றும் நிர்வாக அதிகாரம் ஊராட்சிக்கு இல்லை. கடந்த பல ஆண்டுகளாக இதுகுறித்து அரசியல் கட்சிகள், தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், திட்ட நிர்வாகிகள் ஆகியோருடன் தமிழ்நாடு ஊராட்சி அரசாங்கப் பெண் தலைவர்களின் கூட்டமைப்பு வழக்காடி ஆதரவைத் திரட்டிய பின்னரும் இந்நிலை நீடிக்கிறது. மாவட்ட நிர்வாகம்தான் அதிக அதிகாரங்களைக் கொண்டதாக உள்ளது. இருப்பினும் ஊராட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள நிலங்கள், ஊராட்சியில் உள்ள வரிவிதிப்பு குறித்த செலவினக் கணக்குகள் போன்றவற்றின் ஆளுகை குறித்து நூற்றுக்கணக்கான பெண்கள் மற்றும் தலித் ஊராட்சிமன்றத் தலைவர்களுக்கு விழிப்புணர்வு கொடுக்கப்பட்டுள்ளது.

இந்திய அரசியல் சாசனத்தின் 11 ஆவது அட்டவணையில் ஊராட்சி அரசாங்கத்திடம் மாநில அரசு ஒப்படைக்கலாம் என கூறப்பட்டுள்ள 29 துறைகளுக்கான அதிகாரங்கள் குறித்து, மாநில அரசு மேற்கொள்ள வேண்டிய அதிகார, நிதி பரவலாக்கம் மற்றும் நிர்வாக சீர்திருத்தங்கள் குறித்த தனது தெளிவான கொள்கை முடிவை தமிழக அரசு அறிவிக்கவில்லை. அரசின் உடனடி நடவடிக்கையாக 29 துறைகளுக்கான ஊழியர்கள், மேலாண்மை மற்றும் கட்டுப்படுத்தும் அதிகாரத்தை மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கு வழங்க கோருகிறோம். முதல் கட்டமாக பின்வரும் துறைகளுக்கான அதிகாரங்களை ஒப்படைக்க வேண்டுகிறோம்.

- கல்வி (ஆரம்பகால குழந்தைப் பராமரிப்பு மற்றும் வளர்ச்சி உள்ளிட்டு )
- சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து
- பொதுவிநியோகம்
- வேளாண்மை
- பாசனம், நீர்வளமேம்பாடு மற்றும் நீர்வள பாதுகாப்பு
- நிலச்சீர்த்திருத்தம் மற்றும் நில உபயோக மேலாண்மை
- கிராமப் பொது வளங்கள் மீதான கட்டுப்பாடு
- கனிம வளம்
- சமூகக் காடுகள், சிறுகாடுகளின் வளங்கள்
- சாதி, வருமான சான்றிதழ் விநியோகம்
- எவ்வித தொழிற்சாலைகள் மற்றும் ரியல் எஸ்டேட்டுகளுக்கு அனுமதி வழங்கும் அதிகாரம் / மாசுக் கட்டுபாடு

29 துறைகளில் உள்ள இனங்களின் கீழ் முறையே வறுமை ஒழிப்பு, பெண்கள் மற்றும் குழந்தைகள் நலம், சமூக நலம் (ஊனமுற்றோர் மற்றும் மனநலம் குன்றியோர் நலம் உள்ளிட்டு) நலிவடைந்த பிரிவினர் நலம் குறிப்பாக தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் நலம் ஆகியவற்றில் ஊராட்சிகள் பொருளாதார மேம்பாடு மற்றும் சமூக நீதிக்காக திட்டங்கள் தயாரிக்கவும் அவற்றை செயல்படுத்தவும் ஊராட்சிகளுக்கு அதிகாரம் வழங்க வேண்டும்.

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் பிரிவு 205 உள்ளிட்ட மாவட்ட ஆட்சியரின் வரைமுறையற்ற அதிகாரங்கள் நீக்கப்படவேண்டும் : தமிழக ஊராட்சிகள் சட்டம் 1994 ன் அத்தியாயம் 10 பிரிவு 205 அரசு அதிகாரிகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் மீது மிகுந்த அதிகாரத்தை வழங்குவதால் அவ்வத்தியாயம் நீக்கப்படவேண்டும். உள்ளாட்சி அரசாங்கம் என்பது ஒரு அரசியல் சாசன அரசாங்கமாதலால் மத்திய மாநில அரசுகளின் அதிகாரிகள் அதற்கு பதில் சொல்லும் பொறுப்புள்ளவர்கள்.

மாவட்ட ஆட்சித்தலைவர் ஊராட்சித் தலைவர்களை பதவிநீக்கம் செய்வது சுய சார்புடைய உள்ளாட்சி முறைக்கு எதிரானது. ஆகவே தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் பிரிவு 205 நீக்கப்படவேண்டும். தமிழ்நாடு பஞ்சாயத்துகள் சட்டம் 1994, ஊராட்சி ஆய்வாளருக்கு அதாவது மாவட்ட ஆட்சியருக்கு எல்லையில்லாத அதிகாரங்களைக் கொடுத்துள்ளது. ஊராட்சி ஆய்வாளர் அதாவது மாவட்ட ஆட்சியருக்கு வரிவிதிப்பு(பிரிவு 147,171,198B), அனுமதி வழங்கல் (பிரிவு 148), பஞ்சாயத்துகளை உருவாக்குதல் (பிரிவு 4,6,8,101,217,218), தீர்மானங்களை ரத்து செய்தல்(பிரிவு 202,203), பதவி நீக்கம் செய்தல் (பிரிவு 204,205), இடஒதுக்கீடு – சுழற்சி முறை (பிரிவு 11), ஆவணங்கள் (பிரிவு 92,94,99) போன்றவற்றில் அதிகாரங்கள் கொடுக்கப்பட்டுள்ளது. எங்களது நிர்வாக கடமைகளை முறையாக நடைமுறைப்படுத்துவதற்கு மேற்கண்ட அதிகாரங்கள் தடையாக உள்ளது. மேலும் மாவட்ட ஆட்சியருக்கு கொடுக்கப்பட்ட அதிகாரங்கள் அரசியல் சாசன சட்டத்திற்கு எதிராகவும், தன்னிச்சையாகவும் உள்ளது.

ஊராட்சி ஆய்வாளருக்கு கொடுக்கப்பட்ட அதிகாரங்களை தமிழக அரசு உடனடியாக திரும்பப்பெறவேண்டும். அதை மீண்டும் எங்களுக்கும், ஒன்றிய மற்றும் மாவட்ட பஞ்சாயத்துகளுக்கும் கொடுக்கப்படவேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சிகளின் மீதான புகார்களை விசாரிக்க மாவட்டம் மற்றும் மாநில அளவில் குறை தீர்க்கும் ஆணையம் ஒன்றை ஏற்படுத்தவேண்டும்.

**ஊராட்சிகள் சுய அரசாங்கங்களாக செயல்பட கூடுதல் நிதி ஒதுக்கப்பட வேண்டும்:**

ஊராட்சிகளுக்கான மாநில அரசின் நிதி சதவீதம் அதிகரிக்கப்பட்டு வழங்கப்படவேண்டும் என்ற முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரையின் மீது அரசின் போதுமான நடவடிக்கையைக் கோருகிறோம். மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரைகளை கவனத்தில் கொண்டு ஊராட்சியின் தங்குதடையற்ற நிர்வாகம் மற்றும் வளர்ச்சிப் பணிகளுக்கு போதுமான நிதியாக 1996 ஆம் ஆண்டு 8 சதவீதமாக இருந்த மாநில அரசின் உள்ளாட்சிகளுக்கான நிதி, தற்போதுதான் 10.5 சதவீதமாகக உயர்த்தப்பட்டுள்ளது. 1996–லிருந்து நிதி அதிகரிக்கப்படாததை கருத்தில் கொண்டு ஒவ்வொரு ஆண்டும் 1 சதவீதமாக அதிகரிப்பு என கணக்கிட்டு தற்போது உடனடியாக 18 சதவீதமாக உயர்த்தக் கோருக்கிறோம். மத்திய மாநில அரசின் ஊராட்சிகளுக்கான திட்ட நிதி ஊராட்சிகளை நேரடியாக சென்றடையும் வகையில் நிர்வாக மாற்றம் கொண்டுவரப்படக் கோருகிறோம்.

ஊராட்சிகளுக்கான ஒப்படைக்கப்பட்ட / பகிர்ந்து கொள்ளப்படும் வருவாய் இனங்கள்: வருவாய் இனங்களான தலவரி, தலமேல் வரி, முத்திரைத் தாள் மேல்வரி (80 சதவீதம்). கேளிக்கை வரி (70 சதவீதம்), மற்றும் கனிமங்கள் மீதான உரிமக் கட்டணம் (100%) இவை வருவாய்த்துறை, மாவட்ட சார்பதிவாளர், வர்த்தக வரித்துறை மற்றும் புவியியல் மற்றும் சுரங்கத்துறையால் ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் கிராம ஊராட்சிகளுக்கு மூன்று மாதத்திற்கொருமுறை ஒப்படைக்கப்பட வேண்டும். ஆனால் இந்த நிதி, மாநில அரசின் நிதிநிலையைக் காரணம் காட்டி குறித்த காலத்தில் பல்வேறு ஊராட்சிகளிடம் ஒப்படைக்கப்படாததால் ஊராட்சிகள் பெரும் நிதி நெருக்கடியைச் சந்தித்து வருகின்றன. இவற்றை சரிக்கட்டுவதில் காலதாமதம், பகிர்ந்தளிப்பதில் சமச்சீரற்ற நிலையை தவிர்க்க இந்த நிதி சீராகவும் விரைவாகவும் ஊராட்சிகளை சென்றடையும் வகையில் செயல்பட வேண்டும் என பரிந்துரைக்கிறோம். ஊராட்சி அரசாங்க அமைப்புகளுக்கு சொந்தமான இவ்வரியினங்கள் அந்தந்த துறையில் வசூலிக்கப்பட்டு அரசு கருவூலத்தில் சேர்க்கப்பட்டு மாநில பட்ஜெட்டில் இடம் பெறுகின்றன. இம்முறைக்கு மாற்றாக வசூலிக்கப்படும் இவ்வருவாய் இனங்களை நேரடியாக ஊராட்சிகள் கணக்கிற்கு வரவு வைக்க வேண்டும் என்பது எங்களது முக்கியக் கோரிக்கையாகும்.

பயனீட்டாளர் பட்டியல் முழுமையாக ஊராட்சியிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் : வீட்டு வசதித் திட்டம் மற்றும் பிற திட்டங்கள் குறித்து ஊராட்சி மற்றும் கிராமசபை இறுதி செய்யும் பயனீட்டாளர் பட்டியல், எந்தவித அரசியல், சாதிய மற்றும் வசதி படைத்தோரின் இடையூறு இல்லாது முடிவு செய்யப்பட வேண்டும்.

வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ளவர்கள் பட்டியல் ஊராட்சி மற்றும் கிராம சபையால் மட்டுமே இறுதிசெய்யப்பட வேண்டும் : தகுதியான குடும்பங்கள் மட்டுமே இப்பட்டியலில் இடம் பெறுவதை கிராம ஊராட்சிகள் மிகச் சரியான முறையில் செய்ய முடியும். கிராம சபை இறுதி செய்த பட்டியலை எந்தவித மாற்றமுமின்றி, அரசியல் கட்சி குறுக்கீடு இன்றி மாநில, மத்திய அரசுகள் ஏற்றுக்கொள்ள வேண்டும் அரசுத் துறைகள் இதில் தலையிடக்கூடாது.

**ஊராட்சிகளில் பெண் மற்றும் தலித் தலைவர்கள் சுதந்திரமாக செயல்படுவது உறுதிசெய்யப்பட வேண்டும் :**

இந்திய அரசு 73வது மற்றும் 74வது அரசியலமைப்பு திருத்தங்களில் அதிகாரப்பரவலாக்கம் என்ற கண்ணோட்டத்தை அளித்திருக்கின்றது. இதில் முக்கியமாக பெண்களுக்கு 33ரூ இட ஒதுக்கீடு தலித்துகள் மற்றும் பழங்குடி இன மக்களுக்கும் ஒதுக்கீடு போன்றவை உறுதிசெய்யப்பட்டுள்ளது. இட ஒதுக்கீட்டில் உற்சாகமளிக்கக்கூடிய விஷயம் என்னவென்றால் 33ரூ ஒதுக்கீடு பெண்களுக்கு செய்திருந்தாலும் 38ரூ பெண்கள் உள்ளாட்சித் தேர்தல்களிலே வெற்றிபெற்றுள்ளார்கள். ஆனால் இவ்விஷயம் உண்மையிலேயே பெண்களை அதிகாரமுள்ளவர்களாக்கவில்லை. குறிப்பாக விளிம்பு நிலையில் உள்ள தலித்துகளும், பழங்குடியின மக்களும் சமவாய்ப்புகள் பெறவில்லை. பெண்களும், தலித்துகளும் நிறைய சவால்களை அன்றாடம் சந்திக்க வேண்டிய நிர்பந்தம் உள்ளது. நிறைய தேர்ந்தெடுக்கப்பட்ட பெண்கள் அவர்களின் கணவர் பின்னாலோ அல்லது அவர்கள் குடும்பத்தினரின் ஆண்கள் பின்னாலோதான் நிர்வாகம் செய்கின்றார்கள். ஆண்கள் இச்சூழல்களில் நிர்வாகத்தை கையில் எடுத்துள்ளனர். பெண் தலைவர்கள் மீது பலசமயங்களில் கொடூரமான தாக்குதல்கள் நடைபெற்றுள்ளது. ஊராட்சிகளின் ஆய்வாளர்கள் (மாவட்ட ஆட்சியர்) நூற்றுக்கணக்கான தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களை பதவிநீக்கம் செய்துள்ளார்கள். இருந்தாலும் புதிதாக

தேர்ந்தெடுக்கப்பட்ட நூற்றுக்கணக்கான பெண்கள், சுதந்திரமாக செயல்பட கோரிக்கை வைத்துள்ளார்கள். ஆண் ஊராட்சி உறுப்பினர்களின் (சாதி, அரசியல்) கோரிக்கைகளை, வழிநடத்துதல்களை ஏற்காத பெண் ஊராட்சித் தலைவர்கள் பல சவால்களை சந்திக்க நேரிடுகிறது.

பல நூற்றாண்டு காலமாக பொது வாழ்க்கையில் பங்கேற்பு மற்றும் அரசியல் அதிகாரத்தில் பங்கேற்பதில் பாகுபடுத்தப்பட்ட பெண்கள் மற்றும் தலித் தலைவர்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி தலைவர்களாக சுதந்திரமாக செயல்பட அவர்களுக்கு திறன், அதிகாரப்பயிற்சி தேவை. தேர்ந்தெடுக்கப்பட்ட பெண்கள், தலித் மற்றும் பிற நலிந்த பிரிவினர் சிறந்த முறையில் அவர்களது உரிமைகளை நிலைநாட்டி செயல்பட்டால் மட்டுமே உண்மையான அடித்தட்டு ஜனநாயகமும், மக்கள் அதிகாரமும் பரவலாக்கப்பட்ட அரசாங்கமும் நிறைவேற்றப்பட்டதாகக் கருத முடியும்.

நிர்வாக அதிகாரம் : ஊராட்சிப் பணிகளுக்கு (மத்திய, மாநில அரசு நிதியுதவி பெறும் திட்டங்கள் உள்ளிட்டு) யாதொரு வரையறையுமின்றி நிர்வாக அனுமதி அளிக்கும் அதிகாரம் ஊராட்சி மன்றங்களுக்கு மட்டுமே வழங்கப்பட வேண்டும். இது சம்மந்தமாக அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டிருக்கும் அதிகாரங்களை நீக்க வேண்டும் என பரிந்துரைக்கின்றோம்.

கிராம ஊராட்சியில் தேவையான பராமரிப்பு பணிகளை குறிப்பாக மின்சார கம்பி பழுதுபார்த்தல் மின் விளக்குகள் பராமரிப்பு போன்ற பணிகளுக்கு அந்தந்த ஒன்றிய அளவில் போதுமான பணியாளர்களை நியமித்து உடனுக்குடன் அப்பணிகள் செய்து முடிக்கப்பட வேண்டும். கிராம ஊராட்சி பணியாளர்கள், உதவியாளர், எழுத்தர், மக்கள் நலப்பணியாளர், குடிநீர் தொட்டி இயக்குனர், துப்புரவு பணியாளர்களின் மிகக் குறைந்த மதிப்பூதியம் உடனடியாக அதிகரிக்கப்பட வேண்டும்.

கிராமப் பொது வளங்கள், நீர் ஆதாரம்: அனைத்து பொதுநீர் வள ஆதாரங்களையும் கிராம ஊராட்சிகளிடம் ஒப்படைப்பதற்கான சட்டப்பிரிவு 84 தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தில் சேர்க்கப்பட வேண்டும். ஊராட்சி அரசாங்கச் சட்டத்தின் பிரிவு 159, 160ல் பொது நிலங்கள் மற்றும் வளங்களில் ஊராட்சி அமைப்புகளின் முடிவுகள் / தீர்மானங்களை ரத்து செய்யவோ, மாற்றம் செய்யவோ மாவட்ட ஆட்சியருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரம் நீக்கப்பட வேண்டும்.

அனைத்து ஊராட்சிகளிலும் ஊராட்சிக்கு சொந்தமாக காடுகள், தீர்வை விதிக்கப்படாத தரிசுகள், சாலைகள், சுடுகாடு, இடுகாடு, மேய்கால், மந்தைவெளி, களத்து மேடு, வண்டிப்பாட்டை, தோப்பு, கிராம நத்தம் போன்ற பொது, பல ஏக்கர் கணக்கிலான நிலங்கள் நிலச்சுவான்தாரர்களாலும், ரியல் எஸ்டேட்காரர்களாலும் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளன. இந்த ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு வருவாய் மற்றும் காவல்துறை அலுவலர்கள் ஊராட்சித் தீர்மானத்திற்கு கட்டுப்பட்டு ஒத்துழைக்க வேண்டும் என்ற வழிவகை தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தில் இல்லை. இதனால் ஊராட்சித் தலைவர்கள் இந்த ஆக்கிரமிப்புகள் மீது நடவடிக்கை எடுக்க வழியின்றி உள்ளனர். ஆக்கிரமிப்புகளை அகற்றும் அதிகாரம் ஒரு நிர்வாக அதிகாரமாக ஊராட்சி தலைவருக்கே வழங்கப்பட வேண்டும். மேலும், உச்சநீதிமன்ற தீர்ப்பு 2011ன்படி பொது நில ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கிராம ஊராட்சியும் கிராம வரைபடம் மற்றும் கிராம பொது வளங்களும் : கிராம வரைபடம் மற்றும் கிராமப் பொது வளங்கள் போன்றவை குறித்த ஆவணங்களைப் பராமரித்துவருவதற்குத் தேவையான அனைத்தும் கிராம ஊராட்சிகளிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். கிராம வரைபடங்களை மறுவகைப்படுத்துதல், நில உபயோக மேலாண்மை, பொதுச் சொத்து வளங்களில் மேற்கொள்ளப்படும் மாற்றங்கள் குறித்த அனைத்து பரிந்துரைகளும் கிராம சபையின் ஒப்புதலுக்குப் பிறகு ஊராட்சியால் மேற்கொள்ளும்படி அதிகாரங்கள் ஒப்படைக்கப்பட வேண்டும். ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள் மட்டுமே மணல் குவாரிகளுக்கு அனுமதி வழங்கவும் கண்காணிக்கவும், அதிக சுரண்டல் மற்றும் சட்ட விரோத குவாரிகள் மீது நடவடிக்கை எடுக்கவும் அதிகாரம் பெற்றிருக்க வேண்டும்.

**சான்றிதழ் வழங்குதல்: சாதி, வருமானச் சான்றிதழ் வாங்கும் பொறுப்பு வருவாய்த் துறையிடமிருந்து மாற்றப்பட்டு, ஊராட்சிகளால் வழங்கப்படும்படி சட்டத்திருத்தம் கொண்டுவர வேண்டும்.** இலவசப்பட்டா வழங்குவதற்கு ஊராட்சி மன்றத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டு அனுப்பப்படும் பட்டியலில் உள்ள நபர்களுக்கே மாவட்ட வருவாய் நிர்வாகம் பட்டா வழங்க வேண்டும். புதியதாக வழங்கப்படும் ''பட்டா'' எதுவாக இருந்தாலும் ஊராட்சி மன்றத்தின் அனுமதியோடு வழங்கப்பட வேண்டும்.

### மாவட்டத் திட்டமிடல் குழு :

மாநில அரசு மாவட்டத் திட்டமிடல் குழுக்களுக்கு தேர்தல் நடத்திய பின்னும், இத்திட்டமிடல் குழுக்களுக்கு எந்தவித செயல்பாடோ, அதிகாரமோ, நிதியாதாரமோ வழங்கப்படாதது இவற்றின் செயல்படாத்தன்மைக்கே வித்திடும். இந்திய அரசியல் சாசனத்தின் விதி 243 D

ன்படி உருவாக்கப்பட்டுள்ள இம்மாவட்ட திட்டமிடல் குழுக்களுக்கு அதிகாரம் மற்றும் கடமைகளை விவரித்து உடனடியாக மாநில அரசு சட்ட அறிவிக்கை (Gazette) ஒன்றை வெளியிடக் கோருகிறோம்.

### கிராமப்புற குடியிருப்பு வசதியை மேம்படுத்துதல்

- கிராமப்புற ஏழை மக்களுக்கு குடியிருப்பு வசதி ஏற்படுத்த 300 சதுர அடியில் பசுமை வீடு திட்டம் 275 சதுர அடியில் இந்திரா காந்தி நினைவு குடியிருப்பு திட்டமும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்படும் நிதி மிகவும் குறைவாக உள்ள காரணத்தினால் ஒரு குடும்பம் பிரவேசிக்கிற அளவில் குடியிருப்பு அமையவில்லை. மேலும், கட்டுமான பொருட்களின் விலை அதிகரித்துள்ளதால் இத்தொகையில் வீடுகட்டி முடிக்க முடியாமல் உள்ளனர். ஆகவே, கிராமப்புற ஏழை மக்களின் குடியிருப்பு திட்டத்திற்கான தொகையை உயர்த்தி 4 லட்சம் ரூபாயில் 800 சதுர அடியில் அனைத்து அடிப்படை வசதிகளுடன் கூடிய வீடுகள் கட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்.

### தலித் மக்கள் மேம்பாடு

- மத்திய மாநில அரசின் சிறப்பு உட்கூறு திட்டத்திற்கு ஒதுக்கப்படும் நிதியிலிருந்து 30 சதவீத நிதி தலித் உள்ளாட்சிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்

- சிறப்பு உட்கூறு திட்ட நிதியை பயன்படுத்தி தலித் மக்களுக்கு பாதுகாப்பான மாண்புடன் கூடிய குடியிருப்பு 5 லட்சம் மதிப்பில் கட்டிக் கொடுக்கப்பட வேண்டும்.

- ஒரு வருடத்தில் ஒரு பஞ்சாயத்திற்கு குறைந்தபட்சம் 59 தலித் பயனாளிகளுக்கு இக்குடியிருப்பு அமைத்துக்கொடுக்கப்பட வேண்டும். (50 x 5 லட்சம் = 2.50 கோடி)

- ஒரு வருடத்தில் 20 நிலமற்ற ஏழை தலித் குடும்பங்களுக்கு சிறப்பு உட்கூறு திட்ட நிதியிலிருந்து 2 ஏக்கர் நிலம் வாங்கி கொடுக்கப்பட வேண்டும். இந்நிலத்திற்கு பாசன வசதி, இலவச மின்சாரம் போன்றவை செய்து தரப்பட வேண்டும். இத்திட்டத்திற்கு ஒரு குடும்பங்களுக்கு 10 லட்சம் வீதம் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். (20 x 10 லட்சம் = 2கோடி)

### மதிப்பூதியம் :

ஊராட்சிமன்றப் பிரதிநிதிகளுக்கு மக்கள் சேவைக்கான அவர்களுடைய உழைப்பிற்கு ஊதியமாக குறைந்த பட்சம் ரூ.10,000/– வழங்கக் கோருகிறோம். புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட கிராம ஊராட்சித் தலைவர்களுக்கான பயிற்சி குறிப்பாக அவர்களின் அதிகாரங்கள், கணக்கு பராமரிப்பு, கூட்டங்கள் நடத்துதல், திட்டச் செயலாக்கம் போன்றவற்றிற்கு தேவையான பயிற்சிகள் ஒன்றிய அளவில் நடத்தப்பட வேண்டும்.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் நிதி ஒதுக்கீட்டை அதிகப்படுத்தி ஊராட்சி அரசாங்கத் தலைவர்களின் வேலைப் பளுவைக் குறைக்க வேண்டும்:

- ஊரக ஊதிய அமைப்பை ஒரு நிரந்தர தன்மை கொண்டதாக்கும் நோக்கில் கொண்டுவரப்பட்ட இத்திட்டத்தின்படி, தினக்கூலி பணி மேற்கொள்ளும் அனைவருக்கும் வேலை உறுதி செய்யப்பட வேண்டும். ஊதியத்தை கால தாமதமின்றி வழங்கவேண்டும். தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தில் நடைபெற்ற பணிகளை அளவீடு செய்வதற்கு 6 ஊராட்சிகளுக்கு ஒரு என்ஜினியர் என்பதால் பணியை அளவிட்டு கொடுப்பது காலதாமத–மாகிறது. இதனை சரிசெய்ய உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

- தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தில், பணியிடத்தில் செய்து தரப்படவேண்டும் என்று கூறப்பட்டுள்ள குடிநீர் வசதி, மருத்துவ வசதி, நிழற்குடை, குழந்தைகள் காப்பகம் போன்றவற்றை மாநில அரசின் நிதியிலிருந்து உடனடியாக செய்துத் தரப்பட வேண்டும்.

- பணிக்கு வரும் மக்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப போதுமான பணியாளர்கள் நியமிக்கப்பட வேண்டும்.

சட்டமன்ற மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சி நிதி: சட்டமன்ற மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் நாங்கள் கோருவது அவர்களது தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தினை ஊராட்சிகள் மூலமே செயல்படுத்த வேண்டும் என்பதே. சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர் நிதி, வளர்ச்சிப் பணிக்கு பயன்படுத்தப்படும்போதும் அந்தந்த ஊராட்சி மன்ற பிரதிநிதிகளை கட்டாயம் கலந்து ஆலோசித்து திட்டங்களை நிறைவேற்றவேண்டும்.

### மூன்றடுக்கு ஊராட்சிகளை இணைத்தல்:

மூன்றடுக்கு ஊராட்சிகளுக்குள் தொடர்பு ஏற்படுத்தப்பட வேண்டும் கிராமசபையிலிருந்து திட்டமிடல் துவங்கி அது கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம், மாவட்ட ஊராட்சிகளின் திட்டத்தால் தொகுக்கப்பட்டு மாவட்டத் திட்டமிடல் குழு மாவட்டத்திற்கான திட்டத்தைத் தயாரிக்கும் முறை கொண்டுவரப்பட வேண்டும். **வளர்ச்சிப் பணிகளுக்கு திட்டமிடல் மற்றும் நிதி ஒதுக்கீடுகள் குறித்த ஒட்டுமொத்த நடைமுறையும் ஊராட்சிகளின் மூன்றடுக்குகளுக்கும் தெளிவாக அரசு ஆணை மூலம் வழங்கப்பட வேண்டும். வட்டார வளர்ச்சி அலுவலகத்தின் அலுவலர்கள் மற்றும் அவர்களது சேவைகள் கிராம ஊராட்சியால் கோரப்பட்டால் தவிர இந்த நடைமுறையில் அவர்கள் எந்தப் பங்கும் வகித்தல் கூடாது. கிராம ஊராட்சியின் ஆண்டுத் திட்டத்தின் நகல் ஊராட்சி ஒன்றியத்திற்கு அனுப்பப்பட்டு மாவட்ட ஊராட்சியிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இந்த தொடர்பு ஒரு முக்கிய தேவையாதலால், தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994ல் மூன்றடுக்கு ஊராட்சியிலும் தொடர்பை ஏற்படுத்த தேவையான மாற்றங்கள் கொண்டுவருவது அவசியம்.**

### மாவட்ட ஊராட்சியை அதிகாரமுடையதாக்குவது:

மாவட்ட ஊராட்சிகளின் பொறுப்பு ஆலோசனை வழங்குவதாக மட்டும் இருப்பற்கு பதில் மாவட்ட ஊராட்சியானது ஊராட்சி அரசாங்கம் குறித்து முடிவு செய்யும் ஒரு அதிகார அமைப்பாக கருதப்பட்டு ஊராட்சிகளுக்கு தேவையான நிதி நிர்வாக பணியாளர்கள் அமர்த்தப்பட்டு, ஊரக வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கையின் கீழ் மற்றும் அதன் கீழ் வரும் அனைத்துத் தலைப்பு மற்றும் உப தலைப்புகளின் நிதிஒதுக்கீடுகளும் மாவட்ட ஊராட்சியிடம் ஒப்படைக்கப்படவேண்டும் எனப் பரிந்துரைக்கின்றோம்.

பொதுக் கல்வி, மருத்துவம், பொதுச் சுகாதாரம், குடிநீர் வழங்கல் துப்புரவு, வீட்டு வசதி, ஆதி திராவிடர், பழங்குடியினர் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன், சத்துணவு, சமூகப் பணிகள், ஊரக வளர்ச்சி சிறப்புத் திட்டங்கள், தரிசு நில மேம்பாடு, ஊரக வேலைவாய்ப்பு, ஏனைய ஊரக வளர்ச்சித் திட்டங்கள், ஆதி திராவிடர்களுக்கான சிறப்புக் கூறுகள் திட்டம், சிறுபாசனம், நவீன எரிசக்தி ஆதாரங்கள், உள்ளாட்சி மன்றங்களுக்கும், ஊராட்சி நிறுவனங்களுக்கும் ஒதுக்கீடுகளும், ஊரக வளர்ச்சித் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு போன்றவை அந்தந்த மாவட்டத்தில் மாவட்ட ஊராட்சியால் திட்டமிடப்பட்டு, செயல்படுத்தப்பட வேண்டும்.

### கேரளா ஊராட்சிகள்

கேரளா ஊராட்சிகளுக்கு பல வகையான அதிகாரங்களும், அதிகமான நிதி ஒதுக்கீடும் (40% க்கும் கூடுதலான) வழங்கப்பட்டுள்ளது. கிராம சபை மற்றும் வார்டு சபைகளுக்கு வரவு செலவுத்திட்டம், தணிக்கை அறிக்கை, பல்வேறு திட்டங்கள் பொது வேலைக்கான திட்ட மதிப்பீடுகள், பயனாளிகள் பட்டியல் இறுதி செய்தல் உள்ளிட்ட பலவற்றை விவாதிக்க, முடிவு எடுக்க அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது இது தவிர கிராம வளர்ச்சித் திட்டங்களில் எதற்கு முன்னுரிமை அளிப்பது, அதன் பிரதிநிதிகளைத் தேர்வு செய்வது நிபுணர்கள் உதவியுடன் திட்ட அறிக்கை தயாரிப்பது, வளர்ச்சி அறிக்கைகளைத் தயாரிப்பது ஆகியவற்றில் முடிவு செய்யும் அதிகாரமும் கிராம சபைகளுக்கு உள்ளது.

தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சித் தலைவர்களை பதவி நீக்கம் செய்யும் அதிகாரம் அரசு அதிகாரிகளுக்கு வழங்கப்படவில்லை மாறாக, நீதிபதிகள் உள்ளிட்டவர்களைக்கொண்ட 'ஆம்பட்ஸ்மென்' குழு அமைக்கப்பட்டு அந்தக் குழுவிற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. 'ஆம்பட்ஸமென்' குழுவின் கருத்து கேட்காமல் ஊராட்சிகள் நிறைவேற்றும் தீர்மானங்களை மாற்றவோ, ரத்துசெய்யவோ அரசுக்கு அதிகாரம் இல்லை.

மாவட்ட ஊராட்சிகளுக்கு அதிக அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளது. மாவட்ட திட்டமிடல் குழுவின் தலைவர் மாவட்ட ஊராட்சித் தலைவர் தான். மாநில அரசு, மாநில அளவிலான திட்டங்களை தயாரிக்கும் போது மாவட்ட திட்டமிடல் குழுவின் பரிந்துரைகளையும் முன்மொழிதல்களையும் கண்டிப்பாக கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். மாநில அரசின் திட்டங்கள் அமல்படுத்தப்படுவதை கண்காணிக்க, மதிப்பீடு செய்ய மாவட்ட திட்டமிடல் குழுவிற்கு அதிகாரம் உண்டு.

மூன்றடுக்கு ஊராட்சிகளிடையே தொடர்பு உண்டு. கிராம ஊராட்சித் தலைவர்கள், ஒன்றிய ஊராட்சிக் குழுவில் உறுப்பினராகவும், ஒன்றிய ஊராட்சித் தலைவர்கள் மாவட்ட ஊராட்சிக் குழுவில் உறுப்பினர்களாகவும் உள்ளனர். ஊராட்சித் தலைவர்களுக்கு மாத ஊதியமாக சுமார் ரூ.5000/– வரை வழங்கப்படுகிறது.

**தமிழக ஊராட்சி அரசாங்கப் பெண் தலைவர்கள் கூட்டமைப்பு**

**தமிழ்நாடு தலித் உள்ளாட்சி மன்றத் தலைவர்கள் கூட்டமைப்பு**

**ஊராட்சித் தலைவர்கள் கூட்டமைப்புகளின் சம்மேளனம் – தமிழ்நாடு**

# மொத்த வருவாயில் 30 விழுக்காட்டை உள்ளாட்சிகளுக்கு ஒதுக்குக

– இரா. அண்ணாதுரை

மாநில அரசின் மொத்த வரி வருவாயில் 30 விழுக்காட்டை உள்ளாட்சிகளுக்கு ஒதுக்கவேண்டும் என்று சட்டப்பேரவையில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் இரா. அண்ணாதுரை கேட்டுக் கொண்டார். திங்களன்று உள்ளாட்சித்துறை மானியக் கோரிக்கை மீது நடைபெற்ற விவாதத்தில் அவர் பேசியது வருமாறு:

நகரமயமாதலில் தமிழ்நாடு வேகமாக வளர்ந்து வரும் மாநிலம் ஆகும். இந்தியா அளவில் 3வது இடத்தில் உள்ள இந்த மாநிலம் அநேகமாக முதலிடத்தில் வருவதற்கான வாய்ப்புகள் உள்ளதாக கொள்கை விளக்கக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது. மாநகராட்சி பகுதிகளில் 57% மக்களுக்கும், நகராட்சி பகுதியில் 32% மக்களுக்கும், பேரூராட்சிகளில் 16% மக்களுக்கு மட்டுமே சுகாதாரமான கழிப்பிட வசதி உள்ளது. இதில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். துப்புரவுப் பணியாளர்களின் பணி நியமனங்களை அதிகப்படுத்த வேண்டும்.

தமிழ்நாட்டில் 40ஆயிரம் காலிப் பணியிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மாநில அரசு கூறியுள்ளது. உள்ளாட்சிகளில் காலியாக உள்ள 20ஆயிரத்திற்கும் மேற்பட்ட இடங்களையும் நிரப்ப வேண்டும். மாநகராட்சி, நகராட்சி மருத்துவமனைகள் மேம்பாடு போதிய உபகரணங்கள் வாங்குவது, டெங்கு, மலேரியா உள்ளிட்ட கொசுக்கள் மூலம் பரவும் நோய்களை கட்டுப்படுத்த எதிர் காலத்தில் கூடுதல் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். உதாரணத்திற்கு மதுரை மாநகராட்சியில் 17 மகப்பேறு மருத்துவமனைக்கு ஒரே ஆம்புலன்ஸ்தான் உள்ளது. சி.டி. ஸ்கேன் வைப்பது என முடிவு செய்த பின்னரும் கூட அதற்கு தேவையான கட்டிட வசதி இல்லாத நிலை நீடிக்கிறது. பொதுவாக பருவமழை தவறிவிட்ட நிலையில் கோடைக்காலம் துவங்கியுள்ள நிலையில் தமிழகம் முழுவதும் குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்படுவதற்கான ஆபத்து உள்ளது. எனவே, போர்க்கால அடிப்படையில் உரிய நடவடிக்கை எடுத்து தேவையான இடங்களில் ஆழ்துளை கிணறுகள் உள்ளிட்டவைகள் அமைத்திட வேண்டும். திருப்பூர் மாநகராட்சி குடிநீர் பிரச்சனையைத் தீர்க்க மேட்டுப்பாளையத்திலிருந்து தண்ணீர் கொண்டு வந்து புதிய நான்காவது குடிநீர் திட்டத்தை உருவாக்க வேண்டும். திருப்பூர் மேம்பாட்டுக் கழகம் மூலம் குடிநீர் விநியோகம் நடைபெறும் பகுதிகளுக்கு அரசு ஏற்கெனவே நிர்ணயித்த விலையில் கூடுதல் குடிநீர் ஒதுக்கீடு செய்ய வேண்டும். மதுரை மாநகராட்சிக்கு முதலமைச்சர் ஏற்கெனவே 250 கோடி ரூபாய் வழங்கி 116 கோடி ரூபாய் வரை பணிகள் நடைபெற்று வருகிறது. 2013–14ல் இரண்டு பாலத்திற்கு 130 கோடி ரூபாயை தமிழக முதல்வர் வழங்கியிருக்கிறார். அதற்காக மதுரை மாநகராட்சி மக்கள் சார்பில் அவருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். மதுரை மாநகராட்சியில் கோச்சடை முதல் விரகனூர் வரை 8 கி.மீ. தூரத்தில் 67 இடங்களில் மதுரை மாநகராட்சி நிர்வாகம் கழிவுநீரை வைகை ஆற்றில் பல ஆண்டுகளாக விட்டு வருகிறது. இதனால் நிலத்தடி நீர் நச்சுத் தன்மை அடைந்துள்ளது. எனவே, சுற்றுச்சூழல் பாதிக்கப்பட்டுள்ளது. தற்காலிகமாக இதனை தடுத்து வைகையாற்றில் இருபுறமும் வாய்க்கால் கட்டி கழிவுநீரை சுத்திகரிக்கும் நிலையத்திற்கு கொண்டு செல்ல வேண்டும். 2006லிருந்து கான்ட்ராக்ட் பணி, அதன் பின் தினக்கூலியாக மதுரை மாநகராட்சியில் 600 பேருக்கும் மேல் பணியாற்றி வருகிறார்கள். இவர்களை நிரந்தரப்படுத்த சிஐடியு சார்பில் வழக்கு தொடுக்கப்பட்டது.

இதையடுத்து மதுரை மாநகராட்சியில் 309 பேரை துப்புரவு தொழிலாளர்களுக்கு நிரந்தரப்படுத்த தொழிலாளர் ஆய்வாளர் உத்தரவிட்டுள்ளார். அரசு தலையிட்டு இவர்களை நிரந்தரப்படுத்துவதற்கான உத்தரவுகளை வழங்கிட வேண்டும். மதுரை மாநகராட்சி நிர்வாகம் வெளிப்படைத்தன்மையோடு சிறந்த நிர்வாகமாக செயல்படுவதை உறுதிப்படுத்த வேண்டும்.

**உள்ளாட்சித்துறை அமைச்சர் கே.பி.முனுசாமி:** தமிழகத்தை பொறுத்தவரையில் அதிமுக அரசு பொறுப்பேற்ற கடந்த 23 மாதத்தில் எல்லா நிர்வாகமும் வெளிப்படையாக நடந்து வருகிறது.

**அண்ணாதுரை:** இந்திய அரசியல் சட்டத்தால் மூன்றாவது அரசாங்கமாக உள்ளாட்சிகள் அங்கீகரிக்கப்பட்டு இரண்டு பத்தாண்டுகள் முடிந்துள்ளன. உள்ளாட்சி மீது மத்திய, மாநில அரசுகளின் கட்டுப்பாடுகள் அதிகம் உள்ளது. குறிப்பாக ஊராட்சி மீது ஊரக வளர்ச்சித்துறை கட்டுப்பாடு அதிகமாக உள்ளது. இது ஊராட்சி சுயமாக இயங்குவதற்கு தடையாக உள்ளது. இதை தவிர்க்கும் வகையில் ஊரக வளர்ச்சியிலிருந்து ஊராட்சித் துறையைப் பிரித்து ஊரக, நகர

உள்ளாட்சிகளுக்கு எனத் தனியானதொரு ஒரு அமைச்சகம் உருவாக்கப்பட வேண்டும். பெருவாரியான ஊராட்சிகளில் சொந்த வரி மற்றும் வரியில்லாத வருவாய் மிகவும் சொற்பமே. முத்திரைத்தாள் மேல்வரி, கேளிக்கை வரி, கனி மங்கள் இருக்கக் கூடிய இடங்களில் சீனியரேஜ்உள்ளிட்ட ஒப்படைக்கப்பட்ட வருவாய் குறைவாகவே உள்ளது.

**இந்திய அரசியல் சட்டத்தால் மூன்றாவது அரசாங்கமாக உள்ளாட்சிகள் அங்கீகரிக்கப்பட்டு இரண்டு பத்தாண்டுகள் முடிந்துள்ளன. உள்ளாட்சி மீது மத்திய, மாநில அரசுகளின் கட்டுப்பாடுகள் அதிகம் உள்ளது. குறிப்பாக ஊராட்சி மீது ஊரக வளர்ச்சித்துறை கட்டுப்பாடு அதிகமாக உள்ளது.**

மேற்சொல்லும் ஒப்படைக்கப்பட்ட வரி வருவாயில் கடந்த காலங்களில் மூன்றில் ஒரு பங்கு மட்டுமே ஊராட்சிக்கு வழங்கப்பட்டுள்ள நிலையை மாற்றி தற்போது மூன்றில் இரண்டு பங்கு வழங்கப்பட்டு வருவது வரவேற்கத்தக்கது. ஒப்படைப்பு வருவாயை 'தாய் திட்டம்' உள்ளிட்ட தமிழக அரசின் திட்டங்களுக்கு திசை திருப்பாமல் முழுவதுமே உள்ளாட்சிகளுக்கு வழங்க வேண்டும். மேலும் ஒப்படைப்பு வருவாயை திட்டம் சாரா செலவுகளுக்கு திசை திருப்பக்கூடாது.

குறிப்பாக வாகனம் வாங்குவது உள்ளிட்டவை இதில் அடங்கும். 1997ம் ஆண்டு முதல் மாநில நிதி ஆணையம் பரிந்துரையிலேயே மொத்த மாநில வரிவருவாயில் முதலாண்டு 8%, தொடரும் ஆண்டுகளில் ஆண்டுக்கு ஒரு சதவிகிதம் அதிகப்படுத்திட பரிந்துரைக்கப் பட்டிருந்தது. பரிந்துரை முழுமையாக ஏற்றுக்கொள்வதாக அப்போதைய தமிழக அரசு சட்டமன்றத்தில் உறுதியளித்தபோதிலும் நிதி ஆணைய பகிர்வு உயர்த்தப்படாமல் 8 சதவிகிதத்திலேயே நின்று விட்டது. தற்போதுதான் 9 சதவிகிதமாகவும், இந்தாண்டு 10 சதவிகிதமாக உயர்த்தப்பட்டு அறிவிக்கப்பட்டுள்ளது. இது போதுமானதாக இல்லை. இந்த நிதிப் பகிர்வை ஊராட்சிகளுக்கு நேரிடையாக வழங்க வேண்டும். வேறு எந்த மாநிலத் திட்டங்களுக்கும் பயன் படுத்துவதை தவிர்க்க வேண்டும்.

உள்ளாட்சிகளுக்கு கேரளத்தில் 40 சதவிகிதம் நிதி ஒதுக்கப்படுகிறது, நமது மாநிலத்தில் 30 சதவிகித மாக உயர்த்தி வழங்கவே வண்டும். ஊராட்சிகளை கட்டுப்படுத்தும் தமிழக ஊராட்சிகள் சட்டத்தின் படி ஊராட்சிகளின் ஆய்வாளர் பணி மாவட்ட ஆட்சியரிடம் ஒப்படைக் கப்பட்டுள்ளது. இது தவிர்க்கப்பட வேண்டும். மாவட்ட நிர்வாகம் எனும் பரந்துபட்ட பொறுப்பை வகிக்கும் மாவட்ட ஆட்சியரால், ஊராட்சிகளின் ஆய்வாளர் பணியை, ஊராட்சி சுய அரசாங்கத்தை நிலைநாட்டிட பயன்படுத்திடாத நிலையே தொடர்கிறது. மாறாக, ஊராட்சிகளை கண்காணிக்கும் அதிகாரத்தை உதவி இயக்குநர் (ஊராட்சிகள்), உதவி இயக்குநர் (தணிக்கை), வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சிகள்), துணை வட்டார வளர்ச்சி அலுவலர் ஆகியோரிடம் அரசாணைகள் மூலம் வழங்கியுள்ளனர். ஊராட்சி நிர்வாகம் சம்மந்தப்பட்ட பல்வேறு பிரச்சனைகளில், ஊராட்சிகளின் ஆய்வாளர் தெளிவாக ஆராயாது, மேற்சொன்ன அலுவலர்களின் மதிப்பீட்டின் அடிப்படைலேயே முடிவெடுக்கின்றனர்.

இதன் காரணமாக கிராம ஊராட்சிகள், கிராம ஊராட்சித் தலைவர்கள் பெரும் பாதிப்பிற்குள்ளாகி வருகின்றனர்.

**அமைச்சர் கே.பி.முனுசாமி:** ஊராட்சி மன்றத் தலைவர்களுக்கு நிறைய சுதந்திரம் இருக்கிறது. அப்படி கொடுக்கப்பட்ட சுதந்திரம் வரையறுக்கப்பட வேண்டும் என்பதற்காகத்தான் தணிக்கை இருக்கிறது. ஒரு மனிதனுக்கு அளவுக்கு அதிகமான சுதந்திரம் கொடுத்து அவர் விருப்பத்திற்குவிட்டால் அந்த சுதந்திரம் சர்வாதிகாரியாகமாறிவிடும். சுதந்திரம் அளவுக்கு இருக்கவேண்டும் என்பதற்காகத் தான் இவ்வளவு தணிக்கை இருக்கிறது.

**அண்ணாதுரை:** வறட்சியால் பாதிக்கப்பட்ட 31 மாவட்டங்களில் 100ல் இருந்து 150 நாட்களாகவும், தினக்கூலியும் ரூ. 148/–ஆக உயர்த்தப்பட்டுள்ளது. மேலும் இந்த திட்டத்தின்படி ரூ.6341.80 கோடியில் ரூ.42.85 கோடி மனித சக்தியின் ஆட்கள் உருவாக்கப்படும் என்பது மகிழ்ச்சிக்குரியது. 100 நாள் வேலைத்திட்டத்தில் வழங்கப்படும் கூலி குறைவாக உள்ளது. அதையும் அதிகப்படுத்தவேண்டும். எங்கும் ரூ.132 கூலி வழங்கப்படவில்லை. மேலும் பேரூராட்சிக்கும் இந்த திட்டத்தை விரிவுபடுத்த வேண்டும்.

**அமைச்சர் கே.பி.முனுசாமி:** ஒரு நல்ல கருத்தை பொதுவுடைமை கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் கூறியிருக்கிறார். தமிழகத்தில் எந்த திட்டங்கள் வந்தாலும் அந்த திட்டங்களை முதல்வர் முழுமையாக செயல்படுத்தி வருகிறார். கொள்கை ரீதியாக மாறுபட்ட கருத்துக்களை கொண்ட முதல்வர்கள் பல்வேறு மாநிலங்களில் உள்ளனர். அப்படி உள்ளவர்களில் தொழிலாளர் களுக்காக பாடுபடுகிறோம் என்று சிலர் சொல்லிக்கொள்கிறார்கள். உண்மையாக தொழிலாளர் நலனில் தமிழக முதல்வர்

தான் அக்கறையுடன் உள்ளார். எனவே தான் மத்திய அரசின் மகாத்மா காந்தி ஊரக வேலை உறுதித்திட்டத்தில் தமிழகத்தில் 40 கோடி பேர் உழைக்கிறார்கள். மத்திய அரசு வகுத்த மொத்த மனித நாட்களைவிட அதிகமாக உள்ளது. மேற்கு வங்கத்தில் இந்த நாட்கள் இதைவிட குறைவு. மற்ற மாநிலங்களிலும் இது குறைவாகத்தான் உள்ளது. மத்திய அரசு எந்தளவிற்கு தமிழகத்தை வஞ்சிக்கிறது என்பது தெரியும். உறவு எப்படி இருந்தாலும் மாநில அரசின் செயல்பாட்டினால் சட்டத்தின் வாயிலாக கொடுக்கவேண்டிய நிதியை கட்டாயம் கொடுக்கவேண்டும் என்ற நிலையை மத்திய அரசுக்கு முதல்வர் உருவாக்கியிருக்கிறார். இந்தியா முழுவதும் மத்திய அரசு இந்த திட்டத்திற்கு ரூ.31ஆயிரம் கோடி ஒதுக்கியுள்ளது. அதில் சுமார் ரூ.6 ஆயிரத்தி 345 கோடியை தமிழகத்திற்கு ஒதுக்கியுள்ளது. காரணம் உழைக்கின்ற வர்க்கம் இங்கு இருக்கிறது. 40 கோடி மக்கள் உழைப்பதால் கடந்த ஆண்டு ரூ.5430 கோடியை ஒதுக்கிய மத்தியரசு இந்தாண்டு ரூ.6345 கோடியை ஒதுக்கியுள்ளது. ஒட்டுமொத்தமாக ஒதுக்கப்பட்ட தொகையில் இது 19.1 விழுக்காடாகும்.

**அண்ணாதுரை :** பிரதம மந்திரி கிராம சாலை வசதி திட்டத்தின் கீழ் 4 ஆண்டுகளுக்கு பின்னர் நிதி பெறப்பட்டுள்ளது. ஆனால், கடந்த கால திமுக அரசு இந்த நிதியை கொண்டு சாலைகள் போட எந்த முயற்சியும் எடுக்கவில்லை. முதல்வர் முன்முயற்சி காரணமாக இதற்கான நிதியை பெற்றுள்ளது. ஊராட்சி சாலைகளில் மண் சாலை, செஞ்சரள் சாலை, கப்பிச்சாலை ஆகியவற்றை தார்ச்சாலையாகவும் கான்கீரிட் சாலையாக மாற்றிடும் வகையில் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும். கல்வி நிறுவனங்களிலிருந்து வீட்டு வரி, சொத்து வரி வசூல் செய்வதில் 2011–12ல் 16.93 விழுக்காடு வரிகேட்பும் வசூல் என்பது 14.93 விழுக்காடாகவும் நிலுவை 1.25 விழுக்காடாகவும் உள்ளது. 2012–13ல் 20.05ம் வசூல் என்பது 14.89 விழுக்காடாகவும் நிலுவை என்பது 3.96 விழுக்காடாகவும் உள்ளது. கல்வி கட்டணம் பல மடங்கு உயர்த்தப்பட்டுள்ள நிலையில் வரிகேட்பு மட்டும் ஆண்டுக்கு 10 சதம் உயர்வு என்ற அளவிலேயே உள்ளது. இது அதிகரிக்கப்பட வேண்டும்.

நிலுவையில் உள்ள தொகைகள் வசூலிக்கப்பட வேண்டும். அந்த தொகையை உள்ளாட்சிகளுக்கு பயன்படுத்த வேண்டும். மத்திய மாநில அரசின் சிறப்பு உட்கூறுத் திட்டத்திற்கு ஒதுக்கப்படும் நிதியிலிருந்து 30 சதவிகிதம் நிதியை தலித் உள்ளாட்சிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். சிறப்பு உட்கூறுத்திட்ட நிதியை பயன்படுத்தி தலித் மக்களுக்கு பாதுகாப்பான குடியிருப்புகளை கட்டிக் கொடுக்க வேண்டும். ஒரு வருடத்தில் ஒரு பஞ்சாயத்துக்கு 50 தலித் பயனாளிகள் என்ற அளவில் இந்த குடியிருப்புகள் அமைத்துக் கொடுக்கப்பட வேண்டும். ஒரு வருடத்தில் 20 நிலமற்ற ஏழை தலித் குடும்பங்களுக்கு சிறப்பு உட்கூறுத்திட்ட நிதியிலிருந்து 2 ஏக்கர் நிலம் வாங்கிக் கொடுக்கப்பட வேண்டும்.

**இந்த நிதிப் பகிர்வை ஊராட்சிகளுக்கு நேரிடையாக வழங்க வேண்டும். வேறு எந்த மாநிலத் திட்டங்களுக்கும் பயன் படுத்துவதை தவிர்க்க வேண்டும். உள்ளாட்சிகளுக்கு கேரளத்தில் 40 சதவிகிதம் நிதி ஒதுக்கப்படுகிறது, நமது மாநிலத்தில் 30 சதவிகித மாக உயர்த்தி வழங்கவே வண்டும்.**

**அமைச்சர் கே.பி. முனுசாமி:** இங்கே மனித உழைப்பு நாட்கள் 20.03.2013 வரை தமிழகத்தில் 40கோடி மனித சக்தி நாட்கள் உருவாக்கப்பட் டுள்ளன. இந்த மனித நாட்கள் உருவாக்கப்பட்டதை அளவு கோலாக வைத்து வரும் நிதியாண்டில் மத்திய அரசு 42.85 மனித சக்தி நாட்களை உருவாக்கவேண்டும் என்ற இலக்கை நிர்ணயித்துள்ளது. ஆனால் பிற மாநிலங்களை பொறுத்தவரை ஆந்திரா 31 கோடி, ராஜஸ்தான் 21 கோடி, தொழிலாளர்கள் நிறைந்த மாநிலமான மேற்கு வங்கத்தில் 23 கோடி, இடது சாரி அரசியல் வலுவாக உள்ள கேரளாவில் 9 கோடி, கர்நாடகம் 7 கோடி, குஜராத் 3 கோடியாகும். எந்தப் பணியானாலும் அதில் மக்களை ஈடுபடுத்தக் கூடிய மாநிலமாக தமிழகம் உள்ளது. எனவேதான் அதிக மனிதசக்தி நாட்கள் இங்கு உள்ளன.

**அண்ணாதுரை:** சிறப்பு உட்கூறு திட்டத்தில் இருந்த தலித் மக்களுக்கு நிலம் வாங்கித்தரும் போது, நிலத்திற்கான பாசன வசதி, இலவச மின்சாரம் செய்துதரப்பட வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட தலித் ஊராட்சித் தலைவர்கள் சுதந்திரமாக செயல்படவும் திறமைகளை வளர்த்துக் கொள்வதற்குமான பயிற்சியை மாநில அரசு வழங்கவேண்டும். சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதி தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் 2 கோடி திட்டப் பணிகளில் கட்டிடப் பணிகளை எந்த ஒரு ஒப்பந்ததாரரும் டெண்டர் எடுப் பதற்கு முன்வர மறுக்கிறார்கள். இதனால் உரிய காலத்தில் கட்டிடங்களுக்கு ஒதுக்கப்படும் பணிகள் முடி வடைவதில்லை. எனவே, இது குறித்து மறு மதிப்பீடுகளை உருவாக்க வேண்டும்.

**– ஆதாரம்: தீக்கதிர், 2.4.13**

## நேரடிப் பணப்பட்டுவாடா திட்டம்:

# பட்டினிச் சாவுக்கான நுழைவுச் சீட்டு!

### "உங்கள் கையில் உங்கள் பணம்" என்ற கவர்ச்சிகரமான சொல்லடுக்கின் பின்னே, ரேஷன் கடைகளை ஒழித்துக் கட்டும் தீயநோக்கம் மறைந்துள்ளது

– செல்வம்

முதியோர் உதவித் தொகை, கல்வி உதவித் தொகை போன்ற சில அரசு உதவித் திட்டங்கள் பண வடிவிலும், அரிசி, கோதுமை, மண்ணெண்ணெய், எரிவாயு உருளை, டீசல், உரம் போன்றவைகளுக்கான மானியம் பொருள் வடிவிலும் வழங்கப்படும் தற்போதைய நடைமுறையை மாற்றி, அனைத்து மானியங்களையும், நல உதவித் திட்டங்களையும் பண வடிவில் மட்டுமே மக்களுக்கு வழங்கத் திட்டமிட்டுள்ளது, மைய அரசு. நேரடிப் பணப்பட்டுவாடா திட்டம் எனப் பெயரிடப்பட்டுள்ள இத்திட்டம், உங்கள் பணம் உங்கள் கையில் எனக் கவர்ச்சிகரமான முறையில் மக்கள் மத்தியில் அறிமுகப்படுத்தப்படுகிறது. இதனை முதற்கட்டமாக குறிப்பட்ட 51 மாவட்டங்களில் எதிர்வரும் ஜனவரி 1, 2013 முதல் அறிமுகப்படுத்தவும், 2013–ஆம் ஆண்டின் இறுதிக்குள் நாடெங்கிலும் கொண்டுவரவும் மைய அரசு திட்டமிட்டுள்ளது.

நல்ல பாம்பு படமெடுத்து ஆடுவதைப் பார்ப்பது அழகாகவும் கவர்ச்சியாகவும் தெரிந்தாலும், அதனைக் கையிலெடுத்துக் கொஞ்ச முடியாது. அதனைப் போன்றதுதான் இந்தத் திட்டமும். உங்கள் பணம் உங்கள் கையில் என்ற இந்தக் கவர்ச்சிகரமான சொல்லடுக்கின் பின்னே, பொது விநியோகத் திட்டத்தை, அதாவது ரேஷன் கடைகளை ஒழித்துக் கட்டும் அபாயம் மறைந்திருக்கிறது.

தனியார்மயம்–தாராளமயத்தை அறிமுகப்படுத்திய காலந்தொட்டே ரேஷன் கடைகளின் மூலம் மக்களுக்குக் கிடைத்துவரும் அரைகுறையான உணவுப் பாதுகாப்பை ஒழித்துக் கட்டுவதை ஆட்சியாளர்கள் ஒரு கொள்கையாகவே கடைப்பிடித்து வருகின்றனர். இக்கொள்கையின்படி ரேஷன் அட்டைகள், வெள்ளை அட்டை, பச்சை அட்டை எனப் பிரிக்கப்பட்டு, அனைவருக்குமான பொதுவிநியோகத் திட்டம் பெரும்பாலான மாநிலங்களில் ஒழித்துக்கட்டப்பட்டது. குறைந்த விலையில் உணவுப் பொருட்களைப் பெற்றுவரும் வறிய மக்களின் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு, உணவுப் பாதுகாப்புச் சட்டம் என்ற வஞ்சகமான சட்டத்தைக் கொண்டு வந்தது, மன்மோகன்–சோனியா கும்பல். இதற்காகவே, நகர்ப்புறங்களில் நாளொன்றுக்கு 29/– ரூபாய்க்கு மேலும், கிராமப்புறங்களில் 23/– ரூபாய்க்கு மேலும் கூலி பெறுவோர் அனைவரும் வறுமைக் கோட்டுக்கு மேலே வாழ்வதாக வரையறுத்தது, திட்ட கமிஷன். இந்நடவடிக்கைகளின் தொடர்ச்சியாகத்தான் நேரடிப் பணப்பட்டுவாடாத் திட்டம் அறிமுகப்படுத்தப்படுகிறது.

எனினும், நேரடி பணப்பட்டுவாடாத் திட்டத்தின் கீழ் தற்போதைக்கு 29 நலத் திட்டங்களை மட்டுமே கொண்டுவரப் போவதாகவும் அரிசி, கோதுமை உள்ளிட்ட ரேஷன் பொருட்களுக்கு வழங்கப்படும் மானியத்தை இத்திட்டத்தின் கீழ் உடனடியாகக் கொண்டு வரப் போவதில்லை என்றும் மைய அரசு அறிவித்திருக்கிறது. இது, மக்கள் மத்தியில் இந்தத் திட்டம் எப்படிபட்ட எதிர்வினையைத் தோற்றுவிக்கிறது என ஆழம் பார்க்கும் தந்திரம் தவிர வேறல்ல.

இந்தத் திட்டம் முழுமையாக அமலாக்கப்படும்போது, ரேஷன் கடைகள் பெயரளவில் இருக்கும். ஆனால், அக்கடைகளின் ஊடாக அரிசி, கோதுமை, மண்ணெண்ணெய் போன்ற அத்தியாவசியப் பொருட்களை மானிய விலையில் பொதுமக்களுக்கு விநியோகிப்பது ரத்து செய்யப்பட்டு, அவை தனியார் மளிகைக் கடைகள் போல இயங்கும். இத்திட்டத்தின்படி ரேஷன் அட்டைதாரர்கள் தற்பொழுது மானிய விலையில் வழங்கப்படும் பொருட்களைச் சந்தை விலையில் ரேஷன் கடைகளில் வாங்கிக் கொள்ள வேண்டும். அவர்கள் என்னென்ன பொருட்களை வாங்கியிருக்கிறார்கள் என்பது பதிவு செய்யப்பட்டு அரசிற்கு அனுப்பப்படும். அதன் பின், அவர்கள் வாங்கிய அரிசி, கோதுமை, மண்ணெண்ணெய், பாமாயில் போன்ற பொருட்களுக்கான மானியம், அவர்களது வங்கிக் கணக்கில் போடப்படும்.

உதாரணத்திற்குச் சொன்னால், ஒருவர் ஒரு கிலோ அரிசியை முப்பது ரூபாய் என்ற சந்தை விலைக்கு வாங்குவதாகவும், அந்த அரிசியின் மானிய விலை மூன்று ரூபாய் எனவும் வைத்துக் கொண்டால், பொது மக்கள் மானிய விலையைவிடக் கூடுதலாகச் செலுத்திய தொகையை (ரூ.27/–), அரசு அவர்களுக்குத் திருப்பித் தரும். இந்த மானியத்தைப் பெறுவதற்குப் பொது மக்கள் ஒவ்வொருவரும் ஆதார் அடையாள அட்டையையும்,

வங்கிக் கணக்கையும் பெற்றிருக்க வேண்டும். எனினும், இந்தப் பணப்பட்டுவாடா பொதுமக்கள் ரேஷன் கடையில் பொருட்களை வாங்கிய இரண்டு மூன்று நாட்களுக்குள்ளேயே நடந்துவிடாது. குறைந்தபட்சம் மூன்று மாதத்திற்கொரு முறைதான் மானியம் பொதுமக்களின் வங்கிக் கணக்குக்கு மாற்றப்படும்.

தற்பொழுது ரேஷன் கடைகளில் மானிய விலையில் வழங்கப்படும் உணவுப் பொருட்களையும், 10 லிட்டர் மண்ணெண்ணெயையும் ஒரே தவணையில் வாங்குவதற்கே பணத்தைப் புரட்ட முடியாமல் கூலித் தொழிலாளர்களும் கிராமப்புற மக்களும் தட்டுத் தடுமாறுவதோடு, பல நேரங்களில் பொருட்களை வாங்காமலும் விட்டுவிடுகிறார்கள். இப்படிபட்ட நிலையில் வறியவர்களையும் ஏழைகளையும் சந்தை விலை கொடுத்து உணவுப் பொருட்களை வாங்க வேண்டுமென்ற கட்டாயத்திற்குள் தள்ளுவது, ரேஷன் பொருட்களைப் பெறுவதிலிருந்தே அவர்களை ஒதுக்கி வைத்துவிடும். இத்திட்டம் பரிசோதனை முறையில் நடத்தப்பட்ட டெல்லியிலும், ராஜஸ்தானிலும் கிடைத்த அனுபவங்கள் ஏழைகள் ஒதுக்கப்பட்டதை நிரூபித்திருக்கின்றன.

இராஜஸ்தான் மாநிலம் ஆல்வார் மாவட்டத்தில் அமைந்துள்ள கோட்காசிம் என்ற பகுதியில் ரேஷன் கடைகளின் மூலம் மண்ணெண்ணெய் வழங்குவது பரிசோதனையின் அடிப்படையில் நேரடிப் பணப்பட்டுவாடா திட்டத்தின் கீழ் கடந்த ஆண்டு கொண்டுவரப்பட்டது. இதன்படி, மானிய விலையில் ஒரு லிட்டர் ரூ.15/–க்கு விற்கப்பட வேண்டிய மண்ணெண்ணெய் ரேஷன் அட்டைதாரர்களுக்கு சந்தை விலையில் (ஒரு லிட்டர் ரூ.50/–க்கு) விற்கப்பட்டது. இத்திட்டம் அமலுக்கு வந்த மூன்று மாதங்களுக்குள்ளாகவே ரேஷன் கடைகளில் மண்ணெண்ணெய் விற்பனை அதளபாதாளத்துக்குச் சரிந்தது. அப்பகுதியிலுள்ள அடித்தட்டு வர்க்கத்தைச் சேர்ந்த மக்களுக்குச் சந்தை விலையைக் கொடுத்து மண்ணெண்ணெய் வாங்கிக் கொள்வது கட்டுப்படியாகாமல், அவர்கள் மண்ணெண்ணெய் வாங்குவதையே நிறுத்திவிட்டதால்தான் இச்சரிவு ஏற்பட்டது.

அப்பகுதியைச் சேர்ந்த தினக்கூலியான பச்சன் சிங், கடந்த ஆண்டு ஜனவரி தொடங்கி ஏப்ரல் முடிய 1,000 ரூபாய்க்கு மண்ணெண்ணெய் வாங்கியிருக்கிறேன். ஆனால், ராஜஸ்தான் கிராமிய வங்கியில் உள்ள எனது கணக்கில் இதுவரை ஒரு பைசாகூட மானியமாக வரவாகவில்லை. இனியும் அதிக விலை கொடுத்து மண்ணெண்ணெய் வாங்க வழியில்லாததால் விறகு வாங்கத் தொடங்கி விட்டேன் என்கிறார்.

கோட்காசிம் பகுதியிலுள்ள புர் கிராமத்தைச் சேர்ந்த பத்ரம் என்பவர், ரேஷன் கார்டு எனது தந்தையின் பெயரிலுள்ளது. வங்கிக் கணக்கோ எனது பெயரில் உள்ளது. அரசு அதிகாரிகள் இதைக் காட்டி எனக்கு மானியம் வழங்க மறுப்பதால், நான் மண்ணெண்ணெய் வாங்குவதை நிறுத்திவிட்டேன் என்கிறார்.

இப்படிபட்ட காரணங்களால்தான் அப்பகுதியில் மண்ணெண்ணெய் விற்பனை சரிந்து போனது என்பதை முதலாளித்துவப் பத்திரிகைகள் கூட அம்பலப்படுத்திய பிறகும், அரசோ, போலி ரேஷன் கார்டுகளும் மண்ணெண்ணெய் கடத்தலும் ஒழிந்ததால்தான் இச்சரிவு ஏற்பட்டிருப்பதாகவும், இதன் மூலம் மண்ணெண்ணெய்க்கு வழங்கப்பட்டு வந்த மானியத்தில் 79 சதவீதம் வீணாவது தவிர்க்கப்பட்டிருப்பதாகவும், இதுதான் இத்திட்டத்தின் வெற்றியென்றும் தம்பட்டம் அடித்து வருகிறது.

ஒரு புதிய திட்டத்தைத் தொடங்கும்போது ஏற்படும் நிர்வாகப் பிரச்சினைகளால்தான் கோட்காசிம் பகுதியைச் சேர்ந்த குடும்ப அட்டைதாரர்களுக்கு மானியம் முறையாகக் கிடைக்காமல் போயிருக்கிறது. வங்கிகளின் முகவர்கள் கிராமப்புற மக்களின் வீட்டு வாசலுக்கே வந்து மானியத்தை வழங்குவதற்கு ஏற்பாடுகள் நடந்துவருகின்றன. எனவே, சில்லறை பிரச்சினைகளைக் காட்டி இப்பணப்பட்டுவாடா திட்டத்தை எதிர்க்கக் கூடாது என வாதிடுகிறார், கிராமப்புற மேம்பாட்டுத் துறை அமைச்சர் ஜெய்ராம் ரமேஷ்.

குடும்ப அட்டைதாரர்களின் வாசல் கதவைத் தட்டி மானியப் பணத்தைக் கொடுத்தாலும்கூட, இந்தத் திட்டம் அடித்தட்டு மக்களின் நலனுக்கு எதிரானதுதான். ஏனென்றால், இந்தத் திட்டத்தின் மையமான நோக்கமே உணவு, உரம், எரிபொருள் ஆகியவற்றை சந்தை விலையில் வாங்கிக் கொள்ளும் கட்டாயத்திற்கும், மனோ நிலைக்கும் மக்களைத் தள்ளிவிட வேண்டும் என்பதுதான். அரசு உணவுப் பொருட்களைக் கொள்முதல் செய்வதையும், அவற்றை மானிய விலையில் ரேஷன் கடைகளின் மூலம் விற்பதையும் சந்தையில் தலையீடு செய்யும் நடவடிக்கை; எனவே, இதனை ஏழை நாடுகள் கைவிட வேண்டும் என்பதை உலக வங்கி, உலக வர்த்தகக் கழகம் உள்ளிட்ட ஏகாதிபத்திய நிதியாதிக்க நிறுவனங்கள் கொள்கையாகவும் நிபந்தனையாகவும் அறிவித்துள்ளன. உணவுப் பொருள் மானியத்தையும், அரசு கொள்முதலையும் ஒரே அடியில் ஒழித்துக் காட்டினால், அது அரசியல்ரீதியாகத் தற்கொலைக்குச் சமமானதாக இருக்கும் என்பதாலேயே, இவற்றைக் கொல்லைப்புற வழியில் ஒழித்துக்கட்டும் நோக்கில் நேரடி பணப்பட்டுவாடா திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது, மன்மோகன் சிங் கும்பல்.

பணமாக அல்லாமல், உணவு, உரம், எரிபொருள் ஆகியவற்றை மானிய விலையில் பொருளாக வழங்கும்போது மட்டுமே சந்தையில் குறுக்கீடு செய்வதற்கு வாய்ப்புண்டு. ரேஷன் கடைகளில் விநியோகிக்கப்படும் உணவுப் பொருளின் விலைக்கும், அவற்றின் சந்தை விலைக்கும் வேறுபாடு கிடையாது என்ற நிலையை உருவாக்கும்பொழுது, அரசு சந்தையில் தலையீடு செய்வது முடிவுக்கு வந்துவிடும்.

பதுக்கல், வர்த்தகச் சூதாட்டம் போன்ற பல கிரிமினல் நடவடிக்கைகளால் உணவுப் பொருட்கள் கிடைப்பதில் செயற்கையாக தட்டுப்பாட்டை உருவாக்கியும்; உணவுப் பொருட்களின் விலைகளைச் சந்தையில் செயற்கையாக ஊதிப் பெருக்கியும் கொள்ளை இலாபம் சம்பாதித்து வந்த பதுக்கல் வியாபாரிகளையும் வர்த்தகச் சூதாடிகளையும் கட்டுப்படுத்தும் நோக்கில்தான் நாடெங்கும் நியாயவிலைக் கடைகள் தொடங்கப்பட்டன. அக்கடைகள் இந்த நோக்கத்தை முழுமையாக நிறைவு செய்யும் வண்ணம் அரசால் இயக்கப்படாவிட்டாலும், அரிசி, கோதுமை உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை அரசு கொள்முதல் செய்து, ரேஷன் கடைகளின் மூலம் விநியோகம் செய்யும் நடைமுறை இருந்து வருவதால்தான், ஏழை மக்களுக்கு அரைகுறை உணவுப் பாதுகாப்பாவது கிடைத்து வருகிறது. நேரடிப் பணப்பட்டுவாடாத் திட்டத்தை அறிமுகப்படுத்துவதன் மூலம் இந்நிலையைத் திருப்பிப் போட முயலுகிறது, மன்மோகன் சிங் கும்பல்.

இன்னொருபுறமோ, உணவுப் பொருள்களின் விலைகள் சந்தையில் உயருவதற்கு ஏற்றவாறு மானியத்தை உயர்த்திக் கொடுக்கவும் அரசு முன் வராது. ஒவ்வொரு பட்ஜெட்டிலும் பற்றாக்குறையைக் குறைக்க மக்களுக்கு வழங்கப்படும் மானியத்தை வெட்டி வரும் அரசு, சந்தை விலைக்கு ஏற்ப மானியத்தை உயர்த்திக் கொடுக்கும் என நம்புவதற்கு எந்த அடிப்படையும் கிடையாது. இப்படிப்பட்ட நிலையில் குடும்ப அட்டைதாரர்கள் அனைவரும் சந்தையின் சூதாட்டத்தில் சிக்கித் தவிக்க வேண்டியது தவிர, வேறு வழி இருக்காது. குறிப்பாக, வறிய நிலையில் வாழும் நகர்ப்புற உதிரித் தொழிலாளர்கள், இடம்பெயர்ந்த தொழிலாளர்கள் மற்றும் கிராமப்புறங்களைச் சேர்ந்த ஏழை விவசாயிகள், பழங்குடி மக்கள் ஆகியோர் ஒன்று, சந்தை விலையில் உணவுப் பொருட்களை வாங்க வேண்டும், அல்லது பட்டினி கிடக்க பழகிக் கொள்ள வேண்டும் என்ற நிலைக்குத் தள்ளப்படுவார்கள்.

மக்களுக்கு ஒதுக்கப்படும் ஒவ்வொரு ஒரு ரூபாய் மானியத்திலும் வெறும் 15 பைசாதான் அவர்களைச் சென்று சேர்கிறது. மீதியை இடைத்தரகர்கள் தின்று தீர்த்துவிடுகிறார்கள் என்று ராஜீவ் காந்தி சொல்லிவிட்டுப் போனதைச் சுட்டிக்காட்டி, இந்த இடைத்தரகர்களை ஒழித்து, மக்களுக்கு ஒதுக்கப்படும் மானியம் முழுமையாக அவர்களைச் சென்று சேர்வதற்காகத்தான் நேரடிப் பணப்பட்டுவாடாத் திட்டத்தைக் கொண்டு வந்திருப்பதாகப் பீற்றி வருகிறது, காங்கிரசு கும்பல். உணவு மானியமாக, உர மானியமாக ஒதுக்கப்படும் இந்தப் பணத்தைக் கிராமப்புறங்களில் வாழும் மக்களுக்குக் கொண்டு சேர்க்க தனியார் வங்கித் தரகர்கள் நியமிக்கப்பட்டு வருகின்றனர். சில்லறை வர்த்தகத்தில் உள்ள இடைத்தரகர்களை ஒழிக்க பன்னாட்டு நிறுவனங்கள்; மானியத்தில் புகுந்து விளையாடும் இடைத்தரகர்களை ஒழிக்க வங்கித் தரகர்கள்!

கிராமப்புறங்களைச் சேர்ந்த கந்துவட்டி பேர்வழிகள், உர வியாபாரிகள் போன்ற பழைய நிலப்பிரபுத்துவக் கும்பல்கள்தான் வங்கித் தரகர்களாக அவதாரமெடுத்துள்ளனர். இக்கும்பல் கிராமப்புற ஏழை மக்களை ஏற்கெனவே பல்வேறு வழிகளில் சுரண்டியும் ஏய்த்துப் பிழைத்தும் வரும் நிலையில், மானியத் தொகையை முழுங்கி விடாமல், அதில் கமிஷன் அடிக்காமல் பட்டுவாடா செய்வார்களா என்பதே சந்தேகத்திற்குரியதுதான். எனினும், இவர்களின் கைகளில் ஒரு ரூபாயல்ல, இரண்டு ரூபாயல்ல, ஏறத்தாழ 1,50,000 கோடி ரூபாய் மானியப் பணத்தைப் பட்டுவாடா செய்யும் பொறுப்பை ஒப்படைத்திருக்கிறார், மன்மோகன் சிங். ரேஷன் கடைகளில் நடக்கும் உணவுக் கடத்தல் ஊழலைவிட, மானியத்தைப் பட்டுவாடா செய்யும் பொறுப்பைத் தனியாரிடம் ஒப்படைத்திருக்கும் இத்தாராளமய நடவடிக்கைதான் மிகப் பெரிய ஊழலாகும்.

வங்கிக் கணக்கும் ஆதார் அட்டையும் இருந்தால் ஊழலும் மோசடியும் நடைபெறாது என மன்மோகன் சிங் கும்பல் நம்மை நம்பச் சொல்கிறது. ஆனால், இது வெற்றுப் பிதற்றல் என்பதை நூறு நாள் வேலைத் திட்டத்தில் நடைபெற்றுள்ள ஊழல்கள் அம்பலப்படுத்தியிருக்கின்றன. குறிப்பாக, இந்த ஆதார் அட்டை உண்மையான பயனாளிகளை நல உதவித் திட்டங்களிலிருந்து அப்புறப்படுத்துவதற்குத்தான் பயன்பட்டுள்ளது என்பதை வறிய மாநிலமான ஜார்க்கண்டில் நடத்தப்பட்ட ஆய்வுகள் எடுத்துக் காட்டுகின்றன. இந்த ஆதார் அட்டைத் திட்டம் இதுநாள் வரை நாடாளுமன்றத்தின் ஒப்பதலையும் பெறவில்லை; நிதித்துறைக்கான நாடாளுமன்ற நிலைக்குழுவும் இந்த அட்டை வழங்குவதைச் சட்டபூர்வமானதாக ஏற்றுக் கொள்ளவில்லை. மானியத்தை ஒழிப்பதைவிட, ஆதார் அட்டைகள் மூலம் ஏழைகளை ஒழித்துக் கட்டுவது எளிது என்பதனால்தான், குடும்ப அட்டைதாரர்கள் ஆதார் அட்டையைப் பெற்றிருந்தால் மட்டுமே மானிய உதவியைப் பெற முடியும் என்ற நிபந்தனையை விதித்திருக்கிறார், மன்மோகன் சிங்.

நேரம் காலம் பாராமல் உழைத்து எவ்வளவுதான் சம்பாதித்தாலும், கிடைக்கும் கூலியைக் கொண்டுப் போதிய அளவில் அத்தியாவசிய உணவுப் பொருட்களை வாங்குவதே பெரும்பாடாக இருக்கும் நிலையில், வெளிச் சந்தையில் உணவுப் பொருட்களின் விலைகள் தாறுமாறாக உயர்ந்து கொண்டே போகும் நிலையில், ரேஷன் கடைகளில்கூட குறைந்த விலையில் உணவுப் பொருட்களை வாங்க முடியாது என்ற நிலைமை மக்களின் மீது வலிந்து திணிக்கப்படுகிறது. அரைகுறைப் பட்டினியோடு போராடும் மக்களும், சத்தான உணவு கிடைக்காத கர்ப்பிணிப் பெண்களும், நோஞ்சான் குழந்தைகளும் நிறைந்திருக்கும் நமது நாட்டில், அவர்களுக்கு உரிய உணவுப் பாதுகாப்பை வழங்காமல், ஏதோ கொஞ்சம் பணத்தை வீசியெறிந்து, அவர்களை சந்தைச் சூதாட்டத்தில் சிக்க வைப்பது எத்துணை பயங்கரமானது ? குடிப்பழக்கம் பெருகிவரும் வேளையில், குடும்பத் தலைவரின் பெயரில் வங்கியில் போடப்படும் மானியத் தொகை, உணவு வாங்கப் பயன்படுமா, டாஸ்மாக் கடைக்குப் போகுமா ? ஏறத்தாழ 70 சதவீத மக்கள் வெறும் 20 ரூபாயை மட்டுமே தினக் கூலியாகப் பெறுகிறார்கள் என்ற நிலையில், மக்களுக்குக் கிடைத்து வந்த அரைகுறை உணவுப் பாதுகாப்பையும் பறிப்பது பட்டினிச் சாவுகள் என்ற பேரழிவைத்தான் ஏற்படுத்தும். இந்த அபாயத்தை உணர்ந்து, உங்கள் கையில் உங்கள் பணம் என்ற இந்த நயவஞ்சகத் திட்டத்தைப் பரிசோதனை அடிப்படையில்கூட நடத்தவிடாமல், உழைக்கும் மக்கள் கிளர்ந்தெழுந்து போராட வேண்டிய தருணமிது.

**– ஆதாரம்: புதிய ஜனநாயகம், ஜனவரி 2013**

### கிராம ஊராட்சிகளில் கூடுதலாக

## துப்புரவு பணியாளர்கள் 16,726 பேர் நியமனம்

**பேரவையில் முதல்வர் ஜெயலலிதா, 110வது விதியின் கீழ் படித்த அறிக்கையில் கூறியிருப்பதாவது:**

சுகாதார இயக்கத்தின் கீழ் திட மற்றும் திரவ கழிவு மேலாண்மை ஒரு முக்கிய கூறாகும். எனவே தான், ஊரக பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்காக, இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் ரூ.150 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதுமட்டுமன்றி, திட மற்றும் திரவக்கழிவு மேலாண்மை பணிகளுக்காக ரூ.100 கோடி மதிப்பீட்டில் ஒரு செயல் திட்டம் உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும். மத்திய அரசின் வழிகாட்டி நெறிமுறைகளின்படி 500 குடும்பங்களுக்கு மேற்பட்ட கிராம ஊராட்சிகளில் ரூ.20 லட்சம் மதிப்பீட்டில் திட மற்றும் திரவக்கழிவு பணிகளை மேற்கொள்ளலாம். மத்திய அரசு இந்த திட்டத்துக்காக ரூ.100 கோடி நிதி உதவியை அளிக்கும் என எதிர்பார்க்கிறேன். இந்த நிதியிலிருந்து, குப்பைகளை, மக்கும் மற்றும் மக்காத கழிவுப் பொருட்களாக பிரித்தல் மற்றும் அப்புறப்படுத்துதல், தெருக்கள், திறந்தவெளிகள் மற்றும் சுற்றுப்புறங்களை கழிவுப்பொருட் கள் இல்லாமல் சுத்தமாக வைத்துக் கொள்வது, கழிவுநீரை அகற்றுதல், கழிவுநீரை மறுசுழற்சி செய்தல், உரக்குழி கள், மண்புழு உரம் தயாரித்தல், சாண எரிவாயு கலன்கள் அமைத்தல் போன்ற மேலாண்மை பணிகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

கிராமங்களில் துப்புரவுப் பணியை மேற்கொள்ள தற்போது 9,896 துப்புரவுப் பணியாளர்கள் மட்டுமே உள்ளனர். எனவே, இப்பகுதிகளில் துப்புரவுப் பணியை மேற்கொள்ள கூடுதலான பணியாளர்களை நியமிப்பது அவசியமாகிறது. இதை கருத்தில் கொண்டு, மக்கள் தொகை 3,000க்கும் கீழ் உள்ள 8,469 கிராம ஊராட்சிகளில் கிராம ஊராட்சிக்கு கூடுதலாக ஒரு வீதமும், 3,001 முதல் 10,000 வரை உள்ள 3,908 கிராம ஊராட்சிகளில் கிராம ஊராட்சிக்கு கூடுதலாக இரண்டு வீதமும், 10,000க்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட 147 கிராம ஊராட்சிகளில் கிராம ஊராட்சிக்கு கூடுதலாக மூன்று வீதமுமாக மொத்தம் 16,726 துப்புரவு பணியாளர் பணியிடங்கள் கூடுதலாக ஏற்படுத்த தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

இவ்வாறு, புதிதாக உருவாக்கப்படும் பணியிடங்களில் பணி அமர்த்தப்படுபவர்களுக்கு தொகுப்பூதியமாக மாதம் ரூ.2,000 அகவிலைப்படியாக ரூ.40 வழங்கப்படும். இது மட்டுமல்லாமல் ஊராட்சிகளில் மின்சக்தியை பயன்படுத்துவதில் சிக்கனத்தை கடைப்பிடிக்கும் வகையில் 12,524 கிராம ஊராட்சிகள் மற்றும் 385 ஊராட்சி ஒன்றியங்களில் சூரிய சக்தியைக் கொண்டு மின்வசதி ஏற்படுத்த அரசு முடிவு செய்துள்ளது. இதன்படி, 2013 14ம் ஆண்டில் 50 ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் 500 கிராம ஊராட்சி அலுவலகங்களில் சூரிய சக்தியுடன் கூடிய மின்வசதி ஏற்படுத்தப்படும். இதற்காக ரூ.9 கோடி ஒதுக்கீடு செய்யப்படும். இவ்வாறு ஜெயலலிதா கூறினார்.

**–ஆதாரம்: தினகரன், 10.4.2013**

# வயல்வெளிகளின் அழிவும்... பெண் உழைப்பின் சரிவும்...
## தீர்மானங்கள்

– பி.வி. ஸ்ரீவித்யா

இரண்டு ரூபாய்க்கு புளிப்பு மிட்டாய்களை நியாயமாகப் பங்கிட்டுக் கொள்வதன் மூலம், 10 பேரின் பசியைப் போக்கிக் கொள்ளும் கலையில் இந்தப் பெண்கள் கைதேர்ந்த நிபுணர்களாகி விட்டார்கள். நாகப்பட்டினம் மாவட்டம் வெங்கிடங்கால் பஞ்சாயத்தில் உள்ள வெங்கிடங்கால், செம்பியநேரி கிராமங்களைச் சேர்ந்த இந்தப் பெண்கள், சுற்றியுள்ள பஞ்சாயத்துகளில் வயல் வேலை செய்த பிறகு தங்களுக்குக் கிடைக்கும் சொற்ப வருவாயை, நியாயமாகப் பகிர்ந்து கொள்ளும் முறை இது.

கீழ்வேளூர் பஞ்சாயத்து யூனியனின் கீழ் வரும் வெங்கிடங்கால் கிராம பஞ்சாயத்தில் கண்மூடித்தனமாக மணல் கொள்ளை மற்றும் சாகுபடி பரப்பு குறைந்து வருவதால் வயல்வெளிகள் வேகமாக அழிந்து வரும் நிலையில், பெருமளவு உழைக்கும் பெண்கள் மேற்கண்ட முறையில்தான் தங்களுடைய வேலையிழப்பை சமாளிக்கிறார்கள்.

ஒரு காலத்தில் பச்சைப் பசேல் என்றிருந்த வயல்வெளிகளுக்குப் பதிலாக பச்சைக் குன்றுகளும், வெற்றுக் குழிகளும்தான் இப்போது காணக் கிடைக்கின்றன. இந்தப் பஞ்சாயத்தில் பெருமளவில் உள்ள ஆதிதிராவிட இன மக்கள், நஷ்டத்தைச் சந்தித்ததால் விவசாயத்தை கைவிட்டு, விவசாயக் கூலிகளாக மாறிவருகிறார்கள். சாகுபடி செய்வதால் எந்தப் பலனும் கிடைப்பதில்லை என்பதால், இப்போது நிலங்களை வைத்திருக்கும் பெரும்பாலான உரிமையாளர்கள் தங்கள் நிலங்களை தரிசாகவே விட்டிருக்கிறார்கள்.

மூன்று ஆண்டுகளுக்கு முன் தரிசாக விடப்பட்ட நிலங்கள் தனித்தனித் தீவுகளாக இருந்தபோது, அவற்றை பயன்படுத்திக் கொள்ள மணல் எடுக்கும் தொழில் உள்ளே நுழைந்தபோது, தரிசு நில உரிமையாளர்கள் அதை லாபகரமான நடவடிக்கையாகவே பார்த்தார்கள். தங்களது நிலங்களை மணல் எடுப்பவர்களுக்கு விற்றனர். இன்றைக்கு இந்தப் பகுதி முழுவதும், 18 அடி ஆழத்துக்கு நிலம் வெட்டியெடுக்கப்பட்டு, அருகில் உள்ள வயல்கள் கனவிலும் சாகுபடி செய்வது பற்றி நினைக்க முடியாத வண்ணம் நிலைமை தலைகீழாக மாறிவிட்டது. மேலும், ஒரு மின்சார உற்பத்தி நிலையத்துக்காக 300 ஹெக்டேர் நிலப்பரப்பு இப்பகுதியில் கையகப்படுத்தப்பட்டது. இங்குள்ள நீர்நிலையில் பாதிப்பை ஏற்படுத்தி நிலைமையை மோசமாக்கியுள்ளது.

சாதாரணமாக ஒரு ஹெக்டேர் நிலப்பரப்பு, ஒரு சாகுபடிப் பருவத்தில் 140 பேருக்கு வேலை வழங்கும். இதில் பெருமளவு பெண் கூலித் தொழிலாளர்களே பயனடைகிறார்கள். ஆனால், பெருமளவு நிலம் சாகுபடி செய்வதை கைவிட்டு விட்டதால், குறைந்த பெண் வேலையாள்களே தேவைப்படும் சூழலில், அதிகமான பெண்கள் வேலை தேடிச் செல்கிறார்கள். இதனால் வேலையை அவர்கள் பங்கிட்டுக் கொள்ள வேண்டியிருக்கிறது. இதுவே, அவர்களது வறுமைக்கும் காரணமாகிறது. “வெறும் 10 பெண்கள் வேலை செய்ய வேண்டிய வயலில், நாங்கள் 70 பேர் வேலை பார்க்கிறோம். அதனால் சம்பளமும் பகிர்ந்தே தரப்படுகிறது. இந்தச் சம்பளம் எதற்கும் போதவில்லை,” என்கிறார் கணவனை இழந்த சகுந்தலை.

அரசு சட்டப்படி பார்த்தால், வயல்வெளிகளில் மணல் எடுப்பதைத் தடுப்பதற்கு எந்த விதிமுறையும் இல்லை. பக்கத்தில் உள்ள நிலங்களில் இருந்து சம்பந்தப்பட்ட நிலங்கள் எவ்வளவு தொலைவில் உள்ளன என்பதைப் பொறுத்து, மணல் அள்ளுவதற்கு உரிமம் வழங்கப்படுகிறது. மேலும், எதிர்காலத்தில் அதே நிலத்தில் மண் நிரப்பப்பட்டு, சாகுபடிக்கு உரியதாக மாற்றப்பட வேண்டும் என்பது போன்ற விதிமுறைகளும் இருக்கின்றன. சட்டப்படி, 2 மீட்டர் ஆழத்துக்கு அதிகமாக மேல் மண்ணை எடுப்பதற்கு உரிமையில்லை.

அரசு பதிவுகளின்படி 3.38 ஹெக்டேர் பரப்புள்ள நீர்நிலைகளில்தான் மணல் எடுக்க உரிமம் வழங்கப்பட்டுள்ளது. ஆனால், 12 ஹெக்டேர் கொள்ளையடிக்கப்பட்டுவிட்டது என்கிறார்கள் உள்ளூர் மக்கள். நிலப்பதிவுகளில் சாகுபடி நிலத்தை தரிசு நிலம் என்று மாற்றி உரிமம் வழங்கப்படுகிறது என் கிராம மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

ஏஷியன் காலேஜ்ஆஃப் ஜர்னலிசம் நிறுவனத்தின் வளர்ச்சி இதழியல் துறை பேராசிரியர் கே. நாகராஜ்கூறுவதன்படி, “இது காடழிப்பில் குறிப்பிடப்படும் தேன்கூடு வட்டம் என்ற கொள்கையை பிரதிபலிக்கிறது. முதலில் காட்டின் சிறிய பகுதி அழிக்கப்படும்போது, அது ஒரு தேன்கூட்டில் உள்ள தேனை வெளிச்சமிட்டுக்

காட்டும் திறப்பு போன்ற தோற்றத்தைத் தரும். தொடர்ந்து அந்தத் திறப்பு மூலம் தேன்கூடு அழிவதைப் போல, ஒட்டு மொத்த காட்டின் மேல் மண்ணும் அரிக்கப்படும். ஒட்டுமொத்த காடும் அழிவதற்கான தொடக்கப்புள்ளியாக இது அமையும். அதே போலத்தான், இந்த நீர்நிலைகள் அழிவும் நிகழ்கிறது,'' என்கிறார்.

2011ஆம் ஆண்டில் வயல்களில் வேலை செய்ய கூலித் தொழிலாளர்கள் கிடைக்கவில்லை என்ற புகாரால், நடவுக் காலத்தில் ஊரக வேலை உறுதிச் சட்டத்தின் கீழ் கிராம மக்கள் வேலை செய்வதற்கு மாநில அரசு தடை விதித்தது. ஆனால், மேற்குறிப்பிட்ட கிராமங்களில் இதுபோன்று தொழிலாளர்கள் அதிகம் தேவைப்படும் காலகட்டங்கள் கூட மிக அரிதாகவே தோன்றுகின்றன.

இந்தப் பெண் கூலித் தொழிலாளர்களுக்கு பெரும்பாலான நேரம் நிலைமை மோசமாகவே இருந்தாலும், எப்போதாவது ஒரு சில நாள்கள் நன்றாக இருப்பதும் உண்டு. என்றைக்காவது ஒரு நாள் ரூ. 25 கூலியாகக் கிடைக்கலாம். ''ஆனால், எப்போதும் விவசாயக் கூலியாக ரூ.2 தான் கிடைக்கிறது. அதை வைத்து ஒரு டீ கூட குடிக்க முடியாது. அந்தக் காசுக்கு வெத்திலையோ, புளிப்பு மிட்டாயோ எங்களுக்குள் பிரிச்சு சாப்பிடுவோம்'' என்கிறார் சௌந்திரவல்லி. இது மட்டுமில்லாமல், வேலை செய்வதற்காக அக்கம்பக்கத்து பஞ்சாயத்துகளுக்கு 8 முதல் 10 கிலோ மீட்டர்கள் கால்நடையாக நடந்தே செல்கிறோம் என்கிறார் ஜெயம்.

விவசாய நிலங்களில் மணல் எடுக்கத் தடை விதிக்கவேண்டும் என்று கோரிக்கை விடுத்து சென்னை உயர் நீதிமன்றத்தில் இந்த கிராம மக்கள் பொது நலன் மனு தாக்கல் செய்திருக்கிறார்கள். உள்ளூர் மக்களின் எதிர்ப்பால், இந்த பஞ்சாயத்தில் கடந்த ஓராண்டில் மணல் எடுப்பது நடக்கவில்லை. ஆனால், ஏற்கெனவே குறிப்பிடத்தக்க அளவு நிலங்கள் அழிக்கப்பட்டுவிட்ட நிலையில், சொற்ப சம்பளம் தரும் வேலையும் கிடைக்காதா என்ற அவநம்பிக்கையுடன் இந்தப் பெண்கள் நீண்ட தொலைவு அலைந்து கொண்டிருக்கிறார்கள்.

### விஷச் சுழலில் சிக்கித் திணறும் விவசாயமும் பெண் உழைப்பும்

காவிரி பாசன மாவட்டங்களில் கடந்த சில மாதங்களில் சாகுபடிக்குத் தேவையான தண்ணீர் கிடைக்காததால் விவசாயம் சந்தித்து வரும் பல்வேறு நெருக்கடிகளால், பல விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். குறைந்த அளவு நிலங்களை வைத்துள்ள விவசாயிகள் விளைச்சல் இல்லாததால், வாங்கிய கடனை திரும்பச் செலுத்த முடியாமல் தற்கொலை செய்து கொள்கின்றனர். இந்தத் தற்கொலைகள் காரணமாக, சம்பந்தப்பட்ட விவசாயி வாங்கிய கடனை அடைக்க வேண்டிய பொறுப்பு, அவர்களது விதவை மனைவிகளின் தலையில்தான் விழுகிறது.

காவிரி நீர் பங்கீட்டுச் சிக்கலால் விவசாயம் சந்தித்து வரும் நெருக்கடிகளை ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது, விவசாயத்தில் முக்கிய உழைக்கும் சக்தியாக இருக்கும் பெண்களின் அவலநிலை கவனத்துக்கு வராமலேயே போய்விட்டது. விவசாயப் பொருளாதாரத்தில் பெண்களுக்கு உள்ள பங்கை இந்த உரையாடல் அங்கீகரிக்கத் தவறிவிட்டதன் அடையாளம் இது.

விவசாயத் தொழிலாளர்களில் ஆண்களும் பெண்களும் இருக்கிறார்கள். நிஜத்தில் இவர்களது வாழும் நிலைமைகள் வெவ்வேறானவை. 2012ஆம் ஆண்டில் நாகப்பட்டினம் மாவட்டத்தில் 3 விவசாய நெருக்கடி தற்கொலைகள் நிகழ்ந்துள்ளன. மொத்தமுள்ள 55,598 ஹெக்டேர் பரப்பில் 139 லட்சம் குறு விவசாயிகளும், 38,789 ஹெக்டேர் பரப்பில் 27,759 சிறு விவசாயிகளும் பயிரிட்டு வருகிறார்கள். இதில் இரு மாநிலங்களுக்கு இடையிலான தண்ணீர் பங்கீட்டுச் சிக்கல் காரணமாக, ரூ.177 கோடி மதிப்புள்ள உழைப்பு நாங்கள் வீணாகியுள்ளதாக கணிக்கப்பட்டுள்ளது. இதில் 70 சதவிகித உழைக்கும் சக்தி பெண்கள்தான்.

நெற்பயிர், பெருமளவு பெண்களின் உழைக்கும் சக்தியை நம்பியே உள்ளது. ஒரு ஏக்கர் நெல் பயிரிடுவது என்பது, ஒரு சாகுபடி காலம் முழுவதும் 130 பெண்களுக்கு வேலை தரக்கூடியது. வயல்களில் நடவு செய்தல், களை பறித்தல் போன்ற கடுமையான வேலைகளை பெண்களே செய்கிறார்கள். இந்த முறைகள் காரணமாகவே விவசாயிகளுக்கு உற்பத்தி அதிகமாகக் கிடைக்கிறது.

மாநிலங்களுக்கு இடையிலான தண்ணீர் பங்கீட்டுச் சிக்கலால் தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ள சூழ்நிலையில், திருச்சியை மையமாகக் கொண்ட ரியல் எஸ்டேட் நிறுவனங்கள், காவிரி பாசன மாவட்டங்களின் கடைமடைப் பகுதி வரை தங்கள் கபளீகரக் கையை விரிக்க ஆரம்பித்துவிட்டன.

இன்னும் நடவு செய்யக்கூடிய வயல்கள், இந்த ரியல் எஸ்டேட் நிறுவனங்களின் கைகளில் சிக்கி பிளாட்களாக மாறுவதால், லாபகரமான உழைப்பை தரக்கூடிய பெண்களும், அவர்களுக்குக் கிடைக்கும் வேலையும் விரட்டி அடிக்கப்பட்டுவிட்டன.

இது மட்டுமில்லாமல், நாகப்பட்டினம் மாவட்டக் கடற்கரை முழுவதும் பல்வேறு அனல் மின் நிலையங்களுக்காக தரிசு நிலங்களுக்கு அருகில் உள்ள நல்ல நிலங்களையும் சேர்த்து உள்ளூர் பஞ்சாயத்துகள் தாரை வார்த்து வருவதால், விவசாய நெருக்கடி மோசமாகியுள்ளது. இந்த

அனல் மின் நிலையங்கள் பல்வேறு கட்டங்களில் அனுமதி பெறுவதற்காக தற்போது காத்திருக்கின்றன.

இவை தவிர விவசாய நிலங்களிலும், நதிப்படுகைகளிலும் மணல் அள்ளுவதற்கு அளிக்கப்பட்டுள்ள அனுமதி, சமூக வளங்களை பயன்படுத்துவதற்குப் பெண்களுக்கு உள்ள உரிமையைப் பறித்து வருகிறது. வேதாரண்யம் பகுதியில் பஞ்சாயத்து எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சிலிகேட் மணல் அள்ளுவதற்கு அளிக்கப்பட்டுள்ள உரிமம், நிலத்தடி நீரை பாதித்துள்ளது. இதனால், பெண்கள் குடிநீரைத் தேடி நீண்ட தொலைவு அலைய வேண்டியுள்ளது.

சமீபத்தில், ஊரக வேலை உறுதிச் சட்டம் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் செயல்திறனை கொண்டிருக்கிறதா என்பது பற்றி நடத்தப்பட்ட ஒரு கணக்கெடுப்பில், கிராம பொதுச் சொத்தை நிர்வகிப்பதில், தங்களுக்கு உள்ள அறிவு பயன்படுத்திக் கொள்ளப்படவில்லை என்று பெண்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். இதற்கு அமைப்பு ரீதியிலான குறைபாடுகளே காரணம் என்றும் சுட்டிக்காட்டுகின்றனர். விவசாயக் குளங்கள், வாய்க்கால்கள், சமூக நீர்நிலைகள் ஆகியவைதான் சிறு, குறு விவசாயிகளுக்கு அடிப்படை ஆதாரம். இந்த நீர்நிலைகளை தூர்வாருவதில் பொதுப்பணித் துறை ஈடுபடாத நிலையில், ஊரக வேலை உறுதிச் சட்டத்தின் கீழ் பெண்களை வேலைக்கு அமர்த்தலாம். ஆனால், இதுவும் கூட சம்பந்தப்பட்ட பஞ்சாயத்தின் ஆக்கப்பூர்வமான அணுகுமுறையைச் சார்ந்தே அமைகிறது.

**– ஆதாரம்: நன்றி,** தி இந்து நாளிதழ், மார்ச் 19, 2012
**பூவுலகு, மார்ச் – ஏப்ரல் 2013**

# மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் 3 லட்சம் அங்கன்வாடி மையங்கள்

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டம் 2005ன் கீழ் அனுமதிக்கப்பட்ட வேலைகளின் பட்டியலில் அங்கன்வாடி மையங்கள் கட்டுமானத்தையும் உள்ளடக்க மத்திய ஊரக வளர்ச்சி அமைச்சகம் முடிவு செய்துள்ளது. புதிய திட்டப் பணிகளின்கீழ் தேசிய ஊரக வேலை உறுதித் திட்டப் பணியாளர்களால் சுமார் 3.5 லட்சம் அங்கன்வாடி மையங்கள் கட்டப்படும். இவை மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் வளர்ச்சி அமைச்சகத்தின் அங்கன்வாடி மையங்கள் கட்டுவதற்கான நிதியிலிருந்து கட்டப்படும். வரும் 5 ஆண்டுகளில் நாடு முழுவதும் கூடுதலாக 2 லட்சம் அங்கன்வாடி மையங்கள் கட்டுவதற்காக சுமார் 7,000 கோடி நிதியை பெண்கள் மற்றும் குழந்தைகள் வளர்ச்சி அமைச்சகம் ஒதுக்கியுள்ளது.

அங்கன்வாடி மையங்கள் கட்டுமானத் திட்டமும் ஊரக வேலை உறுதி திட்டமும் இணைவதனால் கூடுதலாக 1.5 லட்சம் கட்டிடங்கள் கட்டப்படும். பெண்கள் மற்றும் குழந்தைகள் வளர்ச்சி அமைச்சகத்தின் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி சேவை திட்டத்தின் கீழ் இவை முன்பருவ பள்ளி மற்றும் 6 வயதிற்கும் குறைவான குழந்தைகளுக்கான உணவு மையங்களாக கிராமப் புறங்களில் செயல்படும். இத்தகைய அங்கன்வாடி மையங்கள் பெண்களின் சுய உதவிக்குழுக்கள் சந்திப்பிற்கான இடங்களாகவும் தேசிய ஊரக வளர்ச்சித் திட்டத்தில் பணிபுரியும் பெண்களின் குழந்தைகளுக்கான காப்பகங்களாகவும் செயல்படும் என்று ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஜெய்ராம் ரமேஷ் தெரிவித்தார்.

கிராமப் பகுதிகளில் தற்பொழுதுள்ள நடைமுறைப்படி 800 பேர் கொண்ட மக்கள் தொகைக்கு ஒரு அங்கன்வாடி மையம் இருக்க வேண்டும். மலை மற்றும் பழங்குடியினர் பகுதிகளில் 300 பேர் கொண்ட மக்கள் தொகைக்கு ஒரு மையம் இருக்க வேண்டும். குறைவான மக்கள் தொகை உள்ள பகுதிகளில் 150 பேருக்கு ஒரு சிறு அங்கன்வாடி மையம் இருக்கலாம். நாட்டின் ஊரகப் பகுதிகளில் சுமார் 13 லட்சம் அங்கன்வாடி மையங்கள் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. அவற்றுள் 50 சதவீதத்திற்கும் குறைவான மையங்கள்தான் சொந்தக் கட்டிடத்தில் செயல்படுகின்றன. எனவே, 6.5திலிருந்து 7 லட்சம் வரையிலான செயல்பட்டுக்கொண்டிருக்கும் அங்கன்வாடி மையங்களுக்கு புதிய, தரமான கட்டிடங்கள் தேவை. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் பட்டியலிடப்பட்டுள்ள பணிகள் விரிவாக்கப்பட்டாலும் கட்டுமானப் பணிகளைப் பொறுத்தவரை இதுவரை கழிப்பறைகள் கட்டும் பணி மட்டும் அனுமதிக்கப்பட்டிருந்தது. இந்தத் திட்டத்தில் வேலை செய்பவர்களுக்கான கூலிக்கான பணம் குறையும் என்பதால் அதிக மூலப் பொருட்கள் பயன்படுத்தி செய்யும் வேலைகளை தேசிய வேலை உறுதி திட்டத்தை அரசு பயன்படுத்துவதை செயல்பாட்டாளர்கள் தடுத்து வந்தனர்.

**– ஆதாரம்: Panchayat I Raj Update, December 2012**

# நிலச்சீர்திருத்தங்களில் கிராம ஊராட்சிகளுக்கு வலுவான பங்கு

சமீபத்தில் உத்திரபிரதேசத்தில் பாண்டா மாவட்டத்தில் நடந்த பொது விசாரணையில் சியார்பாக்கா கிராமத்தின் 12க்கும் மேற்பட்ட தலித் குடும்பங்கள் சுமார் 30 வருடங்களாக அரசாங்கத்தால் அவர்களுக்கு அளிக்கப்பட்ட நில பட்டாக்களை பெறுவதற்காக போராடிக்கொண்டிருக்கின்றனர் என்பதை அறிய முடிந்தது. ஆனால், இதுவரை, இந்த சிறிய முயற்சியில் கூட அவர்களால் வெற்றி பெற முடியவில்லை.

இந்த நிலங்களை ஆக்கிரமித்துள்ள கிராமத்தின் அதிகாரம் உள்ளவர்கள் (உள்ளூர் அளவிலான தாதாக்கள்) இந்த மக்களை நிலங்களுக்கு அருகில் வரக்கூடாது என்று மிரட்டுகின்றனர். ஷயாமல்தாஸ் என்ற ஒரு தலித் எப்படியோ தைரியத்தை வரவழைத்துக் கொண்டு தனது நிலத்தில் பயிர் செய்ய முயன்றபோது லத்திகள் மற்றும் கைகளால் கடுமையாகத் தாக்கப்பட்டார். தனது உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்கு வேறு வழியின்றி அவர் அந்த இடத்தைவிட்டு ஓட வேண்டியிருந்தது. அந்த மக்களில் சிலர், தங்களுக்கு அளிக்கப்பட்ட நிலங்களை கைப்பற்றுவதற்கு உதவ வேண்டும் என்ற கோரிக்கையோடு தாசில்தார் உள்ளிட்ட அரசு அலுவலர்களை அணுகியதாகவும் ஆனால், அதிகபட்சம் வெற்று வாக்குறுதிகளைத் தவிர உரிய நடவடிக்கை எதுவும் இதுவரை எடுக்கப்படவில்லை என்ற தகவலைப் பொது விசாரணையில் பகிர்ந்துகொண்டனர். இந்தப் பொதுவிசாரணையை ஒருங்கிணைத்த 'வித்யாதம் சமிதி' என்ற தன்னார்வ அமைப்பின் ராஜா பையா நிலச்சீர்திருத்தங்கள் தடுக்கப்படும் இது மாதிரியான கதைகள் இன்னும் சில கிராமங்களிலும் உள்ளது என்று தெரிவித்தார். பாபூர் கிராமத்தில் ஏழை மக்களுக்கு அளிக்கப்பட்ட நிலங்களை சில அதிகாரம் உள்ளவர்கள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளனர். இன்னும் சில நிலங்கள் வெற்று நிலங்கள் அவற்றில் எந்த பயிரும் விளைவிக்க முடியாது என்று ராஜா பையா கூறினார்.

நாட்டின் பிற பகுதிகளில் நடக்கும் சம்பவங்களை நாம் கவனித்தோமானால் நிலம் வழங்கப்பட்ட லட்சத்திற்கும் அதிகமான மக்கள் இதுபோன்ற பிரச்சனைகளை சந்திக்கின்றனர் என்பது தெரியவரும். இதற்கு ஒரு தீர்வு என்னவென்றால் நிலச்சீர்திருத்தங்களில் ஊராட்சிகளுக்கு வலுவான ஒரு பங்கை அளிக்க வேண்டும் என்பதே. கிராம சபைக்கும் ஒரு முக்கியப் பங்கு அளிக்கப்பட வேண்டும். நிலமற்ற ஏழைக் குடும்பங்களில் யாருக்கு நிலம் அளிக்கப்பட வேண்டும் என்பதும், அந்த நிலத்தை எங்கிருந்து பெறுவது என்பது பற்றிய விரிவான விவாதம் முதலில் கிராம சபைகளில் நடக்க வேண்டும். பிறகு அந்த நிலங்களை உரியவர்களுக்கு அளித்து அவர்கள் உண்மையில் அந்த நிலத்தில் பயிர் செய்வதை உறுதிபடுத்தும் பொறுப்பு ஊராட்சிகளுக்கு அளிக்கப்பட வேண்டும். நிலங்களுக்காக அரசு அலுவலர்களின் பின் ஓடும் நிலையைவிட இவ்வாறு நடந்தால் பயனாளிகள் பயன் பெறுவார்கள்.

கிராமங்களில் குறிப்பாக ஊராட்சிகளுக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி இந்தத் தீர்விலும் பிரச்சனைகள் இல்லாமல் இல்லை. ஆனால், நிலம் அளிக்கப்பட்டவர்களை உள்ளூர் அரசு அதிகாரிகளின் தயவுக்கு விடுவதைவிட இந்த நிலை மேலானது. ஏனென்றால், பல நேரங்களில் உள்ளூர் அரசு அதிகாரிகள் நில 'தாதாக்களோடு' கூட்டணி வைத்துள்ளனர். தேசிய வளர்ச்சிப் போக்கில் நிலச்சீர்திருத்தங்களுக்கு ஒரு முக்கியப் பங்கு அளிக்கப்பட வேண்டும் என்பதற்கான ஏற்ற சூழல் நிலவும் நேரத்தில் நிலங்கள் அளிப்பதற்கான உரிமையை ஊராட்சிகளுக்கு வழங்குவதைப் பற்றி வலியுறுத்துவது முக்கியத்துவம் பெறுகிறது.

330க்கும் அதிகமான மாவட்டங்களில் நூற்றுக்கும் மேற்பட்ட கூட்டங்களையும் மக்கள் உரையாடல்களையும் ஒருங்கிணைத்து நிலச்சீர்திருத்தங்கள் வலுப்படுத்தப்பட வேண்டும் என்ற செய்தியை நாட்டின் அனைத்துப் பகுதிகளுக்கும் எடுத்துச் சென்ற 'ஜன் சத்யா கிரஹா' இயக்கத்தின் முன்முயற்சியால் மேற்குறிப்பிட்டுள்ள சூழல் நிலவுகிறது. இத்தகைய நீண்ட முயற்சியின் விளைவாக தங்களது நில உரிமைக்காக போராடிக்கொண்டிருக்கும் 50,000க்கும் அதிகமான ஏழை, நிலமற்ற மக்கள் மற்றும் ஆதிவாசிகள் அக்டோபர் 2 அன்று குவாலியரில் கூடினர். அங்கிருந்து டில்லி வரை சுமார் 350 கி.மீ. அவர்கள் நடந்தே சென்று மத்திய அரசாங்கத்திடம் நிலச்சீர்திருத்தங்கள் வலுப்படுத்த வேண்டியதன் அவசியத்தை பற்றி எடுத்துரைத்தனர்.

அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தைகளும் தொடர்ந்து நடைபெற்று வந்தது. இறுதியாக அக்டோபர் 11 அன்று மத்திய ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஜெய்ராம் ரமேஷ் ஆக்ராவிற்குச் சென்று ஜன் சத்யாகிரஹா இயக்கத்தோடு நிலச்சீர்திருத்தங்களை வலுப்படுத்துவது மற்றும் மாநில அரசுகளோடு உரிய வகையில் பேசி நிலச் சீர்திருத்தத்திற்கான ஒரு முழுமையான கொள்கையை தயாரிப்பதற்காகவும் ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்–திட்டார். உடனடியாக நிலச்சீர்திருத்தங்களுக்காக ஒரு

செயல்பாட்டுக் குழு அமைக்கப்பட்டது என்பது ஒரு உற்சாகமான விஷயம். இந்தக் குழு தனது முதல் கூட்டத்தை அக்டோபர் 17 அன்று நடத்தியது. அந்தக் கூட்டத்தில் முக்கியமான முன்முயற்சிகள் எடுக்கப்பட்டதோடு அவற்றை முடிப்பதற்கான காலக் கெடுவும் நிர்ணயிக்கப்பட்டது. தேசிய நிலச்சீர்திருத்த கொள்கை வரைவு ஒன்றை தயாரிப்பதற்கு 90 நாட்கள் நிர்ணயிக்கப்பட்டது. வீட்டுமனைக்கான நிலங்கள் மற்றும் பயிர் நிலங்களை அளிப்பதற்கான வரைவு சட்ட மசோதாக்கள் இயற்றுவதற்கும் அதேபோல் காலக்கெடு நிர்ணயிக்கப்பட்டது. எனவே, நிலச் சீர்திருத்தங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும் நிலையில், நிலச்சீர்திருத்தங்களை அமல்படுத்துவதில் ஊராட்சி அமைப்புகள், குறிப்பாக கிராமசபைகளின் பங்கை வலுப்படுத்துவதற்கு இது மிகச் சரியான நேரம். பஞ்சாயத்து ராஜ்மற்றும் ஆதிவாசிகள் உரிமைகளுக்கான மத்திய அமைச்சர் வி. கிஷோ சந்திர டியோவால் ஆதிவாசிகளின் நில உரிமைகளை பாதுகாப்பதற்காக இன்னும் ஒரு நல்ல முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. சமீபத்தில் ஆதிவாசிகளின் நிலம் மற்றும் வாழ்வாதாரம் தொடர்பான சட்ட பாதுகாப்பு மீறப்பட்டுள்ளதால் 7 பாக்ஸ்சைட் சுரங்கங்களுக்கு அளிக்கப்பட்ட உரிமத்தை ரத்து செய்ய வேண்டும் என்று பஞ்சாயத்து ராஜ்அமைச்சர் ஆந்திர மாநில அரசாங்கத்தை கேட்டுக்கொண்டார்.

ஐந்தாவது அட்டவணைப் பகுதிகளில் உள்ள ஆதிவாசிகளின் நிலம் மற்றும் வாழ்வாதார உரிமைகளை பாதுகாப்பதற்கான அரசியல் சாசன பிரிவுகள் வலுப்படுத்தப்பட வேண்டும் என்று 9 மாநில அரசுகளுக்கும் அந்த மாநிலங்களின் ஆளுநர்களுக்கும் மத்திய அமைச்சர் கடிதம் எழுதியுள்ளார். இது மிகவும் முக்கியமான ஒரு செயலாகும். நீண்ட காலமாக நிலுவையில் இருந்த பழங்குடியினரின் நலன்களுக்கான மத்திய அமைச்சரின் இத்தகைய முயற்சி, வரும் காலத்தில் சுரங்கங்கள் மற்றும் பிற வணிக நலன்களுக்காக ஆக்கிரமிக்கப்படும் ஆதிவாசி மக்களின் நில உரிமைகளை பாதுகாப்பதற்கான சில முக்கிய முடிவுகள் எடுக்கப்படும் என்ற நம்பிக்கையை அளிக்கிறது.

**– ஆதாரம்: Panchayat Raj Update, November 2012**

# ஊரை காலி செய்யும் முடிவில் ஊரனம்பேடு கிராம மக்கள்

திருவள்ளூர் மாவட்டம் அத்திபட்டு கிராமத்தில் கடந்த 1990ம் ஆண்டு வடசென்னை அனல் மின் நிலையம் அமைப்பதற்காக வாயலூர் ஊராட்சிக்குட்பட்ட ஊரனம்பேடு, செப்பாக்கம், எண்ணூர், அத் திப்பட்டு உள்ளிட்ட பல்வேறு இடங்களில் சுமார் 1000க்கும் மேற்பட்ட ஏக்கருக்கு மேல் விளை நிலங்கள், வீட்டுமனைகள், உப்பளங்களை பொதுமக்களிடம் இருந்து இழப்பீடு வழங்குவதாகவும், வேலை வாய்ப்பு தருவதாகவும் கூறி அரசு கையகப்படுத்தியது.மாசு காட்டுப்பாடு, வனத்துறை அனுமதியுடன் 1994ம் ஆண்டு 630 மெகாவாட் மின் உற்பத்திக்கான அலகு ஒன்று துவங்கப்பட்டது. தற்போது விரிவாக்கத்தால் 2வது அலகும் துவங்குவதற்கான பணிகளும் நடைபெற்று வரும் நிலையில் தமிழக மின்வாரியம் அனல் மின் நிலையத்தில் பயன்படுத்தப்படும் நிலக்கரி சாம்பல் கழிவுகளை சுற்றுப்புற பாதிப்பு ஏற்படாத வகையில் வெளியேற்றுவதற்கான முறையான பாது காப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை.

காரணம் சாம்பல் கழிவு நீர் வெளியேற்றுவதற்காக அமைக்கப்பட்ட இரும்பு குழாய்கள் போதிய பராமரிப்பு இல்லாததால் துருப்பிடித்து ஓட்டை விழுந்து அதன் வழியாக சாம்பல் கழிவுநீர் வெளியேறி அரு கில் உள்ள ஊரனம்பேடு ஏரியில் கலந்து சாம்பல் திட்டாகவே மாறியதோடு விலை நிலங்களும் சாம்பல் படிவங்களால் பாழடைந்து பயிர் செய்ய முடியாத நிலைக்கு விவசாயிகளை தள்ளியுள்ளது.இது ஒருபுறம் என்றால் கொட்டப்படும் சாம்பல், காற்றின் மூலம் பரவி குடியிருப்பு பகுதிகளில் உள்ள மக்களுக்கு சுவாசக் கோளாறு, தோல் நோய் உள்ளிட்ட பல்வேறு நோய் களை ஏற்படுத்தி வருகிறது. மேலும் நீர் ஆதாரங்களான கிணறு, குளம், குட்டை போன்றவற்றிலும் இதனால் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அந்த தண்ணீரை பயன்படுத்தி தயாரிக்கும் அத்தனை உணவுகளும் பாழாகிறது என்று வேதனையுடன் தெரி விக்கிறார்கள் அப்பகுதி மக்கள்.இந்நிலை தொடர்ந்தால் ஊரைவிட்டு தாங்கள் வெளியேறும் நிலை ஏற்படும் என்றும், அதற்கு முன்பாக அரசு தங்களுக்கு பாதுகாப்பாக வாழ்வதற்கு உரிய சூழ்நிலையையும் அனல்மின் நிலையம் அமைக்க நிலங்கள் கையகப்படுத்தப்பட்டபோது கூறியபடி அதற்குரிய இழப்பீட்டையும், வேலைவாய்ப்பையும் வழங்கி தங்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்க வேண்டும் என்று கூறுகின்றனர்.

**– ஆதாரம்: தீக்கதிர், மார்ச் 8, 2013**

# பயமுறுத்தும் தந்திரங்கள்

**– அலோக் குப்தா. பாட்னா**

சுய ஆட்சியையும், பெண்களுக்கு அதிகாரமளிப்பதையும் உயர்த்திப் பிடிப்பதற்கான பீகார் மாநிலத்தின் முயற்சிகளை வன்முறை தடுக்கிறது

மோதிஹரியில் உள்ள மர்மஹா ஊராட்சி. அதன் முக்கிய தலைவர் பதவிக்கான வேட்பாளர் குந்திதேவி. தனது கணவருடன் பைக்கின் பின்புறம் அமர்ந்து பயணம் செய்தார். பிஸ்டல் துப்பாக்கி ஏந்திய நான்கு இளைஞர்கள் வழிமறித்தனர். பிரதீப் குப்தா மீது துப்பாக்கிக் குண்டுகளைப் பொழிந்தனர். நடுரோட்டில் ரத்த வெள்ளத்தில் அவர் மூன்று மணி நேரம் போராடினார். அங்கேயே இறந்தார். குந்தி தேவி தேர்தலில் தோற்றார். அவரது கஷ்ட ஜீவனமான வாழ்க்கைக்குத் திரும்பினார். இது 2006ல் நடந்தது.

கோபால் கன்ஞ்சில் வட்டார வளர்ச்சி அலுவலர் அலுவலகத்தின் வளாகத்தில் AK – 47 துப்பாக்கிகளோடு வந்த இரண்டு குற்றவாளிகள் பூனம் தேவியின் கணவர் அமோத்குமார் திவாரியின் உடலில் குண்டுகளை பாய்ச்சினார். பூனம் தேவி 2011ல் நடந்த தேர்தலில் மன்ஜா குநாய் பஞ்சாயத்தில் இருந்து 8 கிராமங்களுக்கான பிரதிநிதியாக தேர்வு செய்யப்பட்டார்.

ஊராட்சித் தேர்தலில் பெண்களுக்கு 50 சதவீத ஒதுக்கீட்டை முதலில் அமல்படுத்தியுள்ள ஒரு சில மாநிலங்களில் பீகாரும் இருக்கிறது. ஆனால், பெண்களுக்கு அதிகாரம் அளிப்பதை இனிமேல்தான் பார்க்க வேண்டும். இந்தப் பெண்கள் எல்லாம் ரப்பர் ஸ்டாம்பு முக்கியாஸ் மற்றும் சர்பான்ஞ்சுகள்தான் (தலைவர்கள்) என இங்கே எல்லோருக்கும் தெரியும்'' என்கிறார், பீகார் முக்கியாஸ் அசோசியேஷனின் தலைவர் பிரியதர்ஷினி சகி. ''பெண்களுக்கு அந்த இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு இருப்பதால்தான் ஆண்கள் தங்கள் மனைவிகளை நிறுத்துகின்றனர், எல்லா வேலைகளையும் செய்பவர் கணவர்தான்.'' என்கிறார் அவர்.

இல்லத்தரசிகளாக உள்ள தமது மனைவிகளை ஊராட்சிப் பதவிகளுக்கு போட்டியிடச் சொல்லி ஆண்கள் கட்டாயப்படுத்துகின்றனர். நான்கு சுவர்களுக்–குள்ளிருந்து வருவதால், மக்களை சந்திப்பதிலும், ஊராட்சி நிர்வாகிகளை சந்திப்பதிலும் அந்தப் பெண்களுக்கு பதட்டம் ஏற்படுகிறது. எனவே, கணவர்கள் எல்லா இடங்களிலும் முக்கியாக்கள் அல்லது சர்பான்ச்களை பின்தொடர்கின்றனர். முக்கியாக்களில் ஒரு கூட்டத்தில் முதலமைச்சர் நிதிஷ்குமார் பங்கேற்றார். கூட்டம் நடந்துகொண்டு இருந்தபோது கணவர்கள் எல்லோரையும் அறையைவிட்டு வெளியே இருக்குமாறு முதலமைச்சர் கேட்டுக்கொண்டார் என்கிறார் ஷாஹி. விசுவாசமுள்ள மனைவிகளும் வெளி நடப்பு செய்தனர் என்பதுதான் அதன் விளைவு.

நாடாளுமன்ற உறுப்பினர்கள், காவல்துறை கண்காணிப்பாளர்கள் அல்லது முக்கியா பதி, (கணவர்) சர்பான்ச் பதி பெண் முக்கியாக்களை பயமுறுத்தி தள்ளியே வைத்துள்ளனர் என்கிறார் ஷாஹி என்று அழைக்கப்படும் பெண் தலைவர்களின் கணவர்கள்.

### தீமைக்கான ஆணிவேர்:

முக்கியாவுக்கு நிர்வாக ரீதியான அதிகாரங்கள் இருக்கின்றன. வளர்ச்சித் திட்டங்களின் திட்டமிடுதலையும் அவற்றை நிர்வகிப்பதும் முக்கியாவே. சர்பான்ஞ்க்கு நீதித்துறை அதிகாரங்கள் இருக்கின்றன. கிராமத் தகராறுகளை அவரால் தீர்த்து வைக்க முடியும். முக்கியா, மற்றும் சர்பான்ஞ் பதவிகள் 8442 இருக்கின்றன. ஒரு முக்கியா, 31 வளர்ச்சித் திட்டங்களுக்கு 80 லட்சம் ரூபாய் வரை ஒதுக்கீடு செய்து அனுமதி வழங்கலாம். முக்கியாவும்கூட, முதல் அமைச்சரின் கிராாமப்புற சாலைகள் அமைப்பு திட்டத்தின் கீழ் சாலைகளும் மற்றும் கழிவுநீர் வடிகால் அமைப்புகளை கட்டுதல், பள்ளிக்கட்டிடங்கள் கட்டுதல் ஆகியவற்றுக்கு கையெழுத்து போடும் அதிகாரம் படைத்தவர். மகாத்மா காந்தி தேசிய கிராமப்புற வேலை உறுதி திட்டத்தின்கீழ் வேலை அட்டைகள் வழங்கும் அதிகாரம் படைத்தவர். இந்திரா ஆவாஸ் யோசனாவிலும் அப்படியே அங்கன்வாடி ஊழியர்களை அவரால் நியமிக்க முடியும் என்கிறார் பஞ்சாயத்துராஜ் அமைச்சர் பீம்சிங்.

வளர்ச்சித் திட்டங்களுக்கான ஒப்பந்தப் பணிகளுக்கான டெண்டர்களை முன்பு எல்லாம் அரசு நிர்வாகம்தான் வழங்கி வந்தது. ஆனால், இத்தகைய டெண்டர்களை ஒதுக்கீடு செய்வதில் நிலப் பிரபுக்கள் கும்பலின் தலைவர்களின் செல்வாக்கு இருந்தது. பஞ்சாயத்துராஜ் நிறுவனங்களை உருவாக்கியவுடன் அதிகாரம் முக்கியாக்களின் கைகளுக்கு மாறியது. முக்கியாக்களின் நெருங்கிய உதவியாளர்களுக்கு தற்போது டெண்டர்கள் கிடைக்கும் சூழல் உருவாகியது.

“அதனால்தான் முக்கியாக்கள் கொல்லப்படுகிறார்கள்” என்கிறார் சாஹி.

**இதில் காவல்துறையின் பாத்திரம்:**

பீகாரில் ஊராட்சித் தேர்தல்கள் 2001ல் துவங்கின. 2006ல்தான் மாநில அரசாங்கம் பெண்களுக்கான இடஒதுக்கீட்டை அறிவித்தது. கிராமங்களில் இந்த அறிவிப்பு பெரும் உற்சாகத்தை ஏற்படுத்தியது. வாக்கு அளிப்போர் எண்ணிக்கை சட்டமன்றத் தேர்தலிலும், நாடாளுமன்றத் தேர்தலிலும் அதிகரித்தது. மாநில தேர்தல் ஆணையத்தின் மதிப்பீட்டின்படி 2006ல் நடந்த தேர்தலில் வாக்களித்தோர் 64 சதவீதமாக இருந்தது. இதுவே 2010ல் சட்டமன்ற தேர்தல்களின்போது 10 சதவீதம் கூடுதலாக அதிகரித்தது.

இதனால், சட்டமன்றத் தேர்தல்களில் தேவைப் பட்டதைவிட அதிகமான பாதுகாப்புப் படைகள் ஊராட்சித் தேர்தல்களின்போது தேவைப்பட்டதாக மாநில தேர்தல் ஆணைய அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். ஆனால், உள்ளூர் காவல்துறை சந்தேகத்துக்கு இடமான முறையில் பணியாற்றியுள்ளது. “அத்தகைய புகார்கள் 2011ல் எங்களக்கு வெள்ளம் போல வந்தது” என்கிறார். மாநில தேர்தல் ஆணைய இணைத் தேர்தல் ஆணையர் அப்கிபூவின்பாந்தே. வளர்ச்சித் திட்டங்களில் இருந்து தங்களுக்கு உரிய “பங்கை” பெறுவதற்காக உள்ளூர் அரசியலில் அவர்களும் தொடர்பு கொண்டவர்களாக இருந்தனர். “சுழற்சி முறையில் காவல் பணியை நடத்த வேண்டும் என நாங்கள் உத்தரவிட வேண்டிவந்தது” என்கிறார் பாந்தே. அடுத்த வருடமே, இடைத் தேர்தல்கள் 4037 இடங்களுக்கு நடத்த வேண்டிவந்தது. இவற்றில் 160 பதவிகளில் இருந்தவர்கள் இறந்துவிட்டனர். அவர்கள் கொல்லப்பட்டு இருப்பார்களா என்று கேட்டதற்கு பாந்தே விவரிக்க மறுத்துவிட்டார்.

2001, 2006, 2011, 2012 ஆகிய ஆண்டுகளில் நடப்பு ஊராட்சித் தேர்தல்களில், வாக்களிப்புக்கு முந்தைய மற்றும் வாக்களிப்பின்போது ஏற்பட்ட வன்முறையில் 191 பேர்கள் வரை கொல்லப்பட்டனர் என்கிறார் சாஹி. பெண்களை தமது வேட்பு மனுக்களை வாபஸ் பெற வைக்கவே இத்தகைய கொடூர கொலைகள் நடந்துள்ளன.

2011ல், 45 வயதான பிந்தேஷ்வர் யாதவ் அவர் வெற்றி பெற்றார் என்று அறிவிக்கப்பட்ட உடனேயே வாக்கு (எண்ணும்) மையத்தில் சுட்டுக்கொல்லப்பட்டார். அவரது மனைவி சுமித்ரா தேவிக்கு ஒரு லட்சம் இழப்பீடு அளிக்கப்பட்டது. “இப்பொழுது நான் தனியாக எனது 3 குழந்தைகளையும் பராமரிக்க வேண்டும்” என்கிறார் சுமித்ரா தேவி.

2006ல் கிழக்கு சாம்பரன் பகுதியில் உள்ள ரூபஹா ஊராட்சித் தேர்தலில் போட்டியிடுகிற தனது அம்மாவின் தேர்தல் சுவரொட்டிகளை ஒட்டிக்கொண்டிருந்த சீர்ஜா தேவியின் இள வயது மகன் சுட்டுக் கொல்லப்பட்டான். அதே வருடத்தில் உமாதேவியின் கணவர் மற்றும் 7 வயது, 9 வயது மகன்கள் வயலுக்கு இழுத்துச் செல்லப்பட்டு வயிற்றை கோடரியால் கிழித்து கொல்லப்பட்டனர். மூன்று கொலைகள் நடந்தாலும் உமாதேவி தேர்தலில் போட்டியிட்டார். ஒவ்வொரு கூட்டத்துக்கும் சில அடியாட்களோடுதான் அவர் பங்கேற்கிறார் என்கிறார் சாஹி.

2010–11ல் இரண்டு பெண் முக்கியாக்கள் புல்வாரி ஷெரீப்பின் பேபி தேவி, தோப்தித்தின் மலோ தேவி கூட சுடப்பட்டனர். குறைந்தபட்சம் 10 பேர் தேர்தல் வன்முறைக்கு பலியாயினர். அவர்களின் குழந்தைகள் அல்லது நெருங்கிய உறவினர்கள் கொல்லப்பட்டனர்.

**குற்றம்புரிவோரிடமிருந்து பாதுகாப்பு:**

ஒரு முக்கியாவின் பாதுகாப்புக்கு 5 முதல் 10 பேர் வரை அடியாள் தேவைப்படுகிறது என்கிறார் சாஹி. பிரமோத் திவாரியின் மூத்த சகோதரர் அமோத் திவாரி. மாவட்ட நீதிபதி மற்றும் காவல்துறை தலைவர் ஆகியோரிடம் ஒரு டஜன் கடிதங்களை அனுப்பி பாதுகாப்புக்கு ஆட்கள் கோரியுள்ளார். “ஆனால், அரசாங்கம் எந்த ஒரு பாதுகாப்பையும் தரவில்லை” என்கிறார் அவர். “AK – 47 துப்பாக்கியை தூக்கிக்கொண்டு வந்த இரண்டு கிரிமினல்களைவிட, அரசாங்கத்தின் செயல்பாடு இல்லாத நிலைதான் தனது சகோதரரைக் கொன்றது” என்கிறார் அவர்.

கடந்த ஐந்தாண்டுகளில் 6000த்துக்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் ஆயுதங்களை வைத்துக் கொள்வதற்கான உரிமை கோரி முக்கியாக்கள் மற்றும் சர்பான்ஞ்களிடமிருந்து வந்துள்ளன என்கின்றன. காவல்துறை வட்டாரங்கள் ஆனால், அரசாங்கம் ஆயுத உரிமங்கள் வழங்குவதில் தயக்கம் காட்டுகிறது. “தேர்தல்களின்போது இது மேலும் அதிக வன்முறையை ஏற்படுத்திவரும்” என்கிறார் பீம்சிங்.

கடந்த ஐந்தாண்டுகளில் விதவைகள் ஆக்கப்பட்ட முக்கியாக்கள் சர்பான்ஞ்களின் எண்ணிக்கை உயர்ந்து வருகிறது. பெண்களுக்கு அதிகாரமளிக்கும் பீகாரின் முயற்சிகள் தேர்தல்கள் காலங்களில் அளிக்கப்படுவது போன்ற வெறும் இன்னொரு வாக்குறுதிதானோ என்ற சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

**– ஆதாரம்: டவுன் டு எர்த், பிப்ரவரி 16 – 28, 2013**

# நிலத்தால் அதிகாரம் செலுத்தப்படுதல்

**நிலங்கள் மீதான உரிமையை கட்டுப்பாட்டில் வைப்பதற்காக கட்டப்பஞ்சாயத்துகள் ஒரே கோத்திரத்துக்குள் திருமணம் செய்வதை எதிர்க்கின்றன**

**– ரிச்சர்ட் மஹாபத்ரா**

ஹரியானா மாநிலத்தில் இது மருமகன்களின் காலம். இந்த மாநிலத்தில் காங்கிரஸ் ஆட்சி செய்கிறது. காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியின் மருமகன் ராபர்ட் வதேராவுக்கு சாதகமாக சட்டவிரோதமாக விதிகளை தளர்த்தியிருக்கிறது என்ற குற்றச்சாட்டிலிருந்து தட்டித் தடவி வழி கண்டுபிடித்து மீண்டிருக்கிறது. கப் பஞ்சாயத்துகள் அல்லது பாரம்பரிய சாதி பஞ்சாயத்துகள் சமுதாய மரபுகளை கௌரவப்படுத்துகிறோம் என்ற பெயரில் கேடுகெட்ட கட்டளைகளைப் பிறப்பித்தது செய்தித்தாள்களின் தலைப்புச் செய்திகளில் இடம் பிடித்தது. காப்பஞ்சாயத்துகள், சமுதாயத்தின் நம்பிக்கைகளுக்கு ஏற்றாற்போல் மருமகன்களின் தேர்வை முறைப்படுத்த விரும்பின. அக்டோபர் 29 அன்று 29 காப்பஞ்சாயத்துகளின் தலைவர்கள் 'ரோக்டாக்' என்ற இடத்தில் ஒன்று கூடினர். ஒரே கோத்திரத்திலும், ஒரே கிராமத்திலும் நடக்கிற திருமணங்களை இந்து திருமணச் சட்டத்தின் கீழ் தடை செய்ய வேண்டும் என்று அவை கோரிக்கை விடுத்தன.

பார்வைக்கு சம்பந்தமில்லாததாகத் தோன்றும் இந்த 'வளர்ச்சிப்' போக்குகளுக்கு பொதுவான காரணம் இருக்கிறது – அது நிலம். ஹரியானாவின் நிலம் அரிய வகை பூமியாக மாறிவிட்டது என்பது செய்தி அல்ல. ஆனால் சமூகத்தின் மீதான அதன் தாக்கங்களைப் பற்றித்தான் உலகம் தற்போது அறிந்துகொண்டிருக்கிறது. வதேரா, இந்த மாநிலத்தைச் சேர்ந்த மருமகன் அல்ல. ஆனாலும் அவர், ஹரியானா மாநிலத்தில் நடத்திய நில வியாபாரம் மூலம் ஏராளமான பலன்களை அடைந்துள்ளார். கட்டப் பஞ்சாயத்துகள், தற்போது மாநிலத்தைச் சேர்ந்த மருமகன்கள், புதிதாகக் கண்டுபிடித்துள்ள "தங்கத்தை" எடுத்துச் சென்று விடக்கூடாது என்று விரும்புகின்றன என ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

ஹரியானா மாநிலத்தில் இது மருமகன்களின் காலம். இந்த மாநிலத்தில் காங்கிரஸ் ஆட்சி செய்கிறது. காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியின் மருமகன் ராபர்ட் வதேராவுக்கு சாதகமாக சட்டவிரோதமாக விதிகளை தளர்த்தியிருக்கிறது என்ற குற்றச்சாட்டிலிருந்து தட்டித் தடவி வழி கண்டுபிடித்து மீண்டிருக்கிறது. காப்பஞ்சாயத்துகள் அல்லது பாரம்பரிய சாதி பஞ்சாயத்துகள் சமுதாய மரபுகளை கௌரவப்படுத்துகிறோம் என்ற பெயரில் கேடுகெட்ட கட்டளைகளைப் பிறப்பித்தது செய்தித்தாள்களின் தலைப்புச் செய்திகளில் இடம் பிடித்தது. காப்பஞ்சாயத்துகள், சமுதாயத்தின் நம்பிக்கைகளுக்கு ஏற்றாற்போல் மருமகன்களின் தேர்வை முறைப்படுத்த விரும்பின. அக்டோபர் 29 அன்று 29 காப்பஞ்சாயத்துகளின் தலைவர்கள் 'ரோக்டாக்' என்ற இடத்தில் ஒன்று கூடினர். ஒரே கோத்திரத்திலும், ஒரே கிராமத்திலும் நடக்கிற திருமணங்களை இந்து திருமணச் சட்டத்தின் கீழ் தடை செய்ய வேண்டும் என்று அவை கோரிக்கை விடுத்தன.

பார்வைக்கு சம்பந்தமில்லாததாகத் தோன்றும் இந்த 'வளர்ச்சிப்' போக்குகளுக்கு பொதுவான காரணம் இருக்கிறது – அது நிலம். ஹரியானாவின் நிலம் அரிய வகை பூமியாக மாறிவிட்டது என்பது செய்தி அல்ல. ஆனால் சமூகத்தின் மீதான அதன் தாக்கங்களைப் பற்றித்தான் உலகம் தற்போது அறிந்துகொண்டிருக்கிறது. வதேரா, இந்த மாநிலத்தைச் சேர்ந்த மருமகன் அல்ல. ஆனாலும் அவர், ஹரியானா மாநிலத்தில் நடத்திய நில வியாபாரம் மூலம் ஏராளமான பலன்களை அடைந்துள்ளார். கட்டப் பஞ்சாயத்துகள், தற்போது மாநிலத்தைச் சேர்ந்த மருமகன்கள், புதிதாகக் கண்டுபிடித்துள்ள "தங்கத்தை" எடுத்துச் சென்று விடக்கூடாது என்று விரும்புகின்றன என ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

காப்பஞ்சாத்துகளுடைய இலக்கு என்பது மகள்களும் மருமகள்களும்தான். அவர்களுக்கு பரம்பரை சொத்திலிருநது பங்கைத் தருவதற்கு அனுமதிப்பதில்தான் பிரச்சனை. காப்பஞ்சாயத்துகள் ஜாட் சாதி மக்களிடையே உள்ள **நிலச்சுவாந்தர்கள்** இடையே பெரும் அளவிற்கு ஆதிக்கம் செலுத்துகிறது. ஜாட் இன மக்கள் டில்லி மாநகரைச் சுற்றிலும், ஹரியானாவின் சில மாவட்டங்கள், உத்தரப்பிரதேசம் மற்றும் ராஜஸ்தான் ஆகிய சில மாவட்டங்களிலும் இருக்கிறார்கள். பாரம்பரியமாக இந்தப் பகுதிகளில் ஒரே கோத்திரத்திற்குள் திருமணம் அனுமதிக்கப்படுவதில்லை. கோத்திரம் என்றால் ஒரு துணை சாதி அல்லது ஒரு குலம் என்று அர்த்தம் வைத்துக்கொள்ளலாம். ஆனால்,

காப்பஞ்சாயத்துகள் தற்போது திருமணத்திற்கான இந்தத் தடையை கிராமத்தில் வசிக்கிற எல்லோர் மீதும் நீட்டித்திருக்கிறார்கள். அவர்களின் கிராமம் மட்டுமல்ல. பக்கத்து கிராமங்களில் உள்ள வேறு குலத்தைச் சேர்ந்த தனி நபர் மீதும் இந்தத் தடையை நீட்டித்திருக்கிறார்கள். காப்பஞ்சாயத்துகளைப் பொறுத்தவரை பக்கத்து கிராமத்தைச் சேர்ந்தவர்கள் அவர்களுக்கு சகோதரர்கள் மாதிரி என்று சொல்கிறார்கள். அருகில் வசிப்பதால் அவர்கள் சகோதரத்துவத்திற்கு கட்டுப்பட்டிருக்க வேண்டுமாம். இதில் விசித்திரமானது என்னவென்றால் காப்பஞ்சாயத்துகளின் கட்டளைகள் எல்லாமே பெண்களுக்கு மட்டுமே சொல்லப்படுபவைகளாக இருக்கின்றன. காப்பஞ்சாயத்துகள் ஆண்கள் அதே கோத்திரத்திற்குள் திருமணம் செய்வதை எதிர்க்கவில்லை.

மற்ற சாதிகளுக்குள் கல்யாணம் செய்வதையும் எதிர்க்கவில்லை. ஒருே வேளை அவர்களால் அதைச் செய்ய முடியாமல் இருக்கலாம். ஹரியானாவின் 6 மாவட்டங்களான சர்ஜ்ஜார், ரோடக், ஜிண்ட், பானிபட், குர்ஹான் மற்றும் சோனி பட் ஆகிய மாவட்டங்களில் காப்பஞ்சாயத்துக்களின் செயல்பாடு பலமாக இருக்கிறது. இந்தப் பகுதிகளில் ஆண், பெண் விகிதாச்சாரம், இந்தியாவிலேயே மிகக் குறைவாக இருக்கிறது. 1000 ஆண்களுக்கு 850லிருந்து 870 வரையிலான பெண்கள்தான் இருக்கிறார்கள். மணமகள் பற்றாக்குறை இநத் அளவில் இருப்பதால்தான் தொலைதூர மாநிலங்களான ஒரிசா, மத்திய பிரதேஷ், கேரளம் மற்றும் நேபாளத்திலிருந்து கூட மணமகள்களை "வாங்கி" வருகிறார்கள். ஹரியானாவில் கல்யாணம் பண்ணும் தகுதி உள்ள ஆண்களில் 37 சதவீதம் பேர் பிரம்மச்சாரிகளாக இருக்கிறார்கள் என்று சமூகவியல் ஆய்வாளர் ரவீந்தர் கவுர் கூறுகிறார்.

பெண்களை மையமாகக் கொண்டு காப்பஞ்சாயத்துக்கள் பிறப்பிக்கிற திருமணங்கள் மீதான கட்டுப்பாடுகள் எல்லாம் நிலத்தின் மீதான குடும்பத்தின் உரிமையை பாதுகாக்கத்தான் என்று ஆய்வாளர்கள் கூறுகிறார்கள் (பார்க்க காப்பஞ்சாயத்துகளின் கட்டுப்பாடுகள்). அவரவர் விருப்பப்படி திருமணம் செய்ய அனுமதித்துவிட்டால் அந்தப் பெண்ணோ அவளது கணவனோ பரம்பரை சொத்திலிருந்து பாகப் பிரிவுகள் கேட்டுவிடுவார்கள் என்று காப்பஞ்சாயத்துக்காரர்கள் பயப்படுகிறார்கள். அதே கிராமத்தைச் சேர்ந்த ஆண், பெண்களும் பக்கத்து கிராமங்களில் இருக்கிற ஆண், பெண்களும் சகோதரர்கள் என்று அறிவித்துவிட்டால், அவர்கள் திருமணம் செய்துகொள்கிற வாய்ப்புகள் மிகவும் குறையும் என்று காப்பஞ்சாயத்துக்காரர்கள் கருதுகிறார்கள். அதாவது பெரியோர்களால் நிச்சயப்படுத்தி ஏற்பாடு செய்கிற திருமணத்தில் சம்பந்தப்பட்ட பெண்கள் பரம்பரை சொத்திலிருந்து தங்களுக்கு பங்கு கேட்பதில்லை என்று அனுபவங்கள் காட்டுகின்றன. மேலும், தூரத்து கிராமங்களில் ஒரு பெண் திருமணம் செய்துகொண்டால் நிலம் சம்பந்தமான அவளுடைய வாரிசு உரிமைகளை அவள் அனுபவிப்பதற்கான வாய்ப்புகள் மிகவும் குறைந்துவிடுகிறது. காப்பஞ்சாயத்துக்காரர்கள் பெரும்பான்மையாக இருக்கிற கோத்திரத்திற்கும் சிறுபான்மையாக இருக்கிற கோத்திரத்திற்கும் நடக்கும் திருமணத்தையும் எதிர்க்கிறார்கள். ஒரு கிராமத்தில் பெரும்பான்மை கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள் பெரும்பாலான நிலத்தை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார்கள் என்பதும் ஒரு காரணம்.

மும்பையைச் சேர்ந்த மக்கள் தொகை சார்ந்த அறிவியலுக்கான சர்வதேச நிறுவனம் (International Institute for Population Science) என்னும் அமைப்பு ஒரு ஆய்வை நடத்தியது. அதில், மாறி வருகிற பொருளாதார அமைப்பு, சீர்திருத்தங்கள் மற்றும் உற்பத்தி முறை ஆகியவற்றால் குடும்பத்தில் பெண்களின் அந்தஸ்து மோசமாகி வருகிறது. பொருளாதார சீர்திருத்தங்கள் முதன் முதலாக அமலுக்கு வந்த தேசிய தலைநகர் மண்டலத்தில் இந்த நிலை என்பது மேலும் அதிகமாக இருக்கிறது. பெரிய நில உடைமைகள் இருக்கிற இடங்களில் பெண்களுக்கு சுதந்திரம் குறைவாக இருக்கிறது என்று இந்த ஆய்வை செய்த பெரிய நாயகம் ஆரோக்கிய சாமி சொல்கிறார்.

பெண்ணுரிமை செயல்பாட்டாளர் ஜக்மதி சங்வான், "காப்பஞ்சாயத்துக்காரர்கள் ஒரே கோத்திரத்திற்குள் திருமணம் செய்வதை நெருங்கிய உறவினர்களுக்–கிடையேயான உடல் உறவு தடை செய்யப்பட்டிருப்பதால் தான் தாங்கள் எதிர்ப்பதாக தவறான பிம்பத்தை உருவாக்கிக்கொண்டிருக்கிறார்கள்" என்று குற்றம்சாட்டுகிறார். அவர்கள் தங்களது வாழ்க்கைத் துணைவரை தேடுவதில் இருக்கின்ற உரிமையைத்தான் உண்மையில் அவர்கள் எதிர்க்கிறார்கள் என்று அவர் கூறுகிறார். தேசிய பெண்கள் ஆணையமும் ஒரு ஆய்வை நடத்தியது. அந்த ஆய்வில் காப்பஞ்சாயத்துக்காரர்களால் நடத்தப்பட்ட கவுரவக் கொலைகளில் 72 சதவீதம் சாதி மறுப்பு திருமணங்களோடு தொடர்புகொண்டவை. ஒரே கோத்திரத்திற்கிடையிலான திருமணங்கள் சம்பந்தமான கவுரவக் கொலைகள் என்பவை 3 சதவீதம்தான். திருமண ஜோடிகள் இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டு குறிபார்க்கப்படுவதால் பெண்களுடைய பாலியலை கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்வது என்பதும் ஆணாதிக்க சாதியினரின் கைகளில் பரம்பரைச் சொத்து இருப்பதை உறுதிப்படுத்துவதுதான் காப்

பஞ்சாயத்துக்காரர்களின் உண்மையான நோக்கம் என்றும் சங்வான் கூறகிறார். ஒரு பெண் தன்னுடைய விருப்பப்படி வாழ்க்கைத் துணைவரை தேர்ந்தெடுக்கலாம் என்பதையும் பரம்பரைச் சொத்து மீதான அவளுடைய உரிமையைப் பாதுகாத்துக்கொள்ளலாம் என்பதையும் அனுமதிக்கக்கூடிய இரண்டு சட்டங்கள் இருக்கின்றன என்பதை காப்பஞ்சாயத்துக்காரர்கள் தாமதமாகத் தெரிந்துகொள்கிறார்கள் என்பது ஒரு சின்ன ஆச்சர்யம். அந்தச் சட்டங்கள், இந்து திருமணச் சட்டம், இந்து வாரிசுகள் சட்டம் ***(Hindu Succession Act)*** ஆகியவை ஆகும். திருமண சட்டம் கோத்திரம் அல்லது சாதி முறை ஆகியவற்றை அங்கீகரிக்கவில்லை. எனவே, மற்ற சாதியினரோடு கூடிய திருமணமோ ஒரே கோத்திரத்திற்குள்ளான திருமணமோ திருமணம் சட்டத்தால் தடுக்கப்படவில்லை.

இந்து வாரிசுகள் சட்டம் 2005ல் திருத்தப்பட்டது. அதில் மகள்களுக்கு பரம்பரைச் சொத்தில் மகன்களைப் போல சம உரிமைகள் தரப்பட்டுள்ளன. பரம்பரையாக இருந்து வருகிற வீட்டில் மகளுக்கு உரிமை இருக்கிறது என்றும் அந்தச் சட்டம் கூறுகிறது. முந்தைய சட்டமானது, ஒரு தந்தையின் சொந்த வருமானத்தில் சேர்த்த சொத்தில்தான் மகள்களுக்கு சம உரிமை அளித்தது.

பரம்பரைச் சொத்தில் ஒரு சிறு பகுதி உரிமைதான் அளிக்கப்பட்டது. கூட்டுக் குடும்பமாக வசிக்கின்ற ஒரு வீட்டில் தனக்கான உரிமையைக் கோருவதில் பெண்களுக்கு அது கட்டுப்பாடுகளை விதித்தது. 2005ல் செய்யப்பட்டத் திருத்தம் ஒரு பிரிவை நீக்கியது. அது நிலச் சீர்திருத்த சட்டத்தில் இருந்த விதிவிலக்கும், நில உச்சவரம்புச் சட்டம் மற்றும் விவசாய நிலத்தை குத்தகைக்கு பயன்படுத்துவதற்கான சட்டம் ஆகியவற்றிலிருந்து விதிவிலக்கு தரக்கூடிய ஒரு பிரிவை அது நீக்கியது. இந்தச் சட்டங்கள் மனைவிகள் மற்றும் மகள்கள் மீது ஆண்களுக்கு இருக்கின்ற ஆதிக்கத்திற்கு சார்பானதாக இருந்தன.

ஹரியானாவில் உள்ள காப்பஞ்சாயத்து உறுப்பினர்கள் ஏறக்குறைய ஒரு டசன் பேரிடம் இந்து வாரிசுகள் சட்டத்தைப் பற்றி 'டவுன் டு எர்த்' பத்திரிகை சார்பாகப் பேசினோம். ஒருவர் கூட அதைப் பற்றி பேச விரும்பவில்லை. ஆனால், திருமணம் செய்துவிட்ட மகள்களோடு நிலங்களை பகிர்ந்துகொள்வது சம்பந்தமான விவாதம் என்பது 2005 சட்டதிருத்தத்திற்குப் பிறகுதான் பெரிதாக பேசப்படுவதாக அவர்கள் கூறுகின்றனர். அதுபற்றிய முதல், காப்பஞ்சாயத்துக் கூட்டம் ரோடாக்கில் ஜூலை 2005ல் நடைபெற்றதாம். 21 காப்பஞ்சாயத்துகள் அதில் பங்கேற்றனவாம். "தங்களுடைய பெற்றோர்கள், கணவர் வீட்டின் சொத்தின்மீது மற்றும் தனிப்பட்ட முறையிலும் சொத்து சேர்க்கலாம் என்று மகள்களுக்கு இருக்கிற உரிமைகளை சட்டம் அனுமதிக்கிறது என்றால், ஒருவர் ஏன் பெண்களுக்கு அவ்வளவு உரிமைகளை கொடுக்க வேண்டிய அவசியம்" இருக்கிறது என்கிறார் ஜாஹர் காப் பஞ்சாயத்தின் பொதுச் செயலாளரான மெஹெர் சிங் ஜாஹர். இந்த ஜாஹர் பஞ்சாயத்து, ஹரியானாவில் உள்ள ஜஜ்ஜார் மாவட்டத்தில் உள்ள 36 கிராமங்களில் தன்னுடைய அதிகாரத்தை நிலைநிறுத்தியிருக்கிறது. பாரம்பரியமான விசயங்களுக்கு முரண்பாடாக புதிய தலைமுறையினரின் எதிர்பார்ப்புகள் இருக்கின்றன. இங்கிலாந்து அரசியல் சாசனத்தின் சில முக்கியப் பிரிவுகளை நாம் ஏற்றுக்கொள்கிறோம் என்றால், காப் பஞ்சாயத்தின் முக்கிய கொள்கைகளை நாம் ஏன் ஏற்றுக்கொள்ளக்கூடாது என்கிறார் அவர்.

## நிலத்தின்மீதான பித்து

ஜாட்ஸ் சாதியின மக்களை நாம் இப்போது பெரிய நிலச்சுவாந்தார்களாகப் பார்க்கிறோம். அவர்களுடைய இந்த நிலை என்பது நிலத்திற்காக 100 ஆண்டுகளாக அவர்கள் நடத்திய போராட்டங்களின் விளைவாகும். (பார்க்கவும் நாடோடிகளிலிருந்து நிலப்பிரபுக்களாக) இந்து வாரிசுகள் சட்டம் – 1956ஐ அவர்கள் எதிர்த்தனர். தங்களுடைய நிலம் பகுதி பகுதியாக பிரிந்து போவதைத் தடுக்க அரசியல் தலைமையை அவர்கள் பயன்படுத்தினர்.

1976ல் ஹரியானா ஒரு புதிய மாநிலமாக அமைக்கப்பட்ட சில மாதங்களுக்குள்ளாகவே ஹரியானா மாநில அரசு ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. மத்திய அரசு இந்து வாரிசுகள் சட்டத்தைத் திருத்த வேண்டும் என்று அந்தத் தீர்மானத்தில் கேட்டுக்கொண்டது. பஞ்சாப் மாநிலமும் இதே நிலையை எடுத்தது. மத்திய அரசு அதற்கு இணங்கவில்லை. 1979ல் ஹரியானா சட்டமன்றம் ஒரு மசோதாவை நிறைவேற்றியது.

ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட அந்த மசோதாவில் இந்து வாரிசுகள் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்று இருந்தது. குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக இந்த மசோதா அனுப்பி வைக்கப்பட்டது. குடியரசுத் தலைவர் அதற்கு தனது ஒப்புதலைத் தரவில்லை. 10 வருடங்களுக்குப் பிறகு 1989ல் ஹரியானாவின் விவசாயிகளின் தலைவர் சவுத்ரி தேவிலால் துணைப் பிரதமராக மாறும் நிலை ஏற்பட்டது. அப்போது அவர் இந்து வாரிசுகள் சட்டத்தைத் திருத்த வேண்டும் என்று முன்மொழிந்தார். அதைத் தொடர்ந்து எதிர்ப்பு வந்ததால் அவரது கோரிக்கை கைவிடப்பட்டது. ஹரியானா மற்றும் பஞ்சாப், ராஜஸ்தான் உள்ளிட்ட 5 வேறு மாநிலங்களில் கப் பஞ்சாயத்துக்கள் பலமாக இருக்கின்றன. அவை, பெண்களுக்கு அவர்களின் தாய், தந்தையர்

## திருமணத்தின் மீதான காப் பஞ்சாயத்துக்காரர்களின் கட்டுப்பாடுகள்

1. **ஒரே கோத்திரத்தில் திருமணம் கூடாது:**

   ஒரு கிராமத்தில் ஒரே கோத்திரத்திற்குள்ளே திருமணங்கள் நடப்பதை தடை செய்வதன் மூலம் கப் பஞ்சாயத்துக் காரர்கள் அந்தத் திருமணமானப் பெண்கள் அவர்களது தாய் தந்தையர் சொத்தின் மீது அவர்களுக்கு இருக்கிற வாரிசு உரிமைகளை அனுபவிக்காமல் இருப்பதை உறுதி செய்துகொள்கிறார்.

2. **சுகோதரத்துவத்திற்குள் கூடாது:**

   காப் பஞ்சாயத்துக்காரர்கள் அதன்பிறகு தங்களின் கட்டுப்பாடுகளை பக்கத்தில் உள்ள அநேக கிராமங்களுக்கும் நீட்டிக்கிறார்கள். அதற்காக இந்த கிராமங்கத்தின் பிள்ளைகளாக இருக்கிற ஆண்களும் பெண்களும் சகோதரர்கள் என்று அறிவிப்பதன் மூலம் அவர்களுக்கிடையிலே திருமண உறவுகள் நடப்பதைத் தடுக்கிறார்கள்.

3. **பெரும்பான்மை மற்றும் சிறுபான்மை கோத்திரங்களுக்கிடையே திருமணங்கள் கூடாது:**

   பெரும்பான்மை கோத்திரத்தைச் சேர்ந்த பெண்கள் சிறுபான்மை கோத்திரத்திற்குள்ளே திருமணம் செய்யக் கூடாது என்று கூறுவதன் மூலம் ஒரு கிராமத்தின் பெரும்பான்மையான நிலத்தை வைத்திருக்கிற பெரும்பான்மைக் கோத்திரத்தைச் சேர்ந்தவர்களின் நிலங்களை பாதுகாத்திட உதவுகிறார்கள்.




*Illustration - Karno Guhathakurta*

சொத்திலிருந்து, குறிப்பாக விவசாய நிலத்திலிருந்து சமமான வாரிசு உரிமைகளை, இந்து வாரிசுகள் சட்டம் 2005ல் திருத்தம் வரும் வரை வழங்க மறுத்தனர்.

2005 வரை கப் பஞ்சாயத்துக்காரர்கள் பெண்களுக்கு எதிராக வன்முறையான கட்டளைகளை பிறப்பிக்கவில்லை என்பது ஊடகச் செய்திகளைப் பார்த்தால் தெரிகிறது. சொத்தின் மதிப்பு மிக உயர்ந்து வருகிற காலக்கட்டமாக இது இருக்கிறது. நாட்டின் மிகப்பெரிய வீட்டுமனை சந்தையாகவும் இந்த இடம் மாறிவருகிறது என்று என்.சி.ஆர். கூறுகிறது. மும்பை, சென்னை, பெங்களூரு, கொல்கத்தா மற்றும் ஐதராபாத் எல்லா மாநிலங்களிலும் சேர்ந்து இருக்கிற குடியிருப்புகள் அளவைவிட அதிகமானவற்றை தற்போது இந்தப் பகுதி பெற்றுள்ளது. இந்து வாரிசுகள் சட்டத்திற்கு எதிரான கப் பஞ்சாயத்துக்காரர்களின் எதிர்ப்பு எடுபடவில்லை. தற்போது அவர்களுடைய கவனம் என்பது இந்து திருமண சட்டத்தின்மீது பாய்ந்திருக்கிறது. அதில் ஒரே கோத்திரத்திற்குள்ளே திருமணம் செய்யக்கூடாது என்று திருத்தத்தைக் கொண்டுவருவதன் மூலம் குடும்ப எல்லைக் குள்ளேயே நிலத்தை வைத்துக்கொள்வதற்கு அவர்கள் முயல்கிறார்கள்.

*For Private Circulation Only*

## பீகாரில் 2006 லிருந்து கொல்லப்பட்ட தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி தலைவர்கள் (முக்கியாக்கள்)




Source: downtoearth.org.in


வெளியீடு

**மனித உரிமை மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி அமைப்பு (HRF)**



எண்.10, எல்.டி.ஜி. ரோடு, சின்னமலை, சைதாப்பேட்டை, சென்னை – 600 015. இந்தியா

தொ.பே.044–22353503, தொ.நகல். 22355905,

மின்அஞ்சல் : humanrightsadvocacyandresearch@gmail.com

இணையதளம் : www.humanrightsadvocacyandresearchfoundation.org